# நான் கொக்கல்ல!
## (नाऽहं बलाका!)

(குறிச்சி ஸ்ரீ நாராயணன், சென்னை)

எல்லோருக்கும் தான் ஸௌக்யமாக இருக்க வேண்டும் என்கிற ஆசை இருப்பது இயற்கை. ஆனால் அதற்கான வழிதான் புரிவதில்லை. ஒன்றை உணர்ந்தால் மற்றவை எல்லாம் எளிதில் விளங்கும். அவரை விதை நட்டால் புடலையா காய்க்கும்? அவரைதானே கிடைக்கும். அதுபோல் நம் வினைகளுக்கு ஏற்றபடிதான் ஸுகமும், துக்கமும் வருகின்றன. அப்படி என்றால் ஸுகம் உண்டாக என்ன செய்ய வேண்டும்? என்று யோசித்தால், நல்லதைச் செய்தால் நன்மை விளையும் என ஊகிக்கலாம். எது நல்லது எனக் கேட்டால், எது நமது முன்னோர்களால் 'சரி' என்று ஏற்கப்பட்டதோ அதுவே நல்லதாகும். எதையும் ஆரம்பிக்கும் முன் நம் நிலையை உணர வேண்டும். முதலில் 'நான்' என்பதால் எதைக் குறிக்கிறோம் என ஆராய்ந்தால், நான் என்பது பலருக்கு உடலாகவும், சிலருக்கு ஆன்மாவாகவும் தெரிந்திருக்கும். நான் என்பது ஶரீரம்தான் என்று எண்ணினால், இந்த ஶரீரத்தின் பொருட்டே பலவித தவறுகளைச் செய்து மேலும் கஷ்டப்படுகிறோம்.

நம் உள்ளே இருக்கும் ஜீவாத்மாவையே நான் என்றறிபவர், இந்தச் சரீரம் போனாலும் ஜீவன் இருக்கும். அவன் அழிவற்றவன், செய்த புண்யபாபங்கள் தொடரும், அதற்கேற்ப புதுப்புது ஶரீரம் ஏற்பட்டு கர்மபலனை அநுபவிக்க நேரிடும். அதனால் ஶாஸ்த்ரங்களில் நமது நலன் கருதி கூறப்பட்டுள்ள கார்யங்களையே செய்யவேண்டும் என்று அறிந்து அதன்படி செய்ய ஆரம்பிக்கலாம். எதுவாயினும் ஶாஸ்த்ர ப்ரகாரம்தான் செய்யவேண்டும். நமக்குத் தோன்றியபடி செய்தால் கெடுதல்தான் வரும் என பகவான் கீதையில் கூறியுள்ளான்.

ஆனால் நாமோ அதிக அறிவு இல்லாமல் இருக்கிறோமே. எதைச் செய்தால் நல்லது எனக் கலங்காமல் இருப்பதற்காக இதிஹாஸ புராணங்களில் சிறு கதைகள் மூலம் விளக்கி உள்ளார்கள். அவற்றிலே கௌசிகன் என்ற அந்தணன் பற்றிய

கதை நமக்கு மிகவும் உபயோகமானது. இந்தக் கதையில் முக்யமான கருத்துக்கள் கூறப்பட்டுள்ளன.

கௌசிகன், என்ற அந்தணன் ஒரு சமயம் மரத்தடியில் தவம் புரிந்துகொண்டிருந்த போது, கொக்கு ஒன்று அவன் மீது எச்சமிட, அவன் நீக்கண்களால் அதைப் பார்க்க, அக்கொக்கு உடனே எரிந்து விழுந்தது. அதைக்கண்ட கௌசிகன் மனம் வருந்தினன்.

பின்பு கௌசிகன் ஆகாரசுத்திக்காக ஒரு வீட்டிற்குச் சென்று பிக்ஷை கேட்டான். உள்ளே இருந்த பெண்மணி, "இதோ வருகிறேன், இருக்கவும்" என்றாள். அச்சமயம் வெளியில் சென்றிருந்த அவளது கணவன் மிகவும் களைப்புடன் வந்தான். கணவனைத் தெய்வமாகப் போற்றும் அவள், அவனுக்கு அன்னமிட்டு, உபசரித்து அவன் அநுமதி பெற்று பின் கௌசிகனுக்காக பிக்ஷை எடுத்து வந்தாள். கௌசிகன் கோபத்துடன், "ஏன் இவ்வளவு தாமதம்? என்னை இருக்கும்படிச் சொல்லி, வேறு இடம் போகவொட்டாமல் செய்து, காக்க வைத்தது சரியா?" என்றான். அதற்கு அவள் "என் குற்றத்தைப் பொறுக்க வேண்டும். நீர் வந்த ஸமயத்தில் நான் தெய்வமாகப் பூஜிக்கும் என் கணவர் களைப்புடன் வந்ததால் அவரை உபசரித்து வருவதற்கு நேரமாகிவிட்டது" என்றாள்.

உடனே கௌசிகன் "ஓஹோ! உனக்குக் கணவன்தான் தெய்வமோ? ப்ராஹ்மணர்களை பூஜிக்கத்தக்கவர்களாக நீ நினைக்கவில்லையோ? ப்ராஹ்மணர்கள் நெருப்புக்கு ஒப்பானவர்கள். அவர்கள் அவமதிக்கப்பட்டால் பூமி முழுவதையும் எரிக்கும் சக்தி உள்ளவர்கள்" என்றான்.

அதற்கு அப்பெண்மணி, "நான் ஒன்றும் கொக்கல்ல நீர் எரிப்பதற்கு. நான் ஒருபோதும் ப்ராஹ்மணர்களை அவமதித்ததில்லை. அவர்களின் மஹிமையை உள்ளபடி அறிவேன். குற்றமற்ற நீர் என் தவறைப் பொறுக்க வேண்டும். எல்லா தெய்வங்களிலும் என் கணவரே எனக்கு உயர்ந்த தெய்வம். கணவனுக்குப் பணிவிடை செய்வதையே உயர்ந்த தர்மமாகக் கருதுகிறேன். அதன் பலனாகத்தான் நீர் கொக்கை எரித்ததை வீட்டினுள் இருக்கும் நான் அறிய முடிந்தது. மனிதர்களுக்குக் கோபம் உடம்பிலுள்ள விரோதி. நீர் கோபப்பட வேண்டாம். உம் கோபம் பதிவ்ரதையான என்னை

ஒன்றும் செய்யாது'' என்று சொல்லி ப்ராஹ்மணர்களின் லக்ஷணங்களைக் கூறினாள்

''ப்ராஹ்மணர் கோபத்தையும், மோஹத்தையும் விட்டு இருப்பர். உண்மையைப் பேசுவதிலும், ஆசார்யனை ஸந்தோஷப்படுத்துவதிலும் நோக்கு உடையவர். மற்றவர் துன்புறுத்தினாலும் அவர்களுக்குத் துன்பம் விளைவிக்காமல் இருப்பர். புலன்களை அடக்கி, தர்மத்தில் முக்கிய கவனம் உள்ளவராகவும், வேதம் ஓதுவதில் பற்றுள்ளவராகவும், மனது, வாக்கு, செயல் மூன்றிலும் ஒரே ப்ரகாரம் இருப்பர். நல்ல மனத்துடன், உலகம் முழுவதும் தனக்குச் ஸமமாக எண்ணுவர். தான் வேதத்தைக் கற்று பிறருக்கும் சொல்லி வைப்பர். அதுபோல் ஶக்திக்குத் தக்கபடி தானம் செய்து வருவர். ப்ரஹ்மசர்யமுறை யாவர், சொல்வன்மையுள்ளவராய், அலங்காரமற்று இருப்பவரை தேவர்கள் ப்ராஹ்மணனாக அறிகிறார்கள்''

क्रोधश्शत्रुश्शरीरस्थो मनुष्याणां द्विजोत्तम!।
मा स्म क्रुध्यो बलाकेव न वध्याऽस्मि पतिव्रता॥
यः क्रोधमोहौ त्यजति तं देवाः ब्राह्मणं विदुः।
यो वदेदिह सत्यानि गुरुं सन्तोषयेत च।
हिंसितश्च न हिंसेत तं देवाः ब्राह्मणं विदुः।
कामक्रोधौ वशौ यस्य तं देवाः ब्राह्मणं विदुः॥

''மேலும் தர்ம நுணுக்கங்களை அறிய விரும்பினால், மிதிலாபுரியில் இருக்கும் தர்மவ்யாதரை அண்டிக் கேட்கவும்'' என்றாள்.

இதைக் கேட்டு கௌஶிகன் அவளிடம் கோபப்படாமல், அவளுக்கு நன்றி கூறி, அவள் சொன்ன தர்மவ்யாதரிடம் மேலும் தர்மங்களைப் பற்றி அறிய விரும்பி மிதிலை நோக்கிச் சென்றான்.

குறிப்பு:- இந்தக் கதையால் நாம் அறிந்தது ஸ்த்ரீகளுக்கு பர்தா தான் உயர்ந்த தெய்வம் என்பதும், ப்ராஹ்மணர்கள் கோபப்படக்கூடாது என்பதுமாகும்.

॥ शुभमस्तु ॥

# புல்

(ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ பதாஶ்ரயா்)

பகவானின் விசித்ர ஸ்ருஷ்டிகளில் ஒன்றான புல்லை உலகம் அற்பமாக எண்ணும். ஏய், அற்பப் புல்லே என்பது கேட்டிருப்போம். ஆனால் பாருங்கள் புல்லிற்கும் எம்பெருமானுக்கும் நெருக்கமான ஸம்பந்தமுண்டு ! பகவானும் எளியவர்க்குத் தானே இரங்குவான்.

1 'तेन विना तृणमपि न चलति' (தேந விநா த்ருணமபி ந சலதி) (அவனின்றி அணுவும் அசையாது) நடந்தவைகளைச் சுருங்கச் சொல்லி நல்வழி காட்டும் மொழிகளே பழமொழிகள். தேவாஸுர யுத்தத்தில் தேவர்களுக்காக உதவி செய்து வெற்றியைப் பெற்றுத் தந்தான் பகவான். கார்யம் முடிந்தபின் மறப்பது என்ற வழக்கப்படி தேவர்கள் வெற்றிக் களிப்பில் பகவானது உதவியை மறந்ததுமின்றி, தங்கள் முயற்சியாலேயே வெற்றி அடைந்ததாகவும் கூறிக் கொண்டனர். தேவர்களின் இறுமாப்பை நீக்கித் திருத்திப் பணி கொள்ள நினைத்தான் பகவான். வேண்டியவர்களை நல்வார்த்தையாலும், எதிரிகளை வீரத்தாலும் வெல்பவன் அவன். ஓர் பூதமாய் இந்த்ரன் அரண்மனை வாயிலில் நின்று இந்த்ரனை அழைத்தான். ஸேவகர்கள் இந்த்ரனிடம் விஷயத்தைத் தெரிவித்தனர். அஹங்காரத்தால் அமரர்கோன் அக்நியை அனுப்பி வென்று வரப்பணித்தான். அக்நி, பூதத்தை ''நீ யார்'' என வினவ, பூதம் பதிலுக்கு ''நீ யார்''. என்றது ''நான் எதையும் எரிக்கவல்ல அக்நி'' என்றான். ''ஓஹோ !! அப்படியானால் இந்தப் புல்லை எரி பார்க்கலாம்'' என உரைத்து அங்கு ஒரு சிறு புல்லைப் போட்டது. தீ எழுந்தும் புல் எரியவில்லை. புதிய தோல்வியால் வெட்கித் தலை குனிந்து திரும்பினான் அக்நி. பிறகு வாயுவும், வருணனும் வந்து, அக்நியைப் போல் வந்த வழியே வெம்பித் திரும்பினர். தேவேந்த்ரனே வந்தான். பூதம் மறைந்தது. இந்த்ரன் நிதாநமாக யோசித்தான். வந்திருந்தது ஸாக்ஷாத் பகவான்தான் என உணர்ந்தான். மன்னிப்பு வேண்டினான். இந்த்ரன் தேவர்களின் தலைவன். அவனையும் மற்றவரை வென்றது போல் செய்தால், பிறகு இந்த்ரனுக்கு அவனுலகில் மதிப்பிருக்காது. எனவேதான் பூதம் அவன் வந்ததும் மறைந்தது. ''உலகில் அவரவர் ஏதேதோ

செய்யப் போவதாக எண்ணுகிறார்கள், ஆனால் நான் நினைத்தபடிதான் யாவற்றையும் நடத்துகிறேன்'' என்று பகவான் கூறியுள்ளான்.

**2 வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம் — வநத்தில் ஸீதை** மடிமேல் உறங்குகிறான் ராமன். ஜயந்தன் மொய்த்த வல்வினையால் மதியிழந்து காகமாய் வந்து பிராட்டியைத் துன்புறுத்தினான். பிராட்டி திருமேனியிலிருந்து உதிரம் சிந்தி அதனால் விழித்த ராமன் ''யார் இப்படிச் செய்தது?'' எனக் கோபத்துடன் கேட்டுச் சுற்று முற்றும் பார்த்தான்.

அங்கு கறை படிந்த அலகினனான காகாஸுரனை ராமனே பார்த்துப் புல்லைப் பிடுங்கி மந்த்ரித்து ஏவினான். அப்புல்லும் ப்ரஹ்மாஸ்த்ரமாகித் துரத்தியது. தந்தையும், தாயும், தேவர்களும் முநிவர்களும் त्रातु न शक्या युधि रामवध्यम् (த்ராதும் ந ஶக்யா யுதி[4] ராமவத்[4]யம்) என உணர்ந்துக் கை விட்டு ரக்ஷித்தார்கள். तमेव शरणं गतः (தமேவ ஶரணம் க[3]த:)எனக் காகம் பெருமாளையே அண்டி உய்ந்தது. இங்கும் புல்.

ப்ரஸங்காத் ஒரு விசாரம். ''என்னை மனிதனாகவே எண்ணுகிறேன்'' என்று கூறிய ராமன் ஜடாயுவிற்கு எப்படி மோக்ஷம் அளித்தான் என முன்னம் ஒரு கேள்வியுண்டு. அது போலவே, இங்கு வீராதி வீரனாகப் பல இடங்களில் வர்ணிக்கப்பட்டு, உச்சாணியாக श्रीमान् सुखसुप्तः परन्तपः (ஸ்ரீமாந் ஸுக[2]ஸுப்த: பரந்தப:) எனத் தூங்கும் போதும் எதிரிகள் இவனைக் கண்டு அஞ்சுவர் எனக் கூறப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்டவன் ஸீதையின் மடியில் உறங்கக் காகாஸுரன் ஏன் பயப்படாமல் தவறு செய்தான் ? என்ற ஐயம் எழுகிறது. ஸமாதாநம் முயற்சிக்கிறேன். श्रीमान् सुखसुप्तः परन्तपः என்று கூறுவதே மட்டுமாக இருந்தால் நாளடைவில் இவ்வார்த்தை மீது நம்பிக்கை குறையும். **வேண்டிற்றெல்லாம் தரும் வள்ளல்** என்றால் மட்டுமே வள்ளல் தன்மை நிற்குமா ? யாசிப்பவர் வந்து பெற்றால்தானே பெயர் நிலைபெறும். இதைக் கருத்தில் கொண்டு தானே उदाराः सर्वे என யாசிப்பவர்களை உதாரர்களாக பகவானே கூறுகிறான். அதுபோலவே, ராமன் உறங்கிய போதும் எதிரிகளை அடக்கும் திறமை புல்லை எறிந்ததன் மூலமன்றோ ப்ரஸித்தமானது. வந்தது அற்பமான காகமாகையால் கயிலையைத்

தூக்கியவனும், இந்த்ரஜித் தந்தையுமாயிருக்கச் செய்தேயும், ராம, லக்ஷ்மணர்களிடமுள்ள பயத்தால் அவர்களைப் புறம் போகச் செய்து, கோழையாய், வேடமணிந்து ஸீதையை அபஹரித்தான் ராவணன். பெயரும் புகழும் உடையவனன்றோ பயப்படுவான்? ஒரு யோக்யதையும் இல்லாத காகம், இழக்க எதுவும் இல்லாததால் வந்தது எனக் கூறலாம்.

மேலும் ஓர் அநுபவம் - ஸமுத்ர ராஜன், ராவண யுத்தம் இக்கட்டங்களில் **क्षमया पृथिवीसम** (க்ஷமயா ப்ருதி²வீஸம)னாக வர்ணிக்கப்பட்டவனை **कोपं आहारयेत् तीव्रं** (கோபம் ஆஹாரயேத் தீவ்ரம்) என இல்லாத கோபத்தை ஏறிட்டுக் கொண்டதாகக் கூறப்பட்டுள்ளது. இங்கோ வில், அம்புகள் இல்லாமேலேயே (**चापमानय** என்றில்லாமல்) புல்லைப் பிடுங்கிச் சடாரென எறிந்ததால் நிஜ கோபம் எனத் தோன்றுகிறது.

3. மஹாபலி வாமநனுக்கு மூவடி தந்தேன் எனத் தாரை வார்க்கப் போக, ஶுக்ராசார்யர் வண்டாக மாறிக் கிண்டியின் த்வாரத்தை அடைத்துக் கொண்டார். அப்போது, சுக்ரன் **கண்ணைத் துரும்பால் கிளறிய** என்று பெரியாழ்வார் அநுபவித்த பாசுரப்படி வாமநன் பவித்ரத்தின் நுனியாலே கிளறிக் கண்ணழித்தான். இங்கும் புல். இன்னும் ஒரு விஶேஷம்- வாமந, ராமமாவதாரப் புல் கார்யங்கள் கண்ணை அழித்த ஒற்றுமையாகும்.

4. அஶோக வநத்தில் ஸீதையிடம் தகாத வார்த்தை பேசின ராவணனுக்கும் நல் வார்த்தை அருளப் பிராட்டி **तृणमन्तरतः कृत्वा** (த்ருணமந்தரத: க்ருத்வா) எனப் புல்லை நடுவிலே போட்டு அதைப் பார்த்தபடிபேசினளல்லவா!

5. ஸ்ரீ ந்ருஸிம்ஹாவதாரத்தில் ப்ரஹ்லாதனிடம் ஹிரண்யன் எங்கு உள்ளான் உன் ஹரி எனக் கேட்க பதிலில் தூணிலும் உள்ளான், துரும்பிலும் (புல்) உள்ளான் எனக் கூறினன்.

6. நர - நாராயணர்களில் நாராயணன் புல்லைக் கொண்டு டம்போத்பவன் என்ற மதமிகுந்த அரசனைக் கொன்றார்.

7. கற்பார் இராமபிரானையன்றி மற்றும் கற்பரோ புற்பா முதலாப் புல்லெறும்பாதி ஒன்றின்றியே நற்பாலுக்குய்த்தனன் என ஸ்வாமி நம்மாழ்வார் பாசுரத்திலும் புல்லையும் நற்கதி அடையச் செய்தார் என்று உள்ளதையும் காண்க.

॥ श्रीः ॥

# தாமரை

(குறிச்சி ஸ்ரீ.உ.வே. நாராயணன்)

*தாமரைப் புஷ்பம் பெருமாள், தாயாருடன்* எப்பொழுதும் சேர்ந்தே இருக்கிறது. *தாமரையும், தாமரை மணியும் பாகவதர்கள் உபயோகத்தில் காணப்படுகிறது.* வேதம், கீதை, இதிஹாஸம், *புராணங்கள்,* திவ்ய *ப்ரபந்தங்களில்* பகவானுடைய பெருமைகளைக் கூறும் இடங்களில் தாமரையும் குறிப்பிடப்படுகிறது. அப்படிப்பட்ட உயர்ந்த இடங்களில் சிலவற்றை அநுபவிப்போம்.

*1.* **ஆதிமூலமே :-** *கஜேந்த்ரன் திருமால் திருவடிகளில் புஷ்பம் ஸமர்ப்பிக்கத் தாமரைப் பொய்கையில் இறங்கியது. அப்பொழுது ஒரு முதலை கஜேந்த்ரன் காலைப் பிடித்துக் குளத்திற்குள் இழுத்தது. யானை முதலையைக் கரைக்கு இழுத்தது. இவ்வாறு ஆயிரம் திவ்ய வருஷங்கள் இப்போராட்டம் தொடர்ந்தது. முதலையின் பலம் ஜலத்தில் அதிகமானபடியால், இறுதியில் யானையை ஜலத்தில் முக்கால் வாசி இழுத்துச் சென்றுவிட்டது. அப்பொழுது கஜேந்த்ரன்* **'ஆதிமூலமே'** என்று ஸ்ரீமந்நாராயணனை அழைத்தது. **நாஹம் களேபரஸ்ய அஸ்ய த்ராணார்த்தம் மதுஸூதந ! கரஸ்த–கமலாந்யேவ பாதயோ: அர்ப்பிதும் வ்ருணே ॥** *(என் ஶரீரத்தைக் காப்பாற்றிக் கொள்ள நான் ஆசைப்படவில்லை. கையிலுள்ள மலரை உமது திருவடிகளில் ஸமர்ப்பிக்கவே ஆசைப்படுகிறேன்).* எனப் பரிதவித்த நிலையில் இருந்த *கஜேந்த்ரன், தன் தும்பிக்கையில் தாமரை மலரைக் கொண்டு,* **''ஆதி மூலமே''** என்று அலறி, ''உனக்கு இந்த மலரை அளிக்க முடியாமல் இருக்கிறேனே'' என்று விண்ணப்பம் செய்தது. இக்கூக்குரலைக் கேட்ட பரமஶிவன், நான்முகன், இந்த்ரன் உள்ளிட்ட எல்லா தேவதைகளும் **நாஹம் நாஹம் ந சாஹம்** *(நான் ஆதிமூலம் - ஜகத்காரணமில்லை)* என்று ஒவ்வொருவரும் வாயிற் கதவைத் தாளிட்டு உள்ளே கிடந்தனர். உலகங்கள் *யாவற்றுக்கும் மூல காரணனான ஸ்ரீமந் நாராயணன்* **அஹமேவ பரதத்வம்** – *நாமே ஜகத் காரணம் என்று கருடன் மீது புறப்பட்டார்.* **அபயம் ஸர்வபூதேப்யோ ததாமி ஏதத் வ்ரதம் மம**

(என்னிடம் ஶரணம் என ஒரு முறை கூறினால் நான் பயமின்மையை அளிக்கிறேன்) என்று பகவான் அருளிச் செய்திருப்பதால் ஶரணமாக அடைந்த கஜேந்த்ரனை ரக்ஷிப்பதற்கு பகவான் மிகுந்த வேகத்துடன் புறப்பட்டார். **காரணம் து த்யேய:** (ஜகத்காரணம் யாரோ அவரையே முக்திக்காகப் பற்ற வேண்டும்) என்று இருப்பதால் ஜகத்காரணனை அழைத்ததாகத் தெரிகிறது. நாராயண உபநிஷத் ''ப்ரளய காலத்தில் பரமஶிவன், நான்முகன் மற்றும் ஒருவரும் இல்லே. நாராயணன் ஒருவனே இருந்தான்'' எனக் கூறுகிறது. கருடனின் வேகம் பகவானுக்குப் போதாததால் **ஆகர்ஷன் த்விஜராஜமபி அதிஜவாத் ஹா ஹந்த லோகாந்தராத்** என்று கருடனை இழுத்துக் கொண்டு கஜேந்த்ரன் இருப்பிடம் வந்து ரக்ஷித்தான். இருந்த இடத்திலிருந்தே பகவானல் முதலையைக் கொன்றிருக்க முடியும். ஆகிலும் கஜேந்த்ர ஆழ்வான் ஸமர்ப்பிக்கும் புஷ்பத்தை நேரில் பெற்றுக் கொள்ளவே அவ்விடத்திற்கு வந்தான் எனத்தெரிகிறது. கீதாபாஷ்யத்திலும் ஸாதுபரித்ராணார்த்தம் (பக்தர்களைக் காப்பதற்காக) அவதரிக்கிறுன் என்றல்லவோ அருளிச் செய்திருக்கிறார். மற்றும் பகவத் விஷய வ்யாக்யாதாக்கள் உரையில் அருளிச் செய்துள்ள ரஸகநமான ஒரு விஷயத்தை மேலே எழுதுகிறோம். கருடனை இழுத்துக் கொண்டு வந்த வேகத்திலேயே சக்ராயுதத்தால் முதலையை அடித்துக் கொல்லாமல் நிதானமாக (கவனமாக) யானையின் காலுக்கு பாதகம் ஏற்படாவண்ணம் முதலையைக் கொன்றுன். பின்பு, அதன் வாயிலிருந்து யானையின் காலைத் தன் திருக்கரங்களால் எடுத்துவிட்டான். முதலையின் பற்களால் புண்ணாகி இருந்த யானையின் காலுக்குத் தன் பீதாம்பரத்தை வாயில் வைத்து ஊதி ஒத்தடம் கொடுத்து, வலியை நீக்கினான். குழந்தையின் கண்ணில் அடிப்பட்டால் தன் வஸ்த்ரத்தின் தலைப்பை வாயில் வைத்து ஊதி ஹிதமான சூட்டில் பெற்றோர் ஒத்தடம் கொடுப்பது போல பகவான் செய்தான் என்று அருளியுள்ளார்கள். மற்றொரு ஸமயம் குசேலரின் பாதங்களுக்குப் பூஜை செய்து தன் பீதாம்பரத்தால் துடைத்து, பக்தர்கள் மீது தனக்குள்ள அன்பை வெளிக்காட்டினான்.

இந்த கஜேந்த்ரமோக்ஷ கதை தினமும் காலை எழுந்ததும் அநுஸந்திக்க வேண்டும் எனப் பூர்வாசார்யர்கள் அருளிச் செய்துள்ளார்கள். பரதேவதை யார் ? எனத் தெரிந்தால்தான் தேவதாந்தர ஸம்பந்தம் நீங்கும். அப்படி உள்ளவருக்கே இடைவெளி இன்றி மோக்ஷம் கிடைக்கும். இக்கதை ஸ்ரீமந் நாராயணனே பரதேவதை என்பதை ஸ்பஷ்டமாகத் தெரிவிக்கிறது. தாமரைப்பூ இதில் முக்ய கட்டத்தில் வருகிறது.

(2) **குருவைச் சீடராக்கிய உத்தமர் :-** ஸ்ரீமத் ராமாநுஜர் பூர்வபக்ஷ நூல்களைத் தெரிந்து கொள்வதற்காக யாதவப்ரகாஶர் என்பவரிடம் படித்தார். ஒருநாள் **கப்யாஸம் புண்டரீகமிவ அக்ஷிணீ** என்கிற உபநிஷத் வாக்யத்திற்கு யாதவப்ரகாஶர் அர்த்தம் சொல்கையில், குரங்கின் பின்புறம் போல் சிவந்த கண்களை உடையவன் பெருமாள் என்றார். தாழ்ந்த வஸ்துவுடன் ஒப்பிட்டுக் கூறியதைப் பொறுக்காமல் வருந்திய ஸ்ரீ ராமாநுஜர் கண்களில் நீர் மல்க யாதவப்ரகாஶர் சொன்னதை ஏற்றுக் கொள்ளவில்லை. யாதவப்ரகாஶரும் கோபமுற்று ''உனக்கு வேறு விதம் தெரிந்தால் சொல்லேன்'' என்றார். ஸ்ரீ பாஷ்யகாரரும் உடனே **கம்பீராம்பஸ் ஸமுத்பூத ஸும்ருஷ்டநாள ரவிகர விகஸித புண்டரீகதள அமல ஆயதேக்ஷண:** (நீர் நிறைந்த தடாகத்தில் உண்டானதாய் மிகவும் பருத்ததான தாமரைத் தண்டில் இருப்பதாய், ஸூர்ய கிரணத்தால் மலர்ந்ததான **செந்தாமரையின்** இதழைப் போன்ற விஶாலமான கண்களை உடையவன்) என்று யாதவ ப்ரகாஶரும் ஏற்றுக் கொள்ளக் கூடியதான பொருத்தமான அர்த்தத்தை ஸாதித்தார். யாதவப்ரகாஶர் கோபமுற்று எம்பெருமானாருக்கு தீங்கு செய்ய முயன்ற போது அத்திகிரிப் பெருமாள் தாயாருடன் வந்து உடையவரைக் காப்பாற்றி வைணவ உலகுக்குத் தலைவராக்கினார். பின்பு யாதவப்ரகாஶரும் தன் தாயின் உபதேஶப்படி ஸ்ரீமத் ராமாநுஜருக்கு ஶிஷ்யரானார் ! இந்த நிகழ்ச்சி எம்பெருமானாரின் திவ்ய சரிதத்தில் ஒரு முக்யத் திருப்பு முனையாகும். இங்கு, புண்டரீகாக்ஷன் தன் கண்ணழகை ஸ்ரீ பாஷ்யகாரர் மூலம் நன்கு வர்ணிக்கப் பெற்று மகிழ்ந்த அரவிந்தலோசநன் ராமாநுஜ தர்ஶநத்தை அருளினான்.

(3) ''**மறந்தும் புறந்தொழாமை**'' :- பகவானைத் தவிர வேறு தேவதா பூஜை கூடாது என்பதைத் தெரிவிக்கும் தாமரைக் கிழங்கு குறித்து வரும் ஒரு கதை கேட்பீர்—

புஷ்கர க்ஷேத்ரத்தில் ஸப்தர்ஷிகள் இருந்தனர். ஒரு ஸமயம் மிகுந்த பஞ்சம் ஏற்பட்டது. ருஷிகள் புஷ்கரிணியில் உள்ள தாமரைக் கிழங்குகளை ஆஹாரமாகக் கொண்டு ஜீவித்திருந்தார்கள். அந்த ஸமயம் ருஷிகளிடம் மிகவும் ரஹஸ்யமான அர்த்தங்களைத் தெரிந்து கொள்வதற்காக இந்த்ரன், வயதான ஓர் அந்தண வேடத்தில் வந்து தனக்குப் பசிக்கிறது, ஆஹாரம் வேண்டும் என ருஷிகளிடம் கேட்டான். அவர்களும் ''நாங்கள் மாத்யாஹ்நிக அநுஷ்டாநங்களைச் செய்து வந்து இங்குள்ள தாமரைக் கிழங்குகளை பகவானுக்கு அமுது செய்வித்த பின்பு பகிர்ந்து உண்ணலாம்'' எனக் கூறிச் சென்றனர். அவர்கள் போனதும் இந்த்ரன் தாமரைக் கிழங்குகளை பூமியில் ஒளித்து விட்டான். ருஷிகள் திருவாராதநத்தில் போஜ்யாஸந ஸமயத்தில் தாமரைக் கிழங்குகளைக் காணாமல் கோபமடைந்து, திருடியவனை ஶபித்தனர். எப்படி ஶபித்தனர் என்பதுதான் முக்யமாக அறிந்து நினைவில் கொள்ள வேண்டிய ரஹஸ்ய அர்த்தம். ''தாமரைக் கிழங்கைத் திருடியவன், எல்லா உலகங்களையும் உண்டாக்கி, காத்து - ஸம்ஹாரம் செய்பவனும், எல்லோரையும் ஏவுமவனும், தனக்கு ஒப்பாரும் மேம்பட்டவரும் இல்லாதவனும், லோக குருவான **விஷ்ணுவை விட்டு** மற்ற **தேவதைகளை வழிபடட்டும்** என்றனர். ஆக, மற்ற தேவதைகளை வழிபட்டால் பிறப்பு - இறப்பு எனும் சுழலில் இருந்து மீள முடியாது என இந்த முநிவர்களின் ஶாபம் மூலம் தெரிய வருகிறது. (கைஶிக புராணத்தில் நம்பாடுவானும் இத்தகைய ஶபதம் செய்கிறான். அதாவது - ''எவன் ஶ்ரீமந் நாராயணனுக்கு ஸமமாக மற்ற தேவதைகளை எண்ணுகிறார்களோ அவர்கள் அடையும் பாபத்தை மீண்டும் வராவிடில் நான் அடையக் கடவது'' என்பதாகும்.) இக்கதையில் மூலத் தொடர்பில் வருவது தாமரைக் கிழங்கு !

**(4) தாமரை இலை :—** ஶரணாகதி செய்த பின்பு தெரியாமல் செய்யும் பாபம் ஒட்டாது என்பதை **தத் யதா புஷ்கரபலாஶ**

ஆபோ ந ஶ்லிஷ்யந்தே (தாமரை இலையிலுள்ள ஜலம் அந்த இலையில் எப்படி ஒட்டுவதில்லையோ அதுபோல) என வேதம் தாமரை இலையைக் காட்டுகிறது. கீதையில் கூறும்போது, "கர்மாவினால் இந்த்ரியங்களாகப் பரிணமித்துள்ள ப்ரக்ருதியில் கர்மாக்களை வைத்து, பலனில் ஆசையற்று எவன் கர்மாக்களைச் செய்கிறானோ அவனைப் பாபம் ஒட்டாது" என்பதை பத்மபத்ரமிவாம்பஸா (கீதை 5–10) தாமரை இலை நீரில் சேர்ந்திருந்த போதிலும், எப்படி நீரினால் ஒட்டப்படுகிறதில்லையோ அதுபோல் என தாமரை இலை கூறப்பட்டுள்ளது. தாமரை மணி மாலை குளிர்த்தி. திருவாராதந ஸமயத்தில் அணிவது வழக்கம். ஆராதநத்தில் பூதஶுத்தி செய்யும்போது தாமரைப் புஷ்பத்தை தலைக்கு மேல் த்யாநிக்கும்படிச் சொல்லப்பட்டுள்ளது. ஹ்ருதய புண்டரீகத்தில் – தாமரை மலரில் பகவான் எழுந்தருளியுள்ளான் என வேதம் கூறுகிறது. யாக அக்நிக்கு ஸாதநமான ஏழு ஸமித்துக்களில் தாமரை இதழும் ஒன்று.

(5) பகவான் முதலில் தன் நாபீ கமலத்தில் சதுர்முகனை ஸ்ருஷ்டித்தார். ஆழ்வார்கள், பகவான் கண்களையும், திருவடிகளையும் அப்பொழுதைத் தாமரைப்பூக்கண் பாதம் கை கமலம், அனைத்துலகும் உடைய அரவிந்தலோசநனை என தாமரையாக வர்ணிப்பார்கள். மஹாலக்ஷ்மி தாமரையில் வஸிப்பவள். தாயாரை ஆழ்வார்கள் வேரி மாறாத பூமேல் இருப்பாள் வினை தீர்க்கும், நின் திருவருளும் பங்கயத்தாள் திருவருளும் கொண்டு என்று பாடி மகிழ்வர்.

இவ்விதமாகத் தாமரையின் மஹிமையை அநுபவித்து ஆநந்தப்படுவோம்.

॥ शुभम् ॥

|| श्रीः ||

# போஜநம்

(குரிச்சி ஸ்ரீ.உ.வே. நாராயணன், தூத்துக்குடி)

தேவர்களுக்கு அமுதம் போன்று மனிதர்களுக்கு அந்நம் மிக போக்யமானது. அந்நம் தான் ப்ராணன். அதுவே அதிகமானாலோ அல்லது சரியில்லாவிடிலோ விஷமாகிறது. அந்நத்தை நிந்திக்கக் கூடாது. தூய்மையான ஆஹாரமே மனதை ஶுத்தமாக வைக்க உதவுகிறது. இதனால் மனதை ஒருமுகப்படுத்த முடியும் (கீதை 3-9, 3-14). அந்நத்திற்குத் தூய்மை ந்யாயமாக ஈட்டிய பொருளாலும் பகவானுக்கு நிவேதநம் செய்வதாலும் உண்டாகிறது. சரியான முறையில் சாப்பிட்டால், அக்நிஹோத்ரம் செய்த பலன் உண்டு என ஶாஸ்த்ரம் கூறுகிறது. இனி போஜநம் பற்றிய சில சுவையான கதைகளை அநுபவிப்போம் —

**(1) ஒருவன் உண்ண மற்றவர் வயிறு நிறைந்தது —**

சூதாடித் தோற்று வநவாஸத்தில் உள்ள பாண்டவர்கள் கூடவே வந்த அந்தணர் முதலியவர்களுக்கு உணவு இடுவதற்காக ஸூர்யன் அக்ஷயபாத்ரம் தந்திருந்தான். அது ஒரு நாளைக்கு ஒரு முறையே உணவளிக்கும். அன்று முடிந்து விட்ட ஸமயம், துர்யோதநன் பாண்டவர்க்குத் தீங்கிழைக்க மிகவும் கோபிஷ்டரான துர்வாஸ முநிவரை அனுப்பினான். முநிவருக்குத் தர்மர் உபசாரம் செய்து அமுது செய்ய வேண்டினார். நீராடி வருவதாகச் சென்றார் துர்வாஸர். விஷயமறிந்த த்ரௌபதி இன்று இனி அக்ஷயபாத்ரம் உணவளிக்காதே என பயமுற்றுத் தெரிவித்தாள். அனைவரும் கலங்கினர். த்ரௌபதி க்ருஷ்ணனை நினைத்தாள். (கஷ்டத்தில் பகவானைக் கெட்டியாகப் பிடித்துக் கொள்ள வேண்டியதைப் பாண்டவர் அடிக்கடி உணர்த்துவர்.) கண்ணபிரான் வந்தார். அக்ஷயபாத்ரத்தில் ஒட்டியிருக்கும் சிறு கீரையை எடுத்து வரச் சொன்னார். பிறகு அதை உண்டார். அவ்வளவுதான் ! நீராட்டத்தில் இருந்த முநிவரும் ஶிஷ்யர்களும் வயிறு வீங்கி மூச்சுத் திணறினர். கண்ணன் சொன்னதன் பேரில் தர்மர் அவர்களிடம் சென்று உணவருந்த அழைத்தார். சாப்பாடு என்ற

சொல் கேட்டதும் பயந்து ஓட்டம் பிடித்தனர். கண்ணன் ஏன் சிறு கீரையை உண்டு பின்பே முநிவர் வயிறு நிரம்பச் செய்தான் ? அதையும் உண்ணாமலே செய்திருக்கலாமே ! இங்குதான் ப்ரபத்தி - ஶரணாகதியைக் கோடிட்டுக் காட்டுகிறான். உலகில் யாவரும் எனக்குப் பொதுவே. ஆகவே ஶரணாகதி என்ற மிக ஸுலபமான ஒரு வ்யாஜத்தைக் கொண்டுதான் ரக்ஷிக்க முடியும் என்பதைச் சொல்லாமல் சொல்லியுள்ளான்.

**2. வைஷ்ணவக்கீரை:** – ஆளவந்தார் ஆக்கியாழ்வான் என்ற அரசவைப் பண்டிதரைப் போட்டியில் வென்று பாதி ராஜ்யத்தைப் பெற்று ஆண்டு வந்தார். போட்டி விஷயம் சுவையானது. ஆளவந்தார் சொல்வதை ஆக்கி ஆழ்வான் இல்லை என ஸாதிக்கவேணும். ஆளவந்தார் ஆக்கி ஆழ்வானிடம் சொன்னதாவது - (1) உன் தாயார் மலடி அன்று, (2) இந்த அரசன் சக்ரவர்த்தி, (3) இந்த ராணி பதிவ்ரதை. இதை இல்லை என்று சொல்ல முடியாது. சொன்னாலோ அரசன் கோபமடைவான். ஆக்கி ஆழ்வான் தோல்வியை ஒப்புக் கொண்டு ஆளவந்தாரை விளக்கம் கேட்டார். முதலில் சொன்னதற்கு - அதாவது ஒரு குலை இடுவதால் வாழையும், ஒரு குஞ்சிடுவதால் காகமும், மலடி என உலகில் **காகவந்த்யா கதளீ வந்த்யா** (மலடி) என்பதுண்டு. ஆக்கியாழ்வான் அவர் தாய்க்கு ஒரே குழந்தையானதால் அவர் தாயாரை மலடி என்னலாம். (2) நான்கு ஸமுத்ரங்கள் சூழ்ந்த பூமியை ஆள்பவரே சக்ரவர்த்தி. இவ்வரசன் சோழ தேஶத்தை மட்டும் ஆள்வதால் அரசனே தவிர ஸார்வபௌமனல்ல. (3) விவாஹத்தில் மணப்பெண்ணை முதலில் ஸோமன், கந்தர்வன், அக்நி முதலியவர் அபிமாநிக்கும் மந்த்ரத்தைச் சொல்லி, நான்காவதாகவே அரசன் ராணியை மணந்ததால் ராணி பதிவ்ரதை அல்ல என்னலாம் எனச் சாதுர்யமாக மனம் புண் படாதவாறு விளக்கினார். அதனால் பாதி ராஜ்யத்தைப் பெற்று அரசாண்டு வந்தார் ஆளவந்தார்.

பின்பு நாதமுநிகளின் பேரனாகிய ஆளவந்தாருக்கு உபதேஶம் செய்ய விரும்பிய மணக்கால் நம்பி என்கிற ஸ்ரீ ராமமிஶ்ரர் ''தூதுவளைக் கீரையை'' ஆளவந்தார் அரண்மனை மடைப்பள்ளியில் திநமும் கொடுத்து வந்தார்.

3 நாட்கள் வரவில்லை. தூதுவளைக் கீரையை மிகவும் விரும்பும் ஆளவந்தார் விசாரிக்க, பரிசாரகர்கள் மூலம் மணக்கால் நம்பியை ஸேவித்து 'உமக்கு என்ன வேண்டும்' என்றார். அவரோ உம் மூதாதையர் என்னிடம் ஒப்படைத்த பொக்கிஷத்தை உமக்குத் தரவே வந்துள்ளேன் எனக் கூறி ஸ்ரீமத் பகவத் கீதையை உபதேசிக்க, ஆளவந்தார் இவ்வளவு நாள் வீணாகி விட்டதே என வருந்தினார். ஆளவந்தாரைத் திருவரங்கம் அழைத்துச் சென்று அழகிய மணவாளனின் ஸேவை செய்து வைத்து ஆளவந்தாரிடம் இதுவே நான் சொன்ன உங்கள் பெரியவர்கள் ஸம்பாதித்து வைத்த தநம் என்றார். பிறகு ஆளவந்தாரும் துறவு பூண்டு வைஷ்ணவ உலகுக்குத் தலைவரானார். இப்படி ஆளவந்தாரை நமளக்களித்த தூதுவளையை வைஷ்ணவக் கீரை என்பது பொருத்தம் தானே!

*(3)* **வநபோஜநம்** - கண்ணன் இடையர்களோடு மாடு மேய்த்து நடுப்பகலில் அவர்களுடன் உண்பான். எல்லோரும் வட்டமாய் அமர்வர். அவரவர் கொண்டு வந்ததைப் பகிர்ந்து உண்பர். விரல் இடுக்குகளில் ஊறுகாய் வைத்துக் கொண்டு அந்நத்தை அள்ளிச் சாப்பிடுவர். இதில் வியப்பு என்ன எனில் - கண்ணன் உலகுக்கு எல்லாம் தலைவரான போதும் மற்றவரிடம் 'என்ன கொண்டு வந்தாய்' எனக் கேட்டு அவர்கள் கையில் உள்ளதைக் கேட்டு வாங்கி உண்பான். இப்படிப்பட்ட எளியனான க்ருஷ்ணனை இரவும் பகலும் இடைவிடாது சிந்தியுங்கள், உங்கள் துயரங்கள் ஓடி விடும் என்கிறார் நம்மாழ்வார்.

*(4)* **பானை பிடித்தவள் பாக்யவதி** - மற்றொரு ஸமயம் நண்பர்கள் பசி தீர்க்க அருகிலுள்ள க்ராமத்தில் தன் பெயரைச் சொல்லி உணவு வாங்கி வர அனுப்பினான் கண்ணன். வேள்விப் புகையினால் கண்கள் மட்டுமின்றி மனதும் மூடப்பட்ட ஆண்கள் விரட்டி அடித்து, நெருப்பில் பகவானை எண்ணி ஆஹுதி செய்தனர். தெய்வம் நேரில் வந்தும் அறிய முடியாத பெரும் பாபம் அவர்களுக்கு. மறுமுறை இடையர் வந்து பெண்மணிகளிடம் கண்ணன் பசிக்காக உணவு வாங்கி வரச் சொன்னான் என்றனர். அவர்களோ மிகவும் ஆநந்தம் அடைந்து எந்தக் கண்ணனை நினைத்து திநம் உலை

வைக்கிறோமோ அவனே கேட்டானா எனத் தாங்களே உணவுடன் புறப்பட்டனர். ஆண்கள் தடுத்தும் நிற்கவில்லை. கண்ணனை ஸேவித்து, உணவளித்துப் பரவஶ நிலையில் இருந்தனர்.

க்ருஷ்ணன் அவர்களைப் பர்த்தாவிடம் புறப்பட்டுச் செல்லச் சொன்னான். அவர்களால் கண்ணனை விட்டுப் பிரிய முடியவில்லை, போனாலும் பர்த்தாக்கள் அடிப்பார்களே என்றனர். கவலைப்படாமல் போய் வரச் சொல்லி மறைந்தான் க்ருஷ்ணன். 'சேர்ந்தே இருந்தால் அன்பு குறையும்' என்பதை உணர்த்தினன். பெண்டிர் பயத்துடன் ஊர் திரும்பினர். ஆஶ்சர்யம் ! ஆண்கள் பூர்ண கும்பங்களுடன் வரவேற்று நீங்களே பாக்யவதிகள், நாங்கள் பகவானை தர்ஶிக்கக் கொடுத்து வைக்கவில்லை என்றனர். பகவத் ஸங்கல்பத்தினுல்தான் யாவும் நடக்கும் என உபநிஷத் கூறுகிறது.

*(5)* **வயிறு படுத்தும் பாடு** *: - உஷஸ்தி என்ற மாமுநிவர் தன் ஊரில் பஞ்சத்தால் வெளியூர் சென்றார். பசி தாங்கவில்லை. யானைப் பாகன் தின்று கொண்டிருந்த கொள்ளை வாங்கிச் சாப்பிட்டார். பின்பு அவன் அளித்த நீரை உச்சிஷ்டம் ஆகவே வேண்டாம் என மறுத்தார். கொள் மட்டும் உச்சிஷ்டம் இல்லையோ என்ற பாகனிடம், உயிர் போகும் நிலையில் இருந்ததால் கொள் சாப்பிட்டது தோஷமாகாது. உயிர் நின்ற பின்பு உன் நீரைப் பருகுவது தவறு - பாபமாகும் என்றார். மறுநாள் மீண்டும் பசி. பத்நி முன் தினத்துக் கொள்ளின் மீதியை முடிந்து வைத்திருந்தாள். முநிவர் அதை உண்டு உயிர் காத்து அரசனிடம் சென்று யாகம் செய்வித்து தக்ஷிணை பெற்றார். மஹர்ஷியே உயிர்போகும் நிலை தவிர மற்றபடி வரம்பு மீறிச் சாப்பிடவில்லை என்பதனுல் ஸாமாந்யர்கள் நிஷித்த வரம்பு மீறி போஜநம் செய்யக் கூடாது என்பது சொல்லவும் வேண்டுமோ ? அப்படி நேர்ந்தால் பரிஹாரம் செய்து கொள்ள வேணும். இங்கு ஒரு தமிழ்ப்பாட்டு —*

**ஒரு நாள் உணவை ஒழியென்ருல் ஒழியாய்,**
**இரு நாளைக்கு ஏல் என்ருல் ஏலாய்,**
**ஒரு நாளும் எந்நோய் அறியாய் இடும்பைக்**
**கூர் என் வயிறே ! உன்னோடு வாழ்தலரிது.**

(ஒரு நாள் உணவு இல்லை எனில் விடமாட்டாய். இரு நாளைக்குச் சேர்த்துச் சாப்பிடு என்றாலும் ஒப்புக் கொள்ள மாட்டாய். வயிறே ! உன்னுடன் வாழ்வது அரிது) என்பதாகும்.

(6) எண்ணத்தில் செல்வந்தர் :- ஸுதாமா என்கிற குசேலர் கிழிந்த துணியில் அவலுடன் கண்ணனைக் காணப் புறப்பட்டார். ஏழையானாலும் யாரிடமும் யாசிக்காதவர். மனைவி ஸுசீலா கண்ணன் ஸேவை என்றதனால் கிளம்பினார். உணவு உண்டு பல நாளாயிருந்தது. சிறிது தூரம் நடந்ததும் மூர்ச்சித்தார். கண்ணன் கருடன் மூலம் அவரை த்வாரகைக்குக் கொண்டு வந்தார். நாம் பகவானுக்காக 10 அடி நடந்தால் அவன் நமக்காக 100 அடி நடப்பான். ''அணுகில் அணுகும்''. மெலிந்த மேனி, குழி விழுந்த கண்கள், கிழிந்த உடை. ஏவலர்கள் உள்ளே விடவில்லை. விஷயமறிந்து கண்ணன் குதித்து வந்து அணைத்து அழைத்துச் சென்றான். பாதபூஜை செய்தான். பால்யத்தில் ஸுதாமா விளையாட்டில் தோற்றுக் கண்ணனைத் தோளில் சுமந்தார். அதன் பாக்யம் இன்று பலனளித்தது. மதனி என்ன அனுப்பி உள்ளார்கள் ? என்றான். வரட்டு அவலைக் காட்ட வெட்கம் குசேலருக்கு. பகவான் எட்டிப் பிடித்து இது என்ன என்கிறான். ஸ்வயம் ஜஹார கிமிதமிதி ப்ருதக் தண்டுலான். பால்யத்தில் கண்ணனுக்குத் தராமல் உண்டார் போலும் ஸுதாமா. ஆகவே வறுமை. இன்று எல்லா உயிரினுள்ளும் உள்ளவன் உண்டதால் இவரது ப்ராரப்தம் போயிற்று. ''ஸ்ரீ க்ஷய:'' (தரித்ரம்) என்ற தலை எழுத்தை மாற்றி ''யக்ஷ ஸ்ரீ:'' குபேரனை விட ஐஶ்வர்யமுடையவன் என எழுதினான் கண்ணன் . ஊர் திரும்பினார் குசேலர். இவர் திருமாளிகை மட்டுமின்றி ஊரே லக்ஷ்மீ கடாக்ஷம் பெற்று வனப்புடன் இருந்தது.

(7) சாவி கொடுத்த சாப்பாடு:- ஸ்ரீரங்கத்தில் திருவரங்கத்தமுதனார் என்பவர் ஸ்ரீ ராமாநுஜரை அண்டி, அவர் நியமநப்படி ஸ்ரீ கூரத்தாழ்வானிடம் ஸகல அர்த்தங்களையும் கேட்டார். அமுதனாரிடம் ஸ்ரீரங்கம் கோவில் அதிகாரமிருந்தது. கோவில் நடைமுறைகளை மேலும் செம்மையாக்கிட எண்ணினார் ஸ்ரீ ராமாநுஜர். அமுதனார் செய்த திருவத்யயநத்தில் ஸ்ரீ கூரத்தாழ்வான் நிமந்த்ரணம் இருந்தார்.

''த்ருப்தியா'' எனக் கேட்கும் ஸமயத்தில் 'கோவில் சாவி தந்தால் த்ருப்தி' என்றார் ஆழ்வான். அமுதனாரும் அப்போதே சாவியை ஸமர்ப்பித்தார். அமுதனார் ஸ்ரீ ராமாநுஜர் விஷயமாக இராமாநுச நூற்றந்தாதி இயற்றி அவர் முன் அரங்கேற்றி, ராமாநுஜரால் ஆழ்வார்களின் அருளிச் செயல்களோடு சேர்க்கப்பட்டது.

*(8)* **வயிறு குலுங்கச் சிரித்தவர்:—** ''ஒரு ஆசார்யன் ஶிஷ்யர்களை ஶோதிக்க அவர்களிடம் தலா ஒரு சொம்பையும் ஒரு பழத்தையும் கொடுத்தார். சொம்பை நன்றாக ஶுத்தப்படுத்த வேண்டும். பழத்தை யாருக்கும் தெரியாமல் சாப்பிட வேண்டும். என்றார். சிறிது நேரம் கழித்து ஶிஷ்யர்கள் வந்தனர். அவர்கள் சொம்புகள் பளபளத்தன. பழத்தை யாரும் பார்க்காமல் சாப்பிட்டதாகவும் தெரிவித்தனர். ஒரு ஶிஷ்யனின் சொம்பு வெளியில் அதிக பளபளப்பு இல்லை. பழத்தையும் சாப்பிடவில்லை. ஏன் என்றார் குரு. சொம்பு வெளிப்புறத்தை விட உட்புறம் மற்றவரைக் காட்டிலும் ஶுத்தமாக இருந்தது. எங்கும் நிறைந்த பகவான் எப்போதும் பார்த்துக் கொண்டிருக்கும் போது எப்படி அவனுக்குத் தெரியாமல் சாப்பிடுவது என்றான். இவனையே ஆசார்யன் கொண்டாடினார். ஆழ்வாரும் பகவான் தன் நெஞ்சினுள்ளே இருப்பதைக் கண்டு *(உணர்ந்து)* ''விலாவறச் சிரித்திட்டேனே'' என்றார்.

9 **விருந்தோம்பல் :** — நசிகேதஸ் *3* நாட்கள் யமன் வீட்டு வாசலில் இருந்தான். வெளியூரிலிருந்து திரும்பிய யமன் *3* நாட்கள் *(இரவு)* உம்மைப் பட்டினி போட்டு விட்டேனே என அநர்த்தத்திற்குப் பயந்து *3* வரங்களை அளித்து ப்ரம்ஹ வித்யையையும் உபதேஶித்தான். இரவில் வரும் விருந்தினர்க்கு அந்நம் இல்லை என்று சொல்லாமைக்காகக் கஷ்டப்பட்டாவது பகலில் பொருளை ஈட்டவும் என வேதம் உரைக்கிறது. **ஏக: ஸ்வாது ந புஞ்ஜீத** நல்ல பொருளைத் தனித்து உண்ணக் கூடாது, பல பேருடன் பகிர்ந்து உண்ண வேண்டும்.

॥ शुभम् ॥

॥ ஸ்ரீ: ॥

# ஸ்வயம்வரம்

(குறிச்சி ஸ்ரீ. உ.வே. நாராயணன்)

ஸ்ரீமானுன நாராயணனை அடைவது நம் கடமை. தத்வங்கள் மூன்று - அசேதநம் (அறிவற்றவை), சேதநன் (ஜீவாத்மா), பரமாத்மா. ஜீவாத்மாவும், பரமாத்மாவும் அறிவுள்ளவர்கள். அதில் ஜீவன் மூன்று வகை - நித்யஸூரிகள் என்று அழைக்கப்படும் அநந்தன், கருடன், விஷ்வக்ஸேநர் முதலிய பலர். இவர்கள் எப்பொழுதும் புண்ய பாப ஸம்பந்தம் இல்லாமல் ஸ்ரீ வைகுண்டத்தில் பகவானுக்குத் தொண்டு செய்து வருபவர். முக்தர் - முன்பு புண்ய பாப ஸம்பந்தத்துடன் இருந்து ஒரு கால கட்டத்தில் ஆசார்யன் மூலம் தக்க உபாயத்தை அநுஷ்டித்து ஸ்ரீ வைகுண்டத்தில் உள்ளவர். பத்தர் - புண்ய பாப கர்மாக்களால் கட்டுப்பட்டு ஸ்ரீ வைகுண்டம் தவிர மீதியுள்ள லோகங்களில் மீண்டும் மீண்டும் உழல்பவர். பகவானை பக்தியோகம் அல்லது ஶரணாகதி என்ற இரு வழிகளால் மட்டுமே அடைய முடியும். பக்தியோகம் செய்யக் கலிகாலத்தில் ஶக்தி, ஸாமர்த்யம், சூழ்நிலை இவை இல்லை. ஆகவே ஶரணாகதி என்கிற வழிதான் ஸுலபமானதாகவும், சிறந்ததாகவும் ஶாஸ்த்ரங்களில் கூறப்பட்டுள்ளது. மானிடராய் அதிலும் கர்மபூமியாகிய பாரத தேஶத்தில், அதிலும் ஆழ்வார் ஆசார்யர்கள் அவதரித்ததால் ஏற்றமிகுந்த தமிழ் நாட்டில், அதிலும் வைணவ குலத்தில் பிறந்தவர் யாவரும் தன் வாழ்க்கையின் முக்யக் குறிக்கோளாகக் கொள்ள வேண்டியது பரமபத ப்ராப்தி - ஸ்ரீ வைகுண்டம் சென்று ஸ்ரீமந் நாராயணனை அடைந்து அவனுக்குத் தொண்டு செய்வதே ஆகும்.

இங்கு பிறந்தவர்களில் பலர் எந்த தெய்வத்தை நாடுவது என்பது பற்றி மனதில் நிஶ்சயமாக முடிவு செய்ய முடியாமல் இருப்பவர்கள். நம்மாழ்வார் இப்படித் தெளிவில்லாத நிலையில் உள்ளவரைக் குறித்து ஒரு வழி காட்டியுள்ளார். அதாவது ஸ்வயம்வரம். முந்நாளில் பல நாட்டு அரசர்களையும்

வரவழைத்து அவர்களில் சிறந்தவரை அரசகுமாரியே தேர்ந்தெடுத்து மணப்பாள்.

ஒன்றெனப் பலவென அறிவரும் வடிவினுள் நின்ற
நன்றெழில் நாரணன் நான்முகன் அரன் என்னும் இவரை
ஒன்ற நும் மனத்து வைத்து உள்ளிநும் இரு பசையறுத்து
நன்றென நலம் செய்வது அவனிடை நம்முடை நாளே.

(திருவாய்மொழி 1-3-7)

ஜீவாத்மாவான நாமும் நம் நலனைக் கருதி எந்த தெய்வத்தைத் தேர்ந்து எடுப்பது எனில், மீதியுள்ள தெய்வங்களை நீக்கி, புகழ் பெற்ற மும்மூர்த்திகளாகச் சொல்லப்படும் நான்முகன் (ப்ரஹ்மா), ஸ்ரீமந் நாராயணன், பரமசிவன் இவர்களின் மேன்மைகளை ஆராய்ந்து உயர்ந்தவனை மட்டும் மனதில் வைத்து மற்றவர் தொடர்பை நீக்கி நன்மை பெறுங்கள் என்கிறார். நாமும் இம்மூவரை ஆராய்வோம். (இங்கு ஜீவன் இளவரசி, தோழி போல அவளுக்கு வழிகாட்டியாயிருப்பவர்.)

தோழி : முதலில் நான்முகனைப் பற்றிச் சொல்கிறேன், கேள். நான்முகன் எனப்படும் ப்ரஹ்மா, தாமரையில் விஷ்ணுவால் படைக்கப் பட்டவர். இவருக்கு வேதங்களைச் சொல்லிக் கொடுத்து உலகங்களை ஸ்ருஷ்டிக்க சக்தியையும் கொடுத்தவன் நாராயணனே. ஒரு ஸமயம் மது, கைடபர் என்ற அஸுரர்கள் வேதங்களை நான்முகனிடமிருந்து பறித்துச் சென்றனர். அப்பொழுது நாராயணன் ஸ்ரீ ஹயக்ரீவ அவதாரம் எடுத்து அஸுரர்களை வென்று வேதங்களை மீட்டு நான்முகனுக்கு உபதேசித்தான். ப்ரஹ்மா க்ருஷ்ண அவதாரத்தில் ஒரு ஸமயம், இடையர்களையும் பசுக்களையும் மறைத்தார். கண்ணன் அவைகளைப் போலவே வேறு ஸ்ருஷ்டி செய்தார். ப்ரஹ்மா தான் செய்த தவறுக்கு மன்னிப்பு வேண்டினார். ப்ரஹ்மாவின் ஒரு தலையைப் பரமசிவன் கிள்ளியெடுக்கும்படி பலமற்றவராக இருந்தார். தேவர்களுக்காகப் பாற்கடலில் பள்ளி கொண்ட பத்மநாபனைத் துதித்து வரம் பெற்றவர். ப்ரஹ்மோத்ஸவம் என்று கோவில்களில் செய்யப்படுவது இவர் ஆரம்பித்ததே.

ப்ரஹ்மா ஆயிரம் கோடி யுகங்கள், விஷ்ணுவை ஆராதித்து மீண்டும் ப்ரஹ்ம பட்டம் பெற்றவர்.

**இளவரசி :** நாம் தேர்வு செய்யக்கூடிய வகையில் இவரது மேன்மை இல்லை.

**தோழி :** அடுத்துப் பரமஶிவனைப் பற்றிச் சொல்கிறேன். இவரது அவஸரத்தால் இவரே அவஸ்தை அடைந்தது ப்ரஸித்தம். பஸ்மாஸுரன் என்பவனுக்கு வரமளித்தார். அவனோ பெற்ற வரம் உண்மைதானு என்று பரீக்ஷித்துப் பார்க்க ஶிவன் தலையிலேயே கை வைக்க வந்தபோது, ஶிவனும் ஓடியோடி, தட்டுத் தாவற்று அச்யுதனை வேண்டினர். பகவான் மோஹினியாக வந்து அவன் தலையிலேயே கையை வைத்துப் பரீக்ஷித்துப் பார்க்கச் செய்து, அஸுரனைக் கொன்று ஶிவனை மீட்டார். நான்முகன் தலையை ஶிவன் கிள்ளி எடுத்தார். அத்தலையோ இவர் கையிலேயே ஒட்டிக் கொள்ள கபாலி என்று பெயர் பெற்ற அவர் மிகவும் கஷ்டப்பட்டு ஸ்ரீமந் நாராயணன் அருளால் அத்துன்பத்திலிருந்து மீண்டார். எந்த தெய்வம் ஸாத்விகமானது என்பதை அறிந்து வர ப்ருகு முநிவர் உலகிலுள்ள மற்ற முநிவர்களால் அனுப்பப்பட்டார். அவரும் ஸத்யலோகத்திலும், கயிலையிலும் வரவேற்பு இல்லாததால் ப்ரஹ்மாவிற்கு பூலோகத்தில் கோவில் இல்லாமல் போகட்டும் என்றும், ஶிவனை லிங்க வடிவிலேயே (உருவமின்றி) பூஜை செய்யட்டும் என்றும் ஶபித்தார். விஷ்ணுவே ஸாத்விக தெய்வம் என நிர்ணயித்தார். ஶிவனும் தன் வாயினாலேயே "உலகம் யாவும் ஸ்ரீமந் நாராயணனுக்கு இயற்கையிலேயே அடிமை. ஆகவே நானும் அவருக்கு அடிமை" எனப் பாடியுள்ளார். இவரும் யாகம் செய்து இந்த ஶிவ பதவியை அடைந்தவரே.

**இளவரசி :** பரமஶிவனும் தேர்விலிருந்து நீக்கப்பட்டார்.

**தோழி :** இனி, அழகிய மணவாளனை ரங்கநாதனைப் பார்ப்போம்.

**இளவரசி :** இவருக்கு வயது என்ன ?

**தோழி :** வானில் இளவரசாய், எப்பொழுதும் யுவாவாய் இருக்கிறர்.

**இளவரசி:** அழகுள்ளவரா ?

**தோழி :** இவரது வடிவழகைச் சொல்ல ஆயிரம் தலை கொண்ட ஆதிசேஷனாலும் முடியாது. இவரது திருமேனி காந்தியே காயத்ரீ மந்த்ரத்தில் கூறப்பட்டு த்யாநிப்பவர்களின் பாபத்தைப் போக்கக்கூடியது என்றால் பாருங்களேன்.

**இளவரசி :** இவருக்கு சொத்து உண்டா ?

**தோழி :** லீலாவிபூதி, நித்யவிபூதி (ஸ்ரீ வைகுண்டம்) எனப்படும் உபயவிபூதியையும் (ஐஶ்வர்யம்) கொண்டவர்.

**இளவரசி :** பலம் எப்படி ?

**தோழி :** பாற்கடலைக் கடைய மந்தர மலையை ஆமையாய்த் தோன்றித் தன் மீது தாங்கியவர். வராஹ அவதாரத்தில் பூமியையே தூக்கியவரம்மா !

**இளவரசி :** யுத்தத்தில் வீரம் எப்படி இருக்கும் ?

**தோழி :** இதர தேவதைகளால், பலம் பெற்ற ஹிரண்யாக்ஷன், ஹிரண்யகஶிபு, ராவணன், கும்பகர்ணன், கம்ஸன் முதலிய பலவான்களான கொடியவரின் பலத்தை அநாயாஸமாக அழித்தவர். பாணாஸுரனுக்கும், காஶி ராஜனுக்கும் உதவிட வந்த ஶிவன், ஸுப்ரஹ்மண்யன், கணபதி மற்றும் யாவரையும் புறமுதுகிட்டு ஓடும்படிச் செய்தவர்!

**இளவரசி :** குணம் எப்படி ?

**தோழி:** இளவரசி ! இவரது குணத்தைச் சொல்ல முடியாமல் வேதங்களும் (வாய்) சோர்ந்தன. கருணைக்கடல். தன்னை அடைந்தவரின் குற்றங்களைப் பார்க்காமல் நட்பு கொண்டு நிகரில் புகழாய் விளங்குபவர்.

**இளவரசி :** இவரை அணுகுவது கடிநமா ?

**தோழி :** யாவரும் எப்பொழுதும் எளிதில் அணுகலாம். க்ருஷ்ணாவதாரத்தில் பாண்டவருக்காகத் தூது சென்றார். மதிகேடனான துர்யோதநன் கண்ணனைப் பிடிக்கக் குழி பறித்துத் தீங்கு செய்ய முயன்றான். அவனே அடுத்த மாதம் யுத்தத்திற்கு உதவி வேண்டி கண்ணனை அடைந்தான்.

**இளவரசி** : இவரை அடைந்தால் என்ன கொடுப்பார் ? நம்மை எப்படி வைத்துக் கொள்வார் ?

**தோழி** : இவரை அடைந்து விட்டால் கிடைக்காதது ஒன்றுமில்லை. தன்னையே கொடுக்கும் கற்பகம். அது மட்டுமா ? நம்மைக் கடிநமான ஒரு வேலையும் செய்ய விடாமல் உலகங்களைப் படைத்து ஆள்வது, முக்தியளிப்பது முதலியவைகளைத் தானே செய்து, அதனுல் வரும் ஆநந்த அநுபவத்தை நாமும் பெறச் செய்வார்.

**இளவரசி** : வார்த்தை மாறுவாரா ? பின்பு கை விட்டு விடுவாரா ?

**தோழி** : வார்த்தை மாறுமையே இவரது பெருமை. அதனுல்தானே பக்தர்களுக்காக அவதரித்து நன்மை செய்கிறுர்.

**இளவரசி** : இல்லையே. பக்தரான பீஷ்மரிடம் தான் சொன்ன வார்த்தையை மீறினதாகச் சொல்வார்களே ?

**தோழி** - இளவரசி ! ஶரணமடைந்தவர்களை ஒரு போதும் கைவிடமாட்டேன் என ஒரு முறைக்குப் பலமுறை கூறியுள்ளார். பீஷ்மர் போன்ற பக்தர்களுக்குப் பெருமையை உண்டு பண்ணவே அவ்விதம் செய்தார். மேலும், ஶரணாகதி செய்து வைக்கும் ஆசார்யர் ஒரு பரமபக்தர். செய்து கொள்பவரும் பக்தர். பக்தருக்காக எதையும் செய்வார் எனில் இந்த பக்தர்களுக்கு அளித்த வாக்கையும் மீற மாட்டாரல்லவா ?

**இளவரசி** : முக்தி அளிப்பது இவர் மட்டுமா ? அல்லது வேறு எவரேனும் உண்டா ?

**தோழி** : மோக்ஷமளிக்கும் ஶக்தி ஸ்ரீமந் நாராயணன் ஒருவருக்குத்தான் உண்டு. திருமழிசை ஆழ்வார் தம்மிடம் அழைக்காமல் வலுவில் வந்த ஶிவனிடம் மோக்ஷம் கேட்டார். அதுபோல் ஶிவனை மட்டுமே வணங்கிய கண்டா கர்ணனும் ஶிவனிடம் மோக்ஷம் கேட்டபோது தன்னால் மோக்ஷமளிக்க முடியாது, அந்த ஶக்தி எனக்கில்லை எனப் பரமஶிவனே கூறியுள்ளாரே.

**இளவரசி** : பரமஶிவன் பாற்கடலைக் கடைந்த போது வந்த விஷத்தை உண்ட பெருமை உடையவர். பெருமாள் அது போல் ஏதும் செய்துள்ளாரா ?

**தோழி** : ஸகி ! ஶிவன் விஷத்தை உண்ணவில்லை. கழுத்திலேயே நிறுத்தி விட்டாரே ! கண்ணன் சிறு குழந்தையாய் இருந்த போதே பூதனை கொடுத்த விஷத்தை உண்டு களித்தாரே ! பகவானை விட அவரது பக்தனான ப்ரஹ்லாதனே கொடிய விஷத்தை உண்டு ஜீர்ணித்தாரன்றோ !

**இளவரசி** : ஶிவன் மார்கண்டேயருக்காக யமனை உதைத்து உயிரை மீட்டாரே, இவரிடம் அது போல் திறமை உள்ளதா ?

**தோழி** : உண்மையில் ஶிவனும் நாராயணன் அருள் கொண்டே யமனை வென்றார் எனப் புராணமும் திவ்ய ப்ரபந்தமும் கூறும். மார்கண்டேயரும், பரம விஷ்ணு பக்தராகத்தானே எல்லா திவ்ய தேஶங்களிலும் உள்ளார். இறந்தவரை மீட்பதாகிய செயலைக் கண்ணன் பலமுறை செய்துள்ளாரம்மா.

**இளவரசி** : இவரை எப்படி அழைப்பது ?

**தோழி** : இவருக்குள்ள திருநாமங்கள் எண்ணிலடங்கா. ஆயினும் ஆயிர நாமங்கள் முக்யமானவை. கேஶவன் என்பது உயர்ந்த பெயர் - க என ப்ரஹ்மாவையும், ஈஶன் எனப் பரமஶிவனையும் சொல்லி இருவரும் பகவானிடமிருந்து தோன்றியதால் **கேஶவன்** என்ற பெயர் வந்தது என ஶிவனே கூறியுள்ளார்.

**இளவரசி** : இவரை மணந்தால் தனியாய் இருக்க வேணுமோ, உறவினர்கள் உண்டோ ?

**தோழி** : இவரைச் சுற்றி எப்போதும் தொண்டர் கூட்டம்தான். நீங்கள் தனிமையில் துன்பப்பட வேண்டாம். தீயவர் எவரும் அயோத்தி எனப்படும் ஸ்ரீ வைகுண்டத்தை நெருங்க முடியாது.

**இளவரசி** : இவரை அடைவது கடினமோ ?

**தோழி** : மற்ற தெய்வங்களிடம் வரம் பெறக் கடுமையான தவம் புரிய வேண்டும். பார்வதி ஶிவனை அடையப் புரிந்த தவம் தெரியுமல்லவா ? ஸ்ரீமந் நாராயணனை

அடைவது ஸுலபம். ஆசார்யர்கள் மூலம், ஶரணாகதியை நம்பிக்கையுடன் செய்தால் இவரே ஏற்றுக் கொள்வார். இதை யாவரும் செய்யலாம்.

**இளவரசி** : அவர்கள் நூல்களில் அவர்களைப் பற்றி உயர்வாகக் கூறியுள்ளார்களே, எது சரி எனக் கொள்வது ?

**தோழி** : ஜீவன்கள் செய்த பாபத்தால் சரியான அறிவு பெறுமல் இருக்க பகவான் தான் மயக்கும் மற்ற நூல்களையும் எழுதி வைத்தவன். தெளிந்த அறிவு பெற்றவர் ஸ்ரீமந் நாராயணனையே உயர்வற உயர்நலம் உடையவனுகக் கூறுவர். லோகத்திலும் ஶக்தியுடையவராய் இருந்தும் தவறு செய்தவர்களை விலக்கிடத் தன்னிடம் ஶக்தி, அதிகாரம் இல்லை என்று கூறி வேறிடம் கை காட்டுவர். அதுபோல் தான் பகவானும் தேவதாந்தரங்களை உயர்வாகக் கூறும் நூல்களையும் படைத்திடச் செய்தான். எல்லாம் அறிந்த, இயற்றிய யாவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள வ்யாஸர் ஸத்யம் செய்து கூறியிருப்பதாவது வேதங்களை விட உயர்வான ஶாஸ்த்ரம் இல்லை. கேஶவனை விட உயர்வான தெய்வம் இல்லை. எல்லா ஶாஸ்த்ரங்களையும் மீண்டும் மீண்டும் அலசி ஆராய்ந்து பார்த்ததில் தேறிய விஷயம் ஒன்று. அதாவது ஸ்ரீமந் நாராயணனையே (மட்டுமே) பக்தி செய்வது என்று உறுதியாக - இறுதியாகக் கூறியுள்ளார்.

**இளவரசி** : வைகுண்டபதியையே என் பதியாக (கணவனுக) வரிக்கிறேன் என்று கூறி எம்பெருமான் கழுத்தில் மாலையிட்டாள்.

**இவ்வாறு ஸ்வாமி ஸ்ரீ தேஶிகன், நம்மாழ்வார் முதலிய ஆசார்யர்கள் காட்டிய நல்வழியில் சென்று புற(ர)மான ஶரீரத்தைப் போக்குபவர்களே உத்தம ஸ்ரீ வைஷ்ணவர்.**

॥ शुभम् ॥

|| ஸ்ரீ: ||

# சித்ராந்நம்

**(குறிச்சி ஸ்ரீ நாராயணன்)**

வேதத்தில் பகவானை அந்நமாகவும், அவனை அடைந்து அநுபவித்தலை சாப்பிடுவதாகவும் சொல்லப்பட்டுள்ளது. அந்த வகையில் ஷாட்குண்ய பரிபூர்ணனான (அறுசுவை மிக்க) எம்பெருமானையும் அவன் அடியார்கள் விஷயமாகவும் சித்ராந்நத்தை ஸவிநயம் பரிவேஷணம் செய்கிறோம். சித்ராந்நத்தில் வித விதமாக உணவு வகை வருவது போல இங்கு பகவத், பாகவத அநுபவம் வித விதமாகப் படைக்கப்படுகிறது.

(1) கொடுத்ததைக் கேட்டால் அடுத்தது பகை:

திருவள்ளூர் ஸ்ரீ வீரராகவன் விஷயமாகத் திருமங்கை ஆழ்வார் மங்களாசாஸநத்தில் முதல் பாசுரமாவது —

**காசையாடை மூடியோடிக் காதல் செய்தானவனூர்**
**நாசமாக நம்பவல்ல நம்பி நம்பெருமான்**
**வேயினன்ன தோள்மடவார் வெண்ணெயுண்டானிவனென்று**
**ஏச நின்ற எம்பெருமான் எவ்வுள் கிடந்தானே.**

இதன் திரண்ட பொருளாவது - "கள்ள வேடமிட்டு ஸீதையை அபஹரித்துச் சென்றவன் ஊர் நாசமாகும்படிச் செய்த வீரனை சக்ரவர்த்தித் திருமகனே யதுகுலத்தில் கண்ணனாக அவதரித்து மெல்லிய தோளுடைய ஆய்ச்சியர்களால் வெண்ணெய் திருடினான் என ஏசும்படி ஸௌலப்ய பரிபூர்ணனாக நிற்கிறான்" என்பதாகும்.

இங்கு ஏசுதல் என்ற பதத்தைக் கொண்டு நோக்கும் போது, ஆழ்வார் எம்பெருமானுக்காக இரக்கப்படுவதாக / ஏங்குவதாக த்வநிக்கிறது. இப்படி ஆழ்வார் பரிதவிப்பது சரியா ? என்ற கேள்வி எழுகிறது. ஏனெனில், கண்ணன் வாஸ்தவத்தில் ஊரார் வீட்டில் வெண்ணெய் களவு செய்தவன் தானே. களவு செய்தவனை ஏசுதல் தவறாகாதே ! மேலும் திருடிய பிறகு பகவானை ஸௌலப்யகுணபூர்ணனாகச் சொல்வது

பொருத்தமாயிராதே. ஸ்யமந்தகமணியைக் கண்ணன் திருடாத போதும் வீண்பழி சுமர்த்தப்பெற்றான். அதைக்குறித்து ஆழ்வார் பாடியிருந்தாலும் ந்யாயமாகும், என்றிவ்வாறு பூர்வபக்ஷம்.

ஸ்யமந்தக மணியைத் திருடியதாகக் கூறியவர்களை பின்பு அதற்காக வருத்தப்பட்டு விட்டார்கள். எனவே அதைப் பாட முடியாது. க்ருஷ்ணனும், பலராமனும் திருவாய்ப்பாடிக்கு வந்த பின்னரே பாலும், வெண்ணெயும், வெள்ளமிட்டு ஓடியது. பசுக்களும் கண்ணனின் தர்சநம், ஸ்பர்சம், குழலோசை இவற்றால் பாலை மிக அதிகமாகச் சொரிந்தன. **சீர்மல்கு மாற்றாதே பால் சொரியும் வள்ளல் பெரும் பசுக்கள்** என்பவை காண்க. நாழிப்பால் நாழி நெய் ஆயிற்றாம் - அதாவது ஒரு படி பாலில் ஒரு படி நெய் கிடைத்ததாம். ஸ்ரீமத் பாகவதத்திலும் இவ்வாறே கூறப்பட்டுள்ளது. பகவான் தன் அநுக்ரஹத்தால் செல்வச் செழிப்பைத் தந்தான். அவனே சிறிதளவு வெண்ணெய் உண்டான் எனில் இது தவறாகுமோ ? என்கிறார் ஆழ்வார். மேலும் तैर्दत्तान् अप्रदायैभ्यो यो भुङ्क्ते स्तेन एव सः என நமக்கு உணவு முதலியவைகளை பகவான் தான் அளிக்கிறான். எனவே அவற்றை முதலில் எம்பெருமானுக்கு நிவேதநம் செய்ய வேண்டும். அவ்வாறு செய்யாமல் உண்பவர்களைத் திருடர்கள் எனவும் சாஸ்த்ரம் கூறுகிறது. இப்படிப்பட்ட திருட்டு அபசாரம் கோபர்களுக்கு வரக்கூடாது என்பதற்காக ஸ்வயமே புஜித்து அவர்களை ரக்ஷித்தவனைப் போய் ஏசுகிறார்களே என ஆழ்வார் அநுபவித்துப் பாடுகிறார்.

(2) வேறு ஒன்றும் நானறியேன் : ராவணனால் அபஹரிக்கப்பட்டுச் செல்லப்படும் போது, ஸீதை தன் உத்தரீயத்தில் நகைகளை முடிந்து ஸுக்ரீவாதிகள் மத்தியில் போட்டார்கள். அதை ஸுக்ரீவன் ராமனிடம் காண்பித்தார். அதைப்பார்த்து ராமன் கூறுகிறார். - ''குழந்தாய் (லக்ஷ்மணா), ஸீதை தன் உத்தரீயத்தில் வைத்து எறிந்த ஆபரணங்களைப் பார்த்தாயா? கண்ணீர் வெள்ளத்தால் என் கண்கள் மறைக்கப்பட்டுள்ளன. இவை ஸீதையினுடையவைதானா, பார்.

லக்ஷ்மணன் கூறுவதாவது- नाहं जानामि केयूरे नाहं जानामि कुण्डले । नूपुरे त्वभिजानामि नित्यं पादाभिवन्दनात् - "அண்ணா! இந்த வங்கிகளையும் அறியேன், குண்டலங்களையும் அறியேன். இந்தக் காற்சிலம்புகள் ஸீதையினுடையவைதான். தினமும் வணங்கும் போது அவைகளைப் பார்த்திருக்கிறேன்" என்றான்.

மாயமான் மாரீசன் பின் சென்ற ராமனுக்கு ஆபத்தோ என எண்ணி ஸீதை லக்ஷ்மணனைப் பார்த்து வருமாறு நியமித்தார்கள். (ஜநஸ்தாநத்தில் ரகுவீரனை அறிந்த பின்பும் கூறுவது விதிவகையே!) போகத் தயங்கிய இளைய பெருமாளை மனம் புண்படும்படி ஸீதை பேசிவிடுகிறார்கள். அப்போது புண்பட்ட லக்ஷ்மணன் மனம் குளிரச் செய்யவே ஸீதை ஆபரணங்களைக் கீழே போட்டு, உலகுக்கு ஸௌமித்ரியின் பெருமையை எடுத்துக் காட்டுகிறார்கள். ஸீதை நகையைப் போட்டதற்கு இதை விட முக்ய நோக்கம் இருப்பதாகத் தோன்றவில்லை. ஸீதையின் உத்தரீயத்தையும், நகைகளையும் தெரிந்து கொண்டதால்தான் ராமனுக்கும் கண்ணீர் பெருகியது. இருப்பினும் ஸீதையின் திருவுள்ளக் குறிப்பறிந்து (ததிங்கித பராதீநன் அல்லவா?) லக்ஷ்மணனைக் கேட்டு அதன் மூலம், நாட்டாருக்கு லக்ஷ்மணனின் பெருமையை உணர்த்தவே திவ்ய தம்பதிகள் இந்த நாடகத்தை நடத்தினர்.

(3) **சிங்கப்பிரான்:** - (1) ப்ரஹ்ம வித்யைகள் 32. இவற்றில் எந்த ஒன்றை அநுஷ்டித்தாலும் மோக்ஷம் கிட்டும். இது ப்ரஹ்மத்தைக் குறித்தே செய்யப்படுவதாகும். ப்ரஹ்மம் யார்? என்ற கேள்வி வர ஸ்ரீபாஷ்யத்தில் லிங்க பூயஸ்த்வாதிகரணத்தில் ஶ்ருதிகளைக் கொண்டு ஸ்ரீமந் நாராயணனே ப்ரஹ்மம் என ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இப்படி கஷ்டப்பட்டுத் தெரிந்து கொள்வதை ந்ருஸிம்ஹன் - மாலோலன் ஸுலபமாக்குகிறான். எப்படி எனில் - ப்ரஹ்ம வித்யைகளில் ஸம்பர்க வித்யை ஒன்று. இது ந்ருஸிம்ஹனைக் குறித்துச் செய்யப்படுவது. இந்த வித்யையைத்தான் ரைக்வ மஹர்ஷி ஜாநஶ்ருதி என்ற அரசனுக்கு உபதேசித்தார். இந்த வித்யையின் மூலம் ந்ருஸிம்ஹன்தான் ப்ரஹ்மம் என அறியலாம். ஸ்ரீமந் நாராயணன்தான் ந்ருஸிம்ஹனை

அவதரித்தான் என்பது யாவரும் அறிந்ததே. ஆக, ப்ரஹ்மம் என்பது ஸ்ரீமந் நாராயணன்தான் என ஸுலபமாக அறிந்து கொள்ள உதவுகிறான் நம் சிங்கப்பிரான். அவதாரத்தில் ஆச்ரித ரக்ஷணத்தில் காட்டிய அதே த்வரையை சாஸ்த்ர நிர்தாரணத்திலும் காட்டுபவன் நரஹரியே.

(II) கலியுகத்தில் மாலோலன் ப்ரஸித்த சரணாகத ரக்ஷக தீக்ஷிதனாக விளங்குகிறான். ஏன் எனில் - தன் (விபவ அவதாரத்தில் ராம க்ருஷ்ணாதிகளைப் போல் நெடுநாள் இருந்து ஸாது பரித்ராணம் செய்யவில்லையே என்கிற குறையாம். எனவே அர்ச்சையில் மாலோலனாக நாடுதோறும் எழுந்தருளி சேதநர்களைக் கடைத்தேறும்படிச் செய்கிறான். சிங்கம் வந்ததும் காட்டில் மற்ற விலங்குகள் ஓடிவிடுமாம். மாலோலச் சிங்கம் வந்ததும், **अहं स्मरामि मद्भक्तम्, सकृदेव प्रपन्नाय, सर्वधर्मान्** என்றவர்கள் கடைகளில் வ்யாபாரம் சற்று மந்தமாக உள்ளதும் ஆச்சர்யமே.

(III) தன்னை அண்டியவர்களுக்குத் தன்னையே தந்து விடுவான் பகவான் எனப் பெரியோர்கள் கூறுவதுண்டு. இதை ஸ்ரீஸந்நிதியில் வெள்ளி மண்டபத்தில் காணலாம். முதலில் மாலோலன், பிறகு கீழே டோலை கண்ணன். தன்னை ஆச்ரயிப்பது போல் உள்ள கண்ணன் கீழே ஸ்வர்ண ந்ருஸிம்ஹனைத் தன்னையே தருவது போல் எழுந்தருளியுள்ளான். ஒருக்கால் திருமடைப்பள்ளிக்கு எழுந்தருளினாலும் தன் ப்ரதிநிதியாக 40ம் பட்ட ஸ்ரீமத் அழகியசிங்கர் ஆராதித்த ஸ்வர்ண ந்ருஸிம்ஹனை வைத்தே செல்கிறான்!

(IV) **ஆடியாடி அகங்கரைந்து** என்கிற பாசுரத்தில் ஆழ்வார் ந்ருஸிம்ஹனைத் தேடுவதாக உள்ளது. **த்ரைலோக்யமேதத் அகிலம் நரஸிம்ஹகர்பம்"** என, அவதரித்த தூணைத் தவிர எங்கும் உள்ளவனான ஸ்ரீ மாலோலனைத் தேடுவது எப்படி என்ற ஸந்தேஹம் எழுகிறது. எங்குமுள்ளவன் ந்ருஸிம்ஹன் என அறிந்தே ஆழ்வார் மற்ற எம்பெருமான்களை விட்டு, **எங்கும் நாடி** எனப் பாடுகிறார். நாடி என்பதற்கு அடைந்து என அர்த்தங் கொண்டால் (தேடி என்பதற்குப் பதிலாக) ஆழ்வாரின்

அநுபவம் சரியே என விளங்குகிறது. இதற்கு மேல் ஓர் ஆக்ஷேபம். இந்தப் பதிகம் முழுவதும் விஶ்லேஷமாக உள்ள போது **அடைந்து** அல்லது **கண்டு** என்பது எப்படிப் பொருந்தும் என்பதாகும்.

திருவாராயிரப்படியில் எம்பெருமானை ஒருக்கால் கண்டாலும் தாபம் தீரவில்லை என உள்ளது. சரி, தர்ஶநத்தின் பின்பும் பராங்குஶ நாயகியின் நோய் ஏன் தீரவில்லை ? எனில், உலகில் நோயின் கடுமையைப் பொருத்து மருத்துவர் பல மருந்துகளைச் சேர்த்துக் கொடுப்பார். அதுபோல, வைத்யனான எம்பெருமானும் தன் விவித (பல) ரூபங்களை (ஔஷதங்களை)க் காட்டுகிறான் - ஸேவை கிட்டியும் கலவி ஏற்படாமையால் நோய் தீரவில்லை என்பதும் ஒரு காரணம். ஸேவை கிட்டியது என இந்தப் பதிக முதல் பாசுரத்திலும் 11ம் பாசுரத்திலும் அடுத்த திருவாய்மொழி ஆரம்ப திருவாராயிரப்படிகளில் உள்ளதைக் கொண்டு இவ்வநுபவம் வழங்கப்பட்டது.

***(4) விதுரர்*** : - ஸத்யவதியின் நியமநப்படி வ்யாஸர் மூலம் யுகதர்மப்படி த்ருதராஷ்ட்ரன், பாண்டு, விதுரர் உண்டானார்கள். மஹாத்மாவான விதுரர் சதுர்த்தராக மஹாபாரதத்தில் கூறப்பட்டுள்ளார். மநு தர்மத்தில் க்ஷேத்ரத்தை விட பீஜமே ப்ரதாநம் எனக் கூறப்பட்டுள்ளது. பின்பு ஏன் விதுரர் சதுர்த்தரானார் என்ற கேள்வி எழுகிறது.

மத்ஸ்யகந்தியிடம் பராஶரர் தன் விருப்பப்படி (ஸத்புத்ரன் பிறக்கக்கூடிய ஸந்தர்ப்பமாய் இருந்ததால்) வ்யாஸரைப் பெற்றெடுத்தார். வ்யாஸர் ப்ராஹ்மணரானார். ஒரே உபாயமே ஸங்கல்ப பேதத்தால் வித்யாஸமான பலனைக் கொடுக்கும் என்பது ஶாஸ்த்ர ஸம்மதமான விஷயம். அக்நிஹோத்ரமே நித்ய கர்மாவாயும் ஸங்கல்ப பேதேந ஸ்வர்க ஸாதநமாயும் கூறப்பட்டுள்ளது. வ்யாஸரும் தன் ஸங்கல்பமின்றிக்கே தாயின் ஆணையை நிறைவேற்றினார். தாஸியின் ப்ரார்த்தனைக்கே வரமளித்ததால் விதுரர் சதுர்த்தராக நிர்ணயிக்கப்பட்டுள்ளார். பராஶரருக்குத் தன் ஸங்கல்பமிருந்தது போல வ்யாஸருக்கு இல்லை என்பது நோக்கத் தக்கது.

॥ शुभम् ॥

# பேரருளாளன்

*(குரிச்சி ஸ்ரீ நாராயணன், தூத்துக்குடி)*

**ஶ்ரீநிதி4ம் நிதி4ம் அபாரம் அர்த்தி2நாம்**
**அர்த்தி2தார்த்த2 பரித3ாநதீ3க்ஷிதம் ।**
**ஸர்வபூ4த ஸுஹ்ருத3ம் த3யாநிதி4ம்**
**தே3வராஜம் அதி4ராஜம் ஆஶ்ரயே ॥**

முக்தி தரும் நகரங்கள் ஏழு. அவற்றுள் காஞ்சீபுரம் ப்ரதாநமானது. இந்த திவ்யதேஶத்தைப் பெருமாள் கோவில் என்று ஸம்ப்ரதாயமாக அழைப்பர். இங்குள்ள கோவிலில் ஸ்ரீ வரதராஜப் பெருமாள் பெருந்தேவித் தாயாருடன் எழுந்தருளியுள்ளார். இவருக்கு **தேவாதிராஜன்** என்ற ப்ரஸித்த திருநாமம் உண்டு. ஸ்வாமி நம்மாழ்வார் முதலில் இப்பெருமாளையே பாடியதாக प्रथम शतके वीक्ष्य वरदं என்று ஸ்வாமி நிகமாந்த மஹாதேஶிகன் ஸ்தாபித்துள்ளார். இவ்வூர் கருடோத்ஸவம் பாரெங்கிலும் புகழ் பெற்றது. இந்தப் பெருமாள் தன் திருநாமத்திற்கு ஏற்ப வரமளிப்பதில் ராஜாவாக **வரதராஜனாக** உள்ளார். இவர் பக்தர்களைக் காத்தருளிய சில ஐதிஹ்யங்களை ரஸித்து மகிழ்வோம்.

***1) எத்திசையும் ஓடி இளைத்துக் கச்சியில் அருள் பெற்றவர் :—*** ப்ரஹ்மா (நான்முகன் ஸ்ரீமந் நாராயணனை தர்ஶிக்க நைமிஶாரண்யத்தில் பெரும் தவம் புரிந்தார். ஆனால் பகவான் அவ்விடத்தில் வநரூபியாக மட்டும் ஸேவை ஸாதித்தார். பின்பு புஷ்கரத்தில் நீர்வடிவாகவே ஸேவை தந்தார். தாமரைக் கண்ணனைக் காணமுடியாமல் வருந்திய நான்முகனுக்கு, அஶரீரியாய் ஸத்யவ்ரத க்ஷேத்ரமாகிய காஞ்சியில் ஸேவை ஸாதிப்பதாய் அருளினார். ப்ரஹ்மாவும் இங்கு வந்து அஶ்வமேத யாகம் செய்தார். அதில் ஸ்ரீ தேவாதிராஜன் ஆவிர்பவித்து அருளினார். மற்ற தேவதைகளுக்குக் கொடுத்த ஹவிர்பாகத்தை ஏற்று, தான் தேவாதிராஜன் எனக் காட்டினார். பின்பு தேவர்கள் மீது இரக்கம் கொண்டு, இனி அவரவர் ஹவிர்பாகத்தை அவரவரே பெறலாம் என வரமளித்தார்.

(2) **நிதி கொடுத்த வள்ளல் :—** திருமங்கை ஆழ்வார் தன் தேவிகளான குமுதவல்லியாரின் நிபந்தனைப்படி தினமும் ஆயிரக்கணக்கான ஸ்ரீ வைஷ்ணவர்களுக்குத் ததீயாராதநம் நடத்தி வந்தார். இதனால் இவரது கஜானா செல்வம் கரைந்தது. சோழ அரசனுக்குத் தரவேண்டிய கப்பம் செலுத்தாமலிருந்தார். போர் தொடுத்த சோழனும் தோல்வியுற்றான். பின்பு தந்த்ர மாய் ஆழ்வாரைச் சிறையில் அடைத்துவிட்டான். பணம் தந்தால் விடுவிப்பதாகக் கூறினான். கலங்கிய கலியனுக்குக் கனவில் காட்சிதந்து, "நம்மிடம் புதையல் (பணம்) உள்ளது. வந்து பெற்று உபயோகித்துக் கொள்ளும்" என்றார் வரதராஜன். பின்பு அரச ப்ரதாநிகளுடன் வந்து பெருமானை ஸேவித்து ப்ரார்த்திக்க, புதையல் இருக்குமிடத்தை ஆழ்வாருக்கு உணர்த்தினான். பரகாலனும் அதைக் கொண்டு அரசனுக்குக்கப்பம் செலுத்தி, மீண்டும் ததீயாராதந கைங்கர்யத்தைத் தொடர்ந்தார். இரக்க குணம் இருப்பதுடன், இடுக்கண் களைவதிலும் முதன்மையானவன் நம் வரதனே.

(3) **ஆளவந்தார் ப்ரபத்தி :—** வைணவ உலகுக்குத் தலைவராக ஸ்ரீ ராமானுஜரை ஆக்கித்தர வரதனிடம் ஸ்ரீ ஆளவந்தார் சரணாகதி செய்தார். அதன்படியே ஸ்ரீ ராமானுஜருக்கு ஸந்யாஸமளித்து, யதிராஜர் என்ற திருநாமமும் வழங்கி நம்மை என்றும் ரக்ஷிக்கிறார் வரதராஜன்.

(4) **வழிகாட்டும் வரதன் :—** யாதவ ப்ரகாசருடன் வடதேச யாத்திரை சென்றார் ஸ்ரீ ராமானுஜர். தன்னை (உடையவரை) முடிக்கும் எண்ணம் கொண்ட யாதவப்ரகாசனின் திட்டத்தை கோவிந்தர் மூலம் அறிந்து, பாதியில் மீண்டு வந்த ராமானுஜருக்குக் காட்டில் வழி புலப்படவில்லை. அவ்வேளையில் பெருந்தேவித் தாயாருடன் வரதன் வேடுவனாக வந்து வழிநடத்தி உதவினார். இரவில் வேடுவச்சி தாகம் என்றாள். உதவி புரிந்தவருக்கு ப்ரத்யுபகாரம் செய்ய முடியவில்லையே என வருந்தினார் உடையவர். காலையில் எழுந்து பார்க்கும்போது வேடுவர்களைக் காணவில்லை. சிறிது தூரத்தில் ஜநநடமாட்டம் கண்டு, இது எந்த ஊர் என வினவ, அவர்களும் அதோ புண்யகோடி விமாநம் என்றனர். வரதனே

தம்மை வழிநடத்தினாள் என உணர்ந்து, வேடுவச்சி தாகம் என்றதைக் கருத்தில் கொண்டு ஶாலைக் கிணற்றிலிருந்து பகவானுக்குத் தீர்த்த கைங்கர்யம் செய்தார் உடையவர். ராமாயணத்தில் வநவாஸத்தில் ராமன்-ஸீதை-லக்ஷ்மணன் என்ற வரிசையாகச் சென்றதை வால்மீகி அருளினார். ப்ரணவார்த்த ப்ரதிபாத்யமாக இதை ஆசார்யர்கள் உரைப்பர். மறுபடி அதே காட்சியை வநத்தில் தந்தான் வரதன். முதலில் வரதன் - தாயார் - உடையவர்!.

*(5)* **கேட்டது ஒன்று, கிடைத்தது இரண்டு** :— காஞ்சிக்கு அருகில் கூரம் என்ற ஸ்ரீக்ராமத்தில் கூரத்தாழ்வான் தநவந்தராக இருந்து வந்தார். அவர் திருமாளிகை வாசற்கதவுகள் ப்ரஹ்மாண்டமாக இருக்கும். அக்கதவுகளில் மணிகள் கட்டப்பட்டு இருக்குமாம். அக்கதவுகளைத் திறந்து மூடும் போது மணி ஓசை பலமாக ஒலிக்கும். ஒரு நாள் இரவு கூரத்தாழ்வான் திருமாளிகைக் கதவுகள் சாத்தப்படும்போது எழுந்த மணி ஓசை வரதராஜப் பெருமாள் திருச்செவியில் கேட்டது. தன்னிடம் திரு ஆலவட்ட (விசிறி) கைங்கர்யம் செய்த திருக்கச்சி நம்பியிடம், ''இது என்ன மணி ஓசை? நம் கோவில் மணி ஓசை போலுள்ளதே'' என்றாராம். பின்பு இதைக் கேள்வியுற்ற ஸ்ரீ கூரத்தாழ்வான் பகவானுக்கு ஸமமாக மாளிகை கூடாது. அது அபசாரம் என்று எண்ணி, தன் சொத்தை எல்லாம் விட்டு விட்டு, வரதனை ஸேவித்து, பாஷ்யகாரர் திருவடிகளில் தஞ்சமடைந்தார். விஶ்வாமித்ரர் ராமனை மட்டுமே தஶரதனிடம் கேட்டார். ஆனால் கௌஸல்யையோ உடன் லக்ஷ்மணனையும் அனுப்பினாள். அதுபோல் ஆளவந்தார் ராமாநுஜரை மட்டும் கேட்டபோதும், தாய் போன்ற அன்புள்ளம் கொண்ட வரதன், உடையவருக்கு உசாத்துணையாகக் கூரத்தாழ்வானை அளித்தார்.

*(6)* **ஆறு வார்த்தை** :— ப்ரஹ்ம ஸூத்ரங்களுக்கு ஆளவந்தார் நியமநப்படி பாஷ்யமிடத் திருவுள்ளம் கொண்ட ராமாநுஜருக்குச் சில ஸந்தேஹங்கள் இருந்தன. திருக்கச்சி நம்பிகள் வரதனுடன் பேசுபவராகையால், அவர் மூலம் பெருமாளிடம் விடை பெற்றுத் தர ப்ரார்த்தித்தார். பூந்தமல்லியிலிருந்து திநமும் காஞ்சி வந்து இரவு முழுவதும் வரதனுக்கு விசிறி கைங்கர்யம் செய்வார் நம்பி. அப்போது

பெருமாளுடன் பேசுவாராம். பக்தனைக் கண்டதில் பள்ளியறையையும் மறந்து வார்த்தை சொல்வானாம் வரதன். ''வாய் திறவாய்'', ''கலியே! சுடரே! துயிலெழாய்'', ''செங்கண் எம்மேல் விழியாவோ'' என்றெல்லாம் பாட வேண்டாதபடி பக்தருக்காக உறக்கம் தவிர்த்தவன் இவன். நம்பியும் பகவானிடம் உடையவர் ஸந்தேஹங்களைத் தீர்த்து வைக்குமாறு வேண்டினார். (ஆனால் ஸந்தேஹம் என்ன என்று உடையவர் கூறவில்லை.) பெருமாளும் ஆறு வார்த்தைகளாகப் பதிலுரைத்தான். அவை :- (1) ஸ்ரீமானான நாமே பரதத்வம், (2) நமது மதமே பேதம், (3) ப்ரபத்தியே உபாயம், (4) அந்திமஸ்ம்ருதி ஆவஶ்யகமில்லை, (5) ஶரீராவஸாநத்திலே மோக்ஷம், (6) பெரிய நம்பி திருவடிகளை ஆஶ்ரயிப்பது என்பதாகும். இவை நம் உடையவருக்குப் பாஷ்யமிட அடிப்படையாக அமைந்தன. இந்தப் பதிலைக் கொண்டே கேள்விகளை ஊஹிக்கலாம். இவ்வகையிலேயே கீதாபாஷ்யத்தில் அவதாரரஹஸ்ய கட்டத்தில் பகவானின் பதிலைக் கொண்டே அர்ஜுநன் கேள்விகளுக்கு அஸாதாரணமான உரையிட்டார் ராமாநுஜர்.

(7) ஸ்ரீ நடாதூர் அம்மாள் :— காஞ்சியில் ஸ்ரீவத்ஸகுலதிலகராய் எழுந்தருளியிருந்த நடாதூர் ஸ்ரீ வரததேஶிகர் தினமும் வரதனுக்குப் பாலமுது செய்விப்பாராம். சூடாற்றி ஸுகோஷ்ணமான நிலையில் தருவதைக் கண்டு பகவான் - ''தாய் ஶிஶுவுக்கு ஊட்டுவது போல் செய்கிறீரே! நீர் அம்மாவோ என்றார். அது முதல் அம்மாள் என்ற திருநாமம் வழக்காயுள்ளது. நடாதூரம்மாள் ஹஸ்திகிரியில் ஸ்ரீபாஷ்ய காலக்ஷேபம் ஸாதிப்பர். அந்த ஸமயத்திலேதான் ஸ்ரீபாஷ்யத்திற்கு ஒப்புயர்வற்ற உரையாகிய ஶ்ருதப்ரகாஶிகை தோன்றியது. நமக்கு அந்நத்தையளித்து அதைச் செரிக்க பகவானே வயிற்றில் ஜாடராக்நியாய் இருந்து உதவுகிறான். அதுபோல உடையவர் மூலம் ஸ்ரீபாஷ்யம் ஏற்படவும் அதை புரிந்து கொண்டு அநுபவிக்க ஶ்ருதப்ரகாஶிகையையும் ஏற்படுத்தியவன் வரதனே.

(8) ஸ்வாமி ஸ்ரீ தேஶிகன் :— ஸ்ரீ பாஷ்யகாரருக்குப் பிறகு நமது விஶிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தை இதரமத நிரஸந

பூர்வமாக ஶாஶ்வதமாய் த்ருடீகரிக்க, தூப்புலிலே ஸ்வாமி ஸ்ரீ தேஶிகனை அவதரிப்பித்து அவர் மூலம் உபய வேதாந்த ஸ்தாபநம் செய்தருளினவன் தேவாதிராஜன். ஸ்ரீ ஆதிவண் ஶடகோப யதீந்த்ர மஹாதேஶிகனை மேல் கோட்டையில் நின்று வருவித்து ஆட்கொண்டவனும் அருள் வரதனே.

*(9)* **யோகக்ஷேமம் வஹாம்யஹம்** :— காஞ்சியில் ஒரு மாத்வர் பரமைகாந்தியாய் வரதனை அநவரதம் தொழுது வந்தார். உஞ்சவ்ருத்தி செய்து பகவானுக்குக் கண்டருளப்பண்ணியே அமுது செய்வார். ஒரு ஸமயம் நாலைந்து நாட்கள் தொடர்ந்து மழை பெய்ததில் உஞ்சவ்ருத்தி செய்ய முடியாமல், தீர்த்தத்தையே நிவேதநம் செய்து பருகி வந்தார். இவரது தேவிகள் தன் பர்தா இப்படிப் பட்டினியுடன் இருப்பதைப் பார்த்து வ்யஸநமடைந்தாள். ''பகவான் ரக்ஷிப்பார், பகவான் ரக்ஷிப்பார்'' என்பீர்களே, இது ஸமயம் அவன் ரக்ஷிக்கவில்லையே எனப் பலமுறை கூறினாள். பலமுறை இதைக் கேட்டதும், அந்த பக்தரும் மனமுடைந்து **அநந்யா: சிந்தயந்தோ மாம் யே ஜநா: பர்யுபாஸதே । தேஷாம் நித்யாபி[4]யுக்தாநாம் யோக[3] க்ஷேமம் வஹாம்யஹம்** என்ற ஶ்லோகத்தைக் கரியால் அழித்துவிட்டார். பிறகு பகவானை ஸேவிக்கச் சென்றார். அவன் நெற்றியில் கரிக்கோடுகள் இருந்ததைக் கண்டு வருந்தி அபசார க்ஷாபணம் செய்தார். இதற்குள் இந்த ஸ்வாமியின் க்ருஹவாசலில் வண்டி நிறைய ஒரு வருஷத்திற்குத் தேவையான சாமான்களை ஒருவர் கொண்டு வந்து இறக்கினார். தேவிகளும் இது யார் அனுப்பியது என்றாள். அதற்கு அந்த நபர் ''வரதராஜ செட்டியார் அனுப்பினார்'' என்று கூறி மறைந்தார். தேவிகளுக்கு ஆஶ்சர்யம்! பக்தரும் அகம் வந்தார். பொருட்களைக் கண்டு ஏது ? எனக் கேட்டார். வரதராஜ செட்டியார் அனுப்பியதாக யாரோ ஒருவர் கொண்டு வந்து வைத்து மறைந்தார் என்றாள். பக்தரும் இது வரதன் செய்த லீலை என உணர்ந்து தன் தவறுக்கு வருந்தி, ஓலைச் சுவட்டில் தீட்டிய கரிக்கோடுகளை அழித்து, பகவானை ஸேவித்து க்ருதார்த்தரானார்.

*(10)* ஸ்ரீ ராமாநுஜர் யஜ்ஞமூர்த்தி என்ற மஹாவித்வானுடன் பதினெட்டு நாள் வாதம் செய்ய ஸங்கல்பித்து 17 நாட்கள் சென்றும் முடிவு வராமலிருக்க இரவில் தம் ஆராத்யனான பேரருளாளனை ஆராதித்து யோசனையுடன் கண்வளர்ந்தருளினார்.

ஸ்வப்நத்திலே பேரருளாளன் தோன்றி, "ஆளவந்தார் அருளிச் செய்த மாயாவாத கண்டநத்தைச் சொல்லி அவனை ஜயியும்" என்று அநுக்ரஹித்தார். மறுநாள் உடையவரும் ப்ரஸந்ந கம்பீரராய் தர்க்க கோஷ்டிக்கு எழுந்தருளுவதைக் கண்டதும், யஜ்ஞமூர்த்தி, உடையவர் எம்பெருமானின் விசேஷ கடாக்ஷத்துடன் வருவதை உணர்ந்து ஏதும் சொல்லாமலேயே தன் தோல்வியை ஒப்புக் கொண்டு உடையவருக்கு ஶிஷ்யராகிப் பணிந்தார். பேரருளாளன் தமக்குச் செய்த உதவியைக் குறிக்கும் வகையில் யஜ்ஞமூர்த்திக்கு அருளாளப்பெருமாள் எம்பெருமானார் என்ற திருநாமம் சாத்தியருளி அவரைத் திருத்திப் பணி கொண்டார்.

இப்படி எண்ணிலா வகையில் அருள் சுரக்கும் தன்மை உடையவனாகையாலே வரதனை, **பேரருளாளன்** என்று கொண்டாடி வருகிறோம்.

॥ शुभम् ॥

|| ஸ்ரீ: ||

# அபிநவ தஶாவதாரம்

*(குரிச்சி ஸ்ரீ நாராயணன், தூத்துக்குடி)*

ஆசார்யனை பக்தியுடன் கொண்டாடுவது நித்யம், நைமித்திகம், காம்யம் என மூன்றிலும் உண்டு என்பதை ஸ்வாமி தேஶிகன் ***ஸ்ரீமத்ரஹஸ்யத்ரய ஸாரத்தில்*** அருளிச் செய்துள்ளார்.

தமக்கு என்று பாராமல் நமக்காகவே ப்ரக்ருதம் ஸ்ரீமத் அழகியசிங்கர் ஆற்றி வரும் செயல்கள் எண்ணிலடங்கா. ப்ரக்ருதம் ஸ்ரீமத் அழகியசிங்கரின் காலம் நம் ஸ்ரீ ஸந்நிதி வரலாற்றில் பொற்காலமே. வாஸ்தவத்தில் எங்கும் **ஸ்வர்ணமயமாக இருப்பதும்** யாவரும் அறிந்ததே.

தஶாவதார ஸந்நிதியில் அவதரித்த ஸ்ரீமத் அழகியசிங்கரை தஶாவதாரம் எடுத்த பகவானுடன் ஒப்பிட்டு எழுதும்படியாக மனதில் தோன்றியது. அதை ஸவிநயம் விஜ்ஞாபித்துக் கொள்கிறேன். குறைகள் இருப்பின் அடியேனை க்ஷமித்தருள வேணும்.

1. **மத்ஸ்யாவதாரம்** :- வேதங்களை ரக்ஷிப்பதே இந்த அவதாரத்தின் ப்ரதாந பலன். நம் ஸ்ரீமத் அழகியசிங்கர் அச்சித்ர, அஶ்வமேத பாராயணங்களின் மூலமும், ஆசார்ய திருநக்ஷத்ர வைபவ மூலமும் வேதங்களை ஆதரித்து ரக்ஷித்து வருகிறார். பகவான் ரக்ஷித்தது ஒரு வேதமே. இவரோ த்ராவிட வேதத்தையும் ரக்ஷித்து பகவானையும் விஞ்சிவிட்டதாகவே தோன்றுகிறது. மத்ஸ்யங்கள் தன் பார்வையால் குட்டிகளை போஷிக்கும். அதுபோல ஸ்ரீமத் அழகியசிங்கரும் தன்(ண்) கடாக்ஷத்தால், வந்திருப்பவர்களைக் கடாக்ஷித்து அநுக்ரஹிக்கிறார்.

2. **கூர்ம அவதாரம்** :- பாற்கடலைக் கடைந்த போது மந்தரமலையைத் தாங்குவதற்காக பகவான் கூர்மாவதாரம் எடுத்தான். ஸ்ரீ ஸந்நிதி ஆஸ்தாந பாரத்தை ஏறிட்டுக் கொண்டு கருணைக் கடலாகிய மாலோலனிடமிருந்து நமக்கு எல்லா நலன்களையும் வாங்கித் தருகிறார்.

3. வராஹ அவதாரம் :- ஹிரண்யாக்ஷனால் ஜலத்தில் அமுங்கிய பூமியை வராஹ உருவெடுத்துத் தூக்கினான் பகவான். நாநாவித நாஸ்திகவாதமாகிற ஜலத்தில் அமுங்கிய ஸநாதந தர்மத்தை மீண்டும் பாரெங்கிலும் ஸ்தாபித்ததால் அழகியசிங்கர் ஜ்ஞாநப்பிரானே என்பதில் ஐயமில்லை.

4. ந்ருஸிம்ஹாவதாரம் :- இது யாவரும் ப்ரத்யக்ஷமாகப் பார்க்கக்கூடியதாகவே இருக்கிறது. எங்குமுளன் கண்ணன் என்று சிங்கப்பிரான் எல்லா இடங்களிலும் இருக்கிறான் என்றார் ஆழ்வார். ஸ்ரீமத் அழகியசிங்கர் ஆஸேது ஹிமாசல யாத்ரைகளால் ஜ்ஞாநக்கண் இல்லாத பாமரரும் இதை உணரும்படி மாலோலன் ஸேவையைத் தந்தருளுகிறார். ''அத்யத்புதம்'' என ஸ்ரீமத் பாகவதத்தில் ந்ருஸிம்மனின் அழகு குறிக்கப்பட்டுள்ளது. ஆனால் புழக்கத்தில் ஆராதகருக்கே அழகியசிங்கர் எனத் திருநாமம் உள்ளது.

5. வாமந அவதாரம் :- விசிஷ்டாத்வைதம் தழைத்தோங்க தம் வாக், தர்சந, லேகந, அநுக்ரஹ அழகால் தடங்கலாயுள்ள மஹாபலி போன்றவர்களையும் ஆட்கொண்டு தர்ம ஸம்ஸ்தாபநம் செய்து வருகிறார். வாமநன் பக்தனுக்காக மட்டும் யாகசாலைக்குச் சென்றார். அழகியசிங்கரோ பக்தர், பகவான் இருவருக்காகவும் இரங்குவதால் பகவானைவிட ஒரு படி மேலே உள்ளார்.

6. பரசுராம அவதாரம் :- வேத பாஹ்யர்களையும், குத்ருஷ்டிகளையும் பல விதங்களில் களையெடுப்பதால் பரசுராமரே என்னலாம்.

7. ராமாவதாரம் :- சக்ரவர்த்தித் திருமகனை தேசத்தில் யாவரும் கொண்டாடியது போல நம் அழகியசிங்கரும் நாடெங்கிலும் அன்புடன் போற்றப்படுகிறார். ராமனுக்கு வஸிஷ்டரும், விச்வாமித்ரரும் வரிந்துக் கொண்டு ஆசார்யகம் மூலம் நன்மை செய்தனர். அதுபோல, இஞ்சிமேடு ஸ்ரீமத் அழகியசிங்கரும், தேவனார் விளாகம் ஸ்ரீமத் அழகியசிங்கரும் இதாநீம் அழகியசிங்கருக்கு அநுக்ரஹம் செய்துள்ளனர். குருகுலவாஸம் இஞ்சிமேடு ஸ்ரீமத் அழகியசிங்கரிடம் என்றால், பகவானுடன் விவாஹமாகச் சொல்லக்கூடிய பரஸமர்ப்பணத்தை தேவனார் விளாகம் ஸ்ரீமத் அழகியசிங்கர் செய்து வைத்தார். நாம் செய்யும் ஒரு நன்மையை மட்டும்

நினைவில் கொண்டு, பல குற்றங்களை மறந்து விடுவானும் ராமன். அதுபோல ஸ்ரீமத் அழகியசிங்கரும், (அடியேன் அநுபவித்தது) "எல்லோரும் விஶிஷ்டாத்வைதிகளே" என்ற அருள்மொழி பற்றி விஜ்ஞாபித்ததை நினைவில் கொண்டு, அடியேன் சிறியவன் என்பதைப் பெரியதாக மறந்து பாராட்டி அநுக்ரஹித்ததாகும்.

8. **பலராமன்** :- பலராமன் கண்ணனுக்காகவே அவதரித்தார். அதுபோல, ஸ்ரீமத் அழகியசிங்கரும் "**எங்குமுளன் கண்ணன்**" எனப்பட்ட ந்ருஸிம்மனுக்காகவும், டோலை கண்ணனுக்காகவுமே அவதரித்து தன்னை அர்ப்பணித்துள்ளார். பலராமன் தனக்காகத் தீர்த்த யாத்ரை சென்றார். அழகியசிங்கரோ நமக்காக நாடெங்கும் விஜய யாத்ரை செய்து வருகிறார்.

9. **க்ருஷ்ணாவதாரம்** :- அன்று தேர்த் தட்டிலே நின்று கலங்கிய அர்ஜுநனுக்காகக் கீதையை உபதேஶித்தான் பகவான். நம் அழகியசிங்கர் **தந்தப் பல்லக்கிலிருந்து** ஶரணாகதியை உபதேஶித்து கலங்கிய மாந்தரை நல்வழியில் புகுத்துகிறார்.

10. **கல்கி அவதாரம்** :- கலியின் கோலாஹலத்தை அடக்க ஏற்படப் போகும் அவதாரம். நம் அழகியசிங்கரின் அயராத அநிதரஸாதாரண ஸஞ்சாரத்தால் **கலியும் கெடும் கண்டுகொண்மின்** எனும்படி எங்கும் பொலிக பொலிக பொலிக என்று இருப்பதால் பகவான் கல்கியாக அவதரிக்க அவஶ்யம் ஏற்படாத வண்ணம் செய்திருப்பதாகவே தோன்றுகிறது.

# ஸ்ரீ ராமனும் (இஞ்சிமேடு) ஸ்ரீமத் அழகியசிங்கரும்

*(குரிச்சி ஸ்ரீ.உ.வே. நாராயணன், சென்னை)*

ஸ்ரீமத் அஹோபிலமடத்தில் 42ம் பட்டத்தில் எழுந்தருளியிருந்தவர் ஸ்ரீவண் ஶடகோப ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ திவ்யபாதுகா ஸேவக ஸ்ரீ ஸ்ரீரங்க ஶடகோப யதீந்த்ர மஹாதேஶிகன் ஆவார். இவர் இஞ்சிமேடு ஸ்ரீமத் அழகியசிங்கர் எனப் புகழப்படுவார். திருநக்ஷத்ரம் : தை உத்திராடம். *ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா* பத்ரிகை இந்த அழகியசிங்கரால்தான் ஆரம்பிக்கப்பட்டது. இதைக் குறிக்கும் வகையில் *ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா* வில் முதல் பக்கத்தில் அந்த அழகியசிங்கரின் படமும், அநுக்ரஹ மங்களாஶாஸந ஸ்ரீ ஸூக்திகளும் வருகின்றன. ப்ரக்ருதம் ஸ்ரீமத் அழகியசிங்கர் இந்த மஹானின் ஶிஷ்யராவார். மாலோல வித்வத் ஸதஸும், மதுராந்தகம் பாடஶாலையும் இஞ்சிமேடு ஸ்ரீமத் அழகியசிங்கரால் ஆரம்பிக்கப்பட்டன. தற்போது *ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா* வின் 60வது வருஷ பூர்த்தியை ஒட்டி, இப்பத்ரிகை ஆரம்பித்த இஞ்சிமேடு ஸ்ரீமத் அழகியசிங்கரின் கல்யாண குணங்களை நன்றி கூறும் வகையில் ஸவிநயம் விஜ்ஞாபிக்கிறேன். குறைகளைக் கவனியாமல் நிறைகளை மட்டும் கண்டு மகிழவேணும் என ப்ரார்த்திக்கிறேன்.

ஸ்ரீமத் ராமாயணத்தில் ஆரம்பத்தில் ஸ்ரீ வால்மீகி மஹர்ஷி பல நல்ல குணங்களைச் சொல்லி, இவை எவரிடத்தில் உள்ளன எனக் கேட்க, ஸ்ரீ நாரதரும் அத்துணை குணங்களும் ஸ்ரீ ராமனிடத்தில் நன்கு பொருந்தி உள்ளன என்றார். அக்குணங்களை, ராமனைப்போல் உதாஹரண புருஷராய் விளங்கிய இஞ்சிமேடு ஸ்ரீமத் அழகியசிங்கரிடம் பொருத்தி அநுபவிப்பதுண்டு. அவற்றை ஶக்திக்குத் தகுந்த முறையில் விண்ணப்பிக்கிறேன்.

1. குணவாந் :– ஸமஸ்த கல்யாண குணங்களை உடையவர். ப்ராஜபதி வாக்யத்தில் ஶுத்த ஜீவனுக்கு சொல்லப்பட்டபடியே அபஹதபாப்ம, ஸத்யகாம, ஸத்ய ஸங்கல்பாதி குணங்கள் பூர்ண ப்ரகாஶத்துடன் நிரம்பியவர். கெட்ட குணங்களுக்கு எதிரிடையானவர்.

2. வீர்யவாந் :– ஸகல ஶாஸ்த்ரங்கள், அருளிச் செயல்கள், ப்ரமாண வசநங்கள், அவ்வோ ஆஶ்ரமோசித அநுஷ்டாநங்கள், ஆஸ்தாந நிர்வாஹம் என்று இன்னும் பலவற்றையும் அநாயாஸமாகத் தரித்தவர்.

3. த[4]ர்மஜ்ஞ :– ஆலய ப்ரவேஶ அநந்தரம், தான் மிகவும் உகந்து அநுபவித்த வீரராகவன் ஸேவையை ஶாஸ்த்ராத் ப்ரவ்ருத்தி: ஶாஸ்த்ராத் நிவ்ருத்தி: என வருத்தமுடன் இழந்தவர். ''ஶாஸ்த்ர மர்யாதையிலிருந்து சிறிதும் பிறழாதவர்'' என்று கொண்டாடப்பட்டவர். பீஷ்மர் பிண்டப்ரதாநம் பண்ணியபோது தந்தையான ஸந்தநு மஹாராஜா நேரடியாகப் பெற்றுக்கொள்ளக் கையை நீட்டிய போதும் பூ[4]மௌ த[3]த்தேந பிண்டே[3]ந என்ற ஶாஸ்த்ரவஶ்யராய் பீஷ்மர் கையில் தர மறுத்து பூமியில் விட்டார் எனக் கேள்விப்பட்டிருக்கிறோம். அதைப் போல ஸ்ரீமத் அழகியசிங்கரின் அநுஷ்டாநமும் ஶாஸ்த்ரவஶ்யமாய் இருந்தது.

அன்றிக்கே, அலௌகிக ஶ்ரேயஸ்ஸாத[4]நம் என்றவாறே தன் புருஷகாரத்தால் ஆஶ்ரிதர்க்கு முக்தி ஶ்ரேயஸ்ஸை அளித்தவர் என்னவுமாம்.

4. க்ருதஜ்ஞ:– முக்யமாகத் தனக்கு வித்யோபதேஶம் செய்த குருவரர்களை நன்றியுடன் பூஜித்தவர். ஆஸ்தாநத்திற்கு எழுந்தருளிய பின்பும் திருப்பதியில் வித்யோபதேஶம் செய்த புரிசை ஸ்ரீ ஸ்ரீரங்காசார்ய ஸ்வாமி திருமாளிகை முன்பு பல்லக்கிலிருந்து இறங்கி வணங்கி நமக்கு வழிகாட்டியவர்.

5. ஸத்யவாதீ[3]:– திருஎவ்வுள்ளூரில் அழகியசிங்கரிடம் சில விஷயங்களைத் தெளியப்பெற மந்த்ரி ஒரு ஸமயம் வந்த போது, கைங்கர்யபரர்களும், ஶிஷ்யர்களும் அபிமாநத்தால் ஒரு உபாயத்தை விண்ணப்பிக்க, அதை இசையாத அழகியசிங்கரும் பரமாபத்க[3]தஸ்யாபி த[3]ர்மே மே ....என விபீஷணாழ்வான் கூறியபடி, உண்மையைச் சொல்லியே மந்த்ரியை உணரச் செய்வித்தவர்.

6. த்[3]ருட[4]வ்ரத :– சிறுவயது முதலே நல்வழியில் த்ருடமாக வர்த்தித்தும், பட்டாபிஷேகம் ஆனவுடன் தான் நினைத்திருந்தபடி **ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா பத்ரிகை, மாலோல வித்வத் ஸதஸ், மதுராந்தகம் பாடஶாலை என்ற மூன்று மஹத்தான கார்யங்களை**

ஆரம்பித்தும், மேலும் பல விதங்களில் குறிப்பாக **யந்முஹூர்த்தம் க்ஷணம் வாபி வாஸுதேவோ ந சிந்த்யதே...** என்றபடி பகவத் சிந்தனையை இமைப்பொழுதும் துறக்காதவராயும், **பரமாத்மநி யோ ரக்த: விரக்தோ அபரமாத்மநி । ஸர்வேஷணவிநிர்முக்தோ ஸ பை[4]க்ஷம் பே[4]ாக்துமர்ஹதி** என்பதின் எடுத்துக்காட்டாகவும் திகழ்ந்தவர்.

7. **சாரித்ரேண யுக்த: :- யஜ்ஞவேத் அக்[3]ரஹார:** எனப் புகழுடைய இஞ்சிமேடு ஸ்ரீக்ராமத்தில் அவதரித்து, மிக ப்ரஸித்த பூர்வாஶ்ரமக்யாதியுடன், ஆஶ்ரம ஸ்வீகார அநந்தரம் அநந்தமான ஸம்ப்ரதாய கைங்கர்யங்கள், அநுஷ்டாநம் முதலியவற்றால் புண்யஶ்லோகராய்த் திகழ்ந்தவர். **த்வமேவ மாதா ச பிதா த்வமேவ, வாஸுதேவ: பிதா மே** என்கிறபடியே பித்ரு வாச்யனான பகவானின் **ஶ்ருதிஸ்ம்ருதிர் மமைவாஜ்ஞா** என்கிற கட்டளையின்படியே நடந்து பித்ருவாக்ய பரிபாலநத்தைப் பூர்ணமாக நடத்திக் காட்டியவர். ஸ்ரீ ராமன் திருமுன்பே பாடப் பெற்று புனிதமடைந்த ஸ்ரீமத் ராமாயணம் போல, இவ்வழகியசிங்கர் திருச்செவி சாத்தி உகந்த **வைப[4]வஸுத[4]ா** (அழகியசிங்கரின் திவ்ய சரித்ரம்) புனித காவ்யமாகத் திகழ்கிறது.

8. **ஸர்வபூ[4]தேஷு ஹித :-** மநுஷ்யர்களிடத்தில் மட்டுமின்றி ஸகல ஜீவராஶிகளிடமும் தயை கொண்டவர். காலக்ஷேபம் ஸாதிக்கும் ஸமயத்தில் எறும்பு திருமேனியைக் கடித்தால் அவஸரமாக நம்மைப் போல் தேய்க்காமல், விரலால் மெள்ளத் தடவித் தள்ளிவிடுவதையும் மற்ற விஷயங்களையும் இஞ்சிமேடு ஸ்ரீமத் அழகியசிங்கரின் பூர்வாஶ்ரம தௌஹித்ரரும், அஸ்மத் ஆசார்யன் ஸ்ரீ.உ.வே. புரிசை ஸ்வாமி **ஆஹ்லாத ஶீதராய்** ஸாதிக்கும் போது கேட்டிருக்கிறேன். தேளைக் கொல்லாமல் கொடுக்கை மட்டும் கத்தரித்து விட்டு விடுமாறு நியமிப்பாராம். 'நம்மால் ஒரு எறும்பைக் கூட ஸ்ருஷ்டிக்க இயலாத போது ஜீவஹிம்ஸை பண்ணக்கூடாது' என ஸாதிப்பர். மேலும், அழகியசிங்கர் இரவு மர்யாதையை விநியோகிக்காமல் வைக்கச் சொல்லி, அகாலத்தில் வருபவர்களின் பசி தீர்த்த மஹான்.

9. **வித்[3]வான் :-** ஸர்வஶாஸ்த்ர பண்டிதர். வித்வான்கள் அழகியசிங்கர் ஸந்நிதிக்குச் செல்லும் போது என்ன கேட்டாகுமோ என பயபக்தியுடன் செல்வார்கள். ஒரு ஸமயம்

ஸ்ரீமத் ராமாயணத்தில் ப்ரஸித்திபெற்ற ஸ்மார்த்த உபந்யாஸகர் ஒருவர் ஸ்ரீமத் அழகியசிங்கர் ஸந்நிதியில் தண்டனிட்டபோது, ஸ்ரீமத் ராமாயணத்திலிருந்து **கலஶம் பூர்ணமாத³ாய... ப்ருஷ்ட²தோ அநுஜக³ாம ஹ** எனும் ஶ்லோகத்தை ஸாதித்து இதில் **ப்ருஷ்ட²த: அநுஜக³ாம** என ஒரே அர்த்தமுள்ள இரு பதங்களையும் புநருக்தியின்றி நிர்வஹிக்குமாறு நியமித்தார். அப்பண்டிதரும் விஸ்மிதராய் மௌநமாயிருக்க, ஸ்ரீமத் அழகியசிங்கர் அத்புதமான நிர்வாஹம் செய்தருளியது வித்வான்களிடையே ப்ரஸித்தமான ஸம்பவம். இப்படி ஒவ்வொரு ஸமயமும் புதுப்புது விஷயங்களை ஸாதிப்பது வழக்கமாம்.

அன்றிக்கே, தேவாதிராஜன் திருவடியில் ஆத்மபரத்தை ஸமர்ப்பித்து ஆனை மலையோனின் உளம் குளிரச் செய்தவர் என்னவுமாம்.

10. **ஸமர்த்த²:** :– பல விஷயங்களிலும் அநிதர ஸாதாரண வைகரியுடன் விளங்கினர். காலக்ஷேபத்தில் ஶிஷ்யரின் ஸந்தேஹத்தைப் போக்கிய விவரம் ஐப்பசி ஸ்ரீநృஸிம்ஹப்ரியா பக்கம் 147ல் காண்க. திருவுள்ளூரில் ஒரு ஸமயம் மழையின்மையால் ஜலக்கஷ்டம் ஏற்பட்டது. ஸ்ரீமத் அழகியசிங்கரிடம் ஒருவர் **யத்ர அஷ்டாக்ஷர ஸம்ஸித்தா** என்ற வசநத்தைச் சொல்லி அழகியசிங்கர் அஷ்டாக்ஷர ஸித்தியுடன் எழுந்தருளியுள்ளபோதும் பஞ்சம் உண்டாகியுள்ளதே எனக் கூற, கூடியிருந்தவர் பொங்கி எழ, அழகியசிங்கர் அமைதியுடன் மீண்டும் ஶ்லோகத்தைச் சொல்லச் செய்து, ''அதில் அஷ்டாக்ஷர ஸித்தி பெற்றவரை **பூஜிக்குமிடத்தில் தான்** பலன் சொல்லப்பட்டிருக்கிறது. என்மீது அபவாதங்களைச் சிலர் கூறியதால்தான் பலன் உண்டாகவில்லை'' என அருள, ஸர்வரும் கரம் கூப்பி, ஶிரம் தாழ்த்தி வணங்கினர்.

11. **ஸதை³கப்ரியத³ர்ஶந:** :– பரமஶாந்தராய், ஸர்வரிடத்திலும் ப்ரஹ்லாதனைப் போல் பகவானைக் காண்பவராய், அண்டினவர்களை ரக்ஷிப்பவராய், கண்களாலேயே அருகிப் பருகுமதான கடாக்ஷமுடையவராய், திவ்ய தேஜஸ்ஸுடன் **த³ர்ஶநாதே³வ ஸாத⁴வ:** என ஸேவித்ததும் நம் மலங்கள் நீங்கக் கூடியதான அவதார விஶேஷத் திருமேனியுடன் எழுந்தருளியிருந்தார்.

12. ஆத்மவாந் :- தைர்யமுடையவர். ஆத்மகுணங்கள் நிரம்பியவர். தம்மைப் பரமாத்மாவிற்கு ஶேஷமாக ஸதா நினைப்பவர். அஷ்டாக்ஷர அநுஸந்தாநபரர். ஸ்வநிஷ்டா-பிஜ்ஞாநத்தில் நிஷ்டை உடைய மஹான்.

13. ஜிதக்ரோத[4]:- கோபத்தை ஸ்ரீமத் அழகியசிங்கர் தன் வஶப்படுத்தியவர். இது ஸுப்ரஸித்தம். இந்தக் குணம் ஒன்றினாலேயே ஸர்வரையும் வஶப்படுத்தியவர். மத்வமடாதிபதி ஸத்யத்யாந தீர்த்தர் அழகியசிங்கரிடம் வாக்யார்த்தத்தில் தோற்றபிறகு, தம்மை ஆஶ்ரயித்த ஒருவரிடம் "திருவுள்ளூரில் ஒரு ஸிம்ஹம் எழுந்தருளியாயிருக்கிறது. வித்யைகளுக்கெல்லாம் அதிபதி. அவரிடம் அநுக்ரஹம் பெற்றுக் கொள்க" என்று நியமிக்கும்படி எதிரம்பு கோர்த்தவரையும் தன் வஶப்படுத்திய மஹான்.

14. ஸம்யுகே[3] (ஜாதரோஷஸ்ய) கஸ்ய தேவாஶ்ச பி[3]ப்[4]யதி? :- வாக்யார்த்தப் போரில் இதர ஸித்தாந்திகள் நடுங்கி ஓடும்படிச் செய்தவர். அத்வைதிகள் நிர்பந்தித்ததால் பூர்வாஶ்ரமத்தில் மதுரையில் அத்வைத ஸித்தாந்தத்தை நன்கு கண்டித்தார். மறுநாள் அத்வைத பண்டிதர் நம் ஸித்தாந்தத்தைப் பேச ஆரம்பிக்க, ஸ்ரீமத் அழகியசிங்கர் அவரை வாக்யார்த்தத்திற்கு அப்போதே அழைக்க, அவரும் அடங்கியது ஸுப்ரஸித்தம். மத்வமடாதிபதி ஸத்யத்யாந தீர்த்தரிடம் எடுத்த எடுப்பிலேயே ஸ்ரீ பாஷ்யகாரர் ஶைலியில் பலவித விகல்பப்ரஶ்நங்களால் மடக்கி சடக்கென வென்றவர். விஶிஷ்டாத்வைத ஸதஸ்ஸுகளில் எல்லோரையும் அரவணைத்துச் சென்று விஷயங்களைத் தெளிவிப்பர்.

15. வாக்[3]மீ :- வாக்ஸாமர்த்யமுடையவர். ஶாஸ்த்ரங்களில் கூறியபடி எப்போதும் ஸந்தோஷத்துடன் எழுந்தருளியிருப்பவர். நகைச்சுவை உணர்வு கொண்டவர். காலக்ஷேபத்தில் இடையே ஸம்ப்ரதாய விரோதமில்லாத சில ஹாஸ்யக் கதைகளை ஸாதிப்பாராம். பகவத்விஷயத்தில் **என் நினைந்து போக்குவர் இப்போது** என்ற பாசுர காலக்ஷேபத்தில் கதையாக — பரமைகாந்தி ஒருவரின் திருமாளிகையில் திருடன் மரத்திலேறித் தேங்காய் பறிப்பதைப் பார்த்து, அவஸரமாகப் பெருமாள் தீர்த்தத்தை மரத்தின் கீழே ப்ரோக்ஷித்து, திருடனுக்குக்

கேட்கும்படி உரக்க ''கீழே பெருமாள் தீர்த்தம், மிதிக்கலாகாது'' என்று கூறி வெள்ளிச் சொம்பையும் கவிழ்த்துவைத்து விட்டு (கை இடுக்கி அலம்பாமல் தொடக்கூடாது என்ற தன் ஆசாரத்தை எண்ணி) காவலரை அழைத்து வந்தாராம். வந்து பார்த்தால் திருடன் சொம்பையும் சேர்த்து எடுத்துப் போயிருந்தானும். அதைப் பார்த்து, ''அடடா! பெருமாள் தீர்த்தத்தையும் மிதித்து, கை அலம்பாமல் சொம்பை எடுத்துச் சென்றுவிட்டானே'' என்றாராம். ஆழ்வாரும் தாம் ஸதா பகவதநுபவத்தில் திளைப்பதால், ஸம்ஸாரிகள் வேறு எப்படிப் பொழுதைப் போக்கமுடியும் ? என்று எண்ணியதற்கு விளக்கமாக இக்கதையை ஸாதிப்பாராம்.

16. ப்ரஜாபதிஸம :– த்வம் மே என்றால் அஹம் மே எனும்படி எதிரம்பு கோர்க்கும் வர்கத்தை ஸ்ருஷ்டிக்கும் சதுர்முகன் போலன்றிக்கே, ஜ்ஞாந ஸம்பத்தால் **அதோ அஹமபி தே த[3]ாஸ:, அன்று நான் பிறந்திலேன், பிறந்த பின் மறந்திலேன்** எனும்படியான உத்தம ஸ்ரீவைஷ்ணவ ஶிஷ்ய வர்கங்களை ஸ்ருஷ்டித்து, இன்றளவும் லோகம் க்ஷீணிக்காமல் காப்பாற்ற **மானமிலா சிங்கமாய்** அவதரித்தவர்.

17. த[4]நுர்வேதே[3] ச நிஷ்டி[2]த :– ப்ரணவோ த[4]நு: ஶரோ ஹி ஆத்மா எனும்படியே தம் ஆத்மாவை பகவானின் திருவடிகளில் ஸமர்ப்பித்தது மட்டுமின்றி, ஆயிரமாயிரம் ஶிஷ்ய வர்கங்களின் ஆத்மாக்களையும் குறி தவறாமல் அடித்து ப்ரஹ்மத்தினிடம் சேர்த்து, **வதைக்கும் வில்போலன்றி முக்திக்கு விதைக்கும் விலக்ஷண வில்லாளி.** ஸார்த்தத்ரிமாத்ர ப்ரணவாநுஸந்தாநத்தாலும் த[4]நுர்வேதபரர் என்னவுமாம்.

18. ஸ்ம்ருதிமான் :– சுமார் 3000 ஶ்லோகங்களை எப்போதும் ஜ்ஞாபகத்தில் கொண்டவர். அது மட்டுமின்றி ஸ்ரீ பாஷ்யாதி க்ரந்தங்களில் ஒவ்வொரு அக்ஷரமும் எப்போதும் சொல்லக்கூடிய ஶக்தி கொண்டவர். இந்த மஹான் தாம் செய்தருளியவைகளுக்கெல்லாம் ஶிகரமாய் ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரத்திற்கு **ஸ்ரீ ஸாரபோதிநீ** என்றதொரு அத்புத வ்யாக்யாநமிட்டு ஜ்ஞாநதீபம் ஏற்றினர். ஶரணாகதி ஶாஸ்த்ரமான இக்க்ரந்தத்தை அப்யஸித்தால் பண்டிதராகலாம் எனப் பெரியோர் பணிப்பர்.

19. ஸர்வலோகப்ரிய:- அடியேன் இதுவரை இந்த மஹானைப் பற்றி லோகம் புகழ்ந்து பேசியதை மட்டும்தான் கேட்டுள்ளேன். அந்தரங்கமாயும் ஒருவர் கூட தூஷித்ததில்லை.

20. ஸத்யே த4ர்ம இவாபரே :- உண்மை (பரப்ரஹ்மத்தை) பேசுவதில் மற்றோர் தர்மதேவதை போன்றவர். நசிகேதஸுக்கு ஓர் வித்யை மட்டும் உபதேஶித்துப் பெயர் பெற்ற தர்ம தேவதை போலன்றிக்கே, ஸ்ரீ பாஷ்யாதி க்ரந்தங்கள் மூலம் த்3வாத்ரிம்ஶத் வித்யைகளையும் ஸத்ஶிஷ்யர்களுக்குப் பல ஆவ்ருத்தி உபதேஶித்து (அ) பரதர்ம தேவதையாய் விளங்கினார்.

21. த்யாகே3 த4நதே3ந ச :- பரமைகாந்திகள் திருவாராதநத்திற்குச் சிந்தைப் படாமலிருக்க வேண்டும் என்பதற்காக ஸதஸ்ஸில் நிரம்ப ஸம்பாவனை செய்து, போகவரப் செலவிற்கும் கொடுத்து, நமக்கு வழிகாட்டி, ஜிதகர்ண: எனும்படியாய் எழுந்தருளியிருந்தவர். அன்றிக்கே, தம் வாழ்வையே ஸ்ரீவைஷ்ணவத்திற்காக அர்பணம் செய்தவர் என்னவுமாம்.

22. ஸாது: :- பரமைகாந்தியாய், அநுஷ்டாந வைராக்யபரராய், ஸர்வபூதஹிதராய், ஸர்வஸமராய், ஆத்மகுணோபேதராய், பகவத் பக்தியிலேயே திளைத்தவராய், ஶாஸ்த்ர வாக்யங்களே வடிவு கொண்டாப் போலே திகழ்ந்தவர்.

मतिक्षयान्निवर्तन्ते न श्रीरङ्ग योगि गुणक्षयात्

॥ शुभम् ॥

॥ ஸ்ரீ: ॥

# மூடபக்தி

(குறிச்சி ஸ்ரீ நாராயணன், தூத்துக்குடி)

பகவானையும் ஶாஸ்த்ரங்களையும் உண்டு என்று ஏற்றுக் கொள்பவரை ஆஸ்திகர் எனவும், இல்லை என்பவரை நாஸ்திகராகவும் கூறக் கேட்டுள்ளோம். ஸ்ரீ அப்புள்ளார் என்கிற வாதிஹம்ஸாம்புவாஹாசார்யர் என்பவர் ஸ்வாமி ஸ்ரீ தேஶிகனுக்கு மாமா என்ற உறவுடன் ஆசார்யருமாவார். இவ்விஷயத்தில் ஸ்ரீ அப்புள்ளார் அருளி இருப்பதாவது - ஸ்ரீமந்நாராயணனை மிக உயர்ந்தவனாக மட்டும் நினைத்து, ஆஶ்ரயிக்காமல் விலகி இருப்பவர் மானிடரில் மிகவும் தாழ்ந்தவன் என்கிறார். பரமபுருஷன் எல்லோரைவிட உயர்ந்தவன் என்றும், நாம் மிகவும் தாழ்ந்தவர்கள் என்ற விவேகம் இல்லாதபோதும், கோகுலத்தில் இடைச்சிகள் கண்ணனை நம்பி ப்ரீதியுடன் பழகியதைப் போல் பகவானை அணுகி வணங்குபவனே பரம ஆஸ்திகன் என்றார். (விவேகமுமிருந்து, ஸௌலப்யத்தையும் அறிந்து ஆஶ்ரயித்தால் அது மிக விஶேஷம் என ஆசார்யர்கள் உரைவிட்டுள்ளனர்.) அப்புள்ளார் நாஸ்திகனைப் பற்றிக் கூறவில்லையே என்கிற கேள்வி எழுகிறது. பகவான் இல்லை என்பவரும், பகவான் நமக்கு ஸ்வாமி என்று அறியாதவரையும் அஸந்நேவ - இல்லாதவராகவே, அதாவது நடக்கும் பிணம் போன்றவர் என்று வேதம் கூறுகிறது. எனவே, பகவான் இல்லை என்பவரைப்பற்றிப் பேசுவதும் வ்யர்த்தமாகையால் , அப்புள்ளார் அது பற்றி ஏதும் ஸாதிக்கவில்லை.

கோகுலத்தில் இடைச்சிகள் கொண்ட பக்தியை உயர்வாக ஶாஸ்த்ரங்களில் கூறப்பட்டுள்ளது. இடைச்சிகளின் ப்ரேமபக்தி வேதாந்த நூல்களைப் பயின்றதன் மூலம் வந்ததன்று. இப்படி ப்ரேமையால் அன்பு கொள்வதை மூடபக்தி என உலகில் வழங்குவதுண்டு. மேலோட்டமாகப் பார்த்தால் மூடபக்தி என்கிற வார்த்தை கௌரவக் குறைவாக - இளப்பமாகக் கூறுவதாகவே தோன்றும். ஆனால் மூடபக்தியே/நம்பிக்கையே பக்தியின் எல்லை என்பதையும், வெறும் ஜ்ஞாநத்தைக் காட்டிலும் ஶ்லாக்யமானது என்றும், இப்படிப்பட்டவரையே

மாஸ்த்ரங்களும், பூர்வரும் கொண்டாடுகிறார்கள், தாங்களும் அநுஷ்டித்தார்கள் என்பதைக் குறிக்கும் சில கதைகளை அநுபவிப்போம். இந்த வகையில்தான் அப்புள்ளாரின் குறிப்பும் அமைந்திருக்கிறது. ஆண்டாள் பாற்சோறு மூட நெய்பெய்து என்று பாடியதில் சர்க்கரைப் பொங்கல் முழுவதும் மூடும் - மறைக்கும் அளவு நெய்விட்டு என்றாள். அந்த வகையில் மூடபக்தி (நம்பிக்கை) என்பது முழுமையான பக்தி என்றே ஆகிறது. அப்படிப்பட்டவர்களுக்கு ஏன் ? எதற்கு ? என்பது போன்ற கேள்விகள் எழாது. அன்பால் நம் மனது முழுவதும் நிறைந்ததான பக்தி என்றே அர்த்தமாகிறது. கார்யவாதியாக/கபடமாக இருந்தால் இது பலனளிக்காது. ராமனை சரண் அடையும் பொழுது, விபீஷணன், தான் ராவணனின் தம்பி, யுத்த ஸமயத்தில் வருகிறோமே என்று ராமன் நினைப்பாரா என்றெல்லாம் ஆராயாமல் துளியும் ஸந்தேஹமின்றி முழு நம்பிக்கையுடன் அன்றே ஆம்ரயித்தார்.

(1) **பெரியாழ்வார் :** ஸ்ரீவில்லிபுத்தூரில் ஆனி ஸ்வாதியில் கருத்மானின் அம்மமாக அவதரித்தார். **விஷ்ணுசித்தர்** என்பது திருநாமம். பகவத் தாஸ்யத்வம் வெறும் எண்ணத்துடன் நின்றுவிடாது. ஏதாவது கைங்கர்யம் (வேலை) செய்தால்தான் ஸித்திக்கும் என்ற வசநப்படி ஆராயும்போது, க்ருஷ்ணாவதாரத்தில் தானே மாலாகாரர் வீட்டுக்குச் சென்று பூக்களைக் கேட்டுப் பெற்றதால் பகவானுக்குப் புஷ்பகைங்கர்யம் பிடித்தமானது என்று அதைச் செய்து வந்தார். கூடல் எனப்படும் மதுரையிலே ஸ்ரீ வல்லபதேவன் என்ற பாண்டிய மன்னன் பரதத்வ நிர்ணயம் செய்ய ஸதஸ் ஏற்படுத்திப் பெரும் தொகையைப் பரிசாக அறிவித்தான். வடபத்ரமாயீ விஷ்ணுசித்தரின் கனவிலே தோன்றி "நீர் சென்று ஸ்ரீமானான நாமே பரதத்வம் என்பதை நிர்ணயம் செய்க. நாம் ஸஹாயமாய் இருக்கிறோம்" என்று நியமித்தார். அதன்படியே விஷ்ணுசித்தரும் வேண்டிய வேதங்கள் ஓதி விரைந்து கிழி (பரிசை) அறுத்துப் பாண்டியனால் பட்டர்பிரான் என்று கொண்டாடப் பெற்றார். ஆழ்வாரைப் பட்டத்து யானை மீது ஏற்றி அரசனே சாமரம் வீச, நகர்வலம் வந்தனர். பிள்ளைகள் பெறும் சிறப்பைப் பெற்றோர் காண விரும்பும் வகையில் ஆழ்வாரைக் காண எம்பெருமானும் பிராட்டிமார் புடைசூழ கருடன் மீது வானிலே ஸேவை ஸாதித்தான். இதை ஸாக்ஷாத்கரித்த ஆழ்வார்

தம் சிறப்பை நினைத்து கர்வமடையாமலும், எம்பெருமானுடைய ஸர்வஜ்ஞத்வ, ஸர்வஶக்தித்வாதிகளை அநுஸந்திக்காமலும், பகவானின் ஸௌந்தர்ய, ஸௌகுமார்ய, லாவண்ய, யௌவநாதிகளைக் கண்டு, பக்தி மேலிட்டால், அரக்கரும் அஸுரரும் அவர் போன்றவரும் நிறைந்த இருள் தரு மாஞாலத்தில் கண்ணுக்கு இலக்காகும்படித் தோன்றினை! பகவானுக்கு என்ன தீங்கு வருமோ என பயந்து யானை மேலிருந்த மணிகளை எடுத்துக்கொண்டு பல்லாண்டு பல்லாண்டு என பகவானுக்குக் காப்பிடும் வகையில் மங்களாஶாஸநம் செய்தார்.

ராஜஸபையில் வேதங்களை ஓதி பரதத்வ நிர்ணயம் செய்த ஆழ்வார், ப்ரேம பக்தியின் மேலீட்டால் ஜ்ஞாநம் பின்தள்ளப்பட்டு ஸர்வேஶ்வரனுக்குப் பல்லாண்டு இசைத்தாரன்றே! இப்படியே மற்ற ஆழ்வார்களின் அநுபவமும் இருக்கும்.

(2) வ்யாஸ பகவான் ஒரு நாள் கலக்கத்துடன் இருந்தார். அப்போது நாரதர் அங்கு வந்தார். வ்யாஸர் நாரதரை வரவேற்று உபசரித்தார். தங்களைப் பார்த்தால் கலக்கமாக உள்ளதுபோல் தெரிகிறதே என்றார் நாரதர். அதற்கு வ்யாஸரும் "நான் வேதங்களை நான்காகப் பிரித்தேன். ப்ரஹ்மஸூத்ரம், மஹாபாரதம் இயற்றினேன். எண்ணற்ற உரைகளும், உபதேஶங்களும் ஶிஷ்யர்களுக்கு போதித்துள்ளேன். ஆயினும் என் மனம் த்ருப்தி அடையவில்லை" என்றார். நீர் ஜ்ஞாநத்தை அதிகமாக போதித்து லோக உபகாரம் செய்தீர். பகவானின் திரு அவதாரங்களை வர்ணிக்கும் விதமாக யாவரும் அநுபவிக்கும்படி ஒரு புராணம் செய்தால் உமக்கு மநஸ் ஶாந்தி கிடைக்கும். உலகும் உய்யும் என்றார் நாரதர். அதன்படியே பக்திஸாரமாக, அநுபவிப்பதற்கு அமுதம் போன்ற ஸ்ரீமத் பாகவதத்தை அநுபவித்து அருளி, தாமும் ஶாந்தி ரஸத்தைப் பெற்றார்.

(3) ஒரு ப்ரஹ்மசாரி குருவை வணங்கித் தன்னை ஶிஷ்யனாக ஏற்கும்படி ப்ரார்த்தித்தான். அதிக அறிவு, புத்திஶாலியாக இல்லாத காரணத்தால் இவனுக்கு உபதேஶிக்க குருவிற்கு இஷ்டமில்லை. ஆனாலும் அவன் விடாப்பிடியாக வந்து கொண்டிருந்தான். கோபமுற்ற குரு (ஸம்ஸ்க்ருதத்தில்) ஒரு வாக்யத்தைக் கூறி இங்கேயே இருந்து இதையே ஜபித்துக் கொண்டிரு என்று கூறி, தான் யாத்ரை சென்றுவிட்டார். அந்த ஆஶ்ரம ஸமீபம் இரு மலைகள் இருந்தன. குரு சொன்ன

வாக்யத்தின் பொருளாவது - அந்த மலை இந்தப்பக்கம் வரட்டும், இந்த மலை அந்தப் பக்கம் போகட்டும் என்பதாகும். ஶிஷ்யனும் இதன் பொருள் தெரியாதபோதும் மிகுந்த நம்பிக்கையுடன் இதை உச்சரித்து வந்தான். இவனது ஏகாக்ர சித்தத்தாலும், ஆசார்யன் வார்த்தை மீது கொண்டிருந்த அசைக்க முடியாத நம்பிக்கையாலும், அசையாத மலைகளும் இப்படியும் அப்படியும் அசைந்தன. சிலகாலம் கழித்துத் திரும்பி வந்த குரு இதைக் கண்டு ஆஶ்சர்யப்பட்டு, அவனைக் கொண்டாடி ஆஶீர்வதித்தார்.

*(4)* எல்லா ஶாஸ்த்ரங்களும் கற்றுணர்ந்து, ஜ்ஞாநம்தான் உயர்ந்தது என்று சிறிது கர்வமுடன் இருந்த உத்தவருக்கு, வேதாந்த ஜ்ஞாநம் கொஞ்சமும் இல்லாத இடைச்சிகளுடைய ப்ரேம பக்தியின் உயர்வை உணர்த்த கண்ணன் அவரை கோகுலத்திற்கு அனுப்பினார். அங்கு நந்தகோபர், யஶோதையை ஸந்திக்கிறார். நந்தகோபர் - உத்தவா ! தினமும் எங்களுக்குக் கண்ணன் நினைவுதான். நேற்று கண்ணன் அந்தக் கதம்ப மரத்தின்மேல் உட்கார்ந்து புல்லாங்குழல் வாசிப்பது போல் தோன்றிற்று. கண்ணனுக்குப் பசிக்குமே என்று வெண்ணெயும் கற்கண்டும் எடுத்துக் கொண்டு புறப்பட்டேன். மரத்திலும் ஏறினேன். கண்ணன் மரத்தின்மேல் தென்படுகிறான். ஆனால் கைக்கு அகப்படவில்லை என்றார். யஶோதை - இரவு முழுவதும் கண்ணன் தொட்டிலிலே தூங்கிக் கொண்டிருப்பதைக் கண்டேன் என்றாள். கோபிகள் - ஒருத்தி : நேற்று குழலோசை கேட்டுச் சுற்றும் முற்றும் பார்த்ததில் மரத்தின் மேல் கண்ணன் தென்பட்டான். அவனைப் பார்த்ததும் மயக்கமே ஏற்பட்டு உடல் உணர்ச்சி அற்றுப்போனேன். தண்ணீர் எடுக்க வந்த நான், குடத்திற்குப் பதிலாக என் குழந்தையின் கழுத்தில் கயிற்றைக் கட்டிவிட்டேன். கண்ணன் உடனே ஓடி வந்து என்ன செய்கிறாய் ? என்று அதட்டி குழந்தையைக் காப்பாற்றி எங்களை வீடு வரை கொண்டு விட்டான், என்றாள். இன்னொருத்தி - நேற்று இரவு தண்ணீர் எடுக்க யமுனைக்குத் தனியாகச் சென்றபோது, கண்ணன் வந்து என் பானையைத் தலையில் வைக்க உதவி, வழித்துணையாகப் பேசிக் கொண்டே வீடுவரை வந்தான் என்றாள். ராதையின் பக்தியை நேரில் கண்டதும் உத்தவருக்கு மெய்சிலிர்த்தது. உத்தவர் நினைக்கிறார் - ஜ்ஞாநம் பெறுவது ஒரு விஷயம் - அதைத் தினசரி வாழ்க்கையில் பின்பற்றி அநுபவிப்பது வேறு விஷயம். என் அறிவு வறட்டு அளவு. நான் புத்தியினால் மாத்ரம் ப்ரஹ்மம்

எங்கும் பரந்துள்ளது என்று கருதிவந்தேன். ஆனால் அதை ப்ரத்யக்ஷமாக அநுபவிக்கவில்லை. ஆனால் கோகுல வாஸிகள் தினசரி நேரில் அநுபவிக்கிறார்கள். இவர்களுக்குத் தொட்டிலில், மரத்தில், நதிக்கரையில் என எல்லா இடங்களிலும் கண்ணன் தென்படுகிறான். பெரிய பெரிய யோகிகள் ஸமாதியில் அமர்ந்து உலகை மறக்க முயற்சிக்கிறார்கள். ஆனாலும் அது கடினமாக உள்ளது. எல்லாம் கண்ணன் என்ற பாவம் ஸுலபத்தில் அவர்களுக்கும் ஏற்படுவதில்லை. அப்படி இருக்க இந்த ப்ருந்தாவநத்து கோபிகளால் ஒரு நொடிப்பொழுது கூடக் கண்ணனை மறக்க முடிவதில்லை. இவர்களுக்கு உலக நினைவே வருவதில்லை. நாலைந்து நாட்கள் மட்டும் தங்கி கோபிகளுக்கு உபதேசம் செய்யக் கருதி வந்த உத்தவர் 6 மாதங்கள் தங்கி ப்ரேம பக்தியின் பெருமையை உணர்ந்து ஆநந்தம் பெற்றார். உத்தவரிடம் நந்தகோபர் கண்ணனிடம் சொல்லுமாறு இரு விஷயங்களைக் கூறுகிறார் – (i) உத்தவரே ! என் மனது ஸதா ஸ்ரீ க்ருஷ்ணனையே சிந்திக்கும்படிச் செய்யச் சொல்லவும் (ii) என் கர்மங்களால் நான் மறுபிறவி எடுத்தால் எப்போதும் க்ருஷ்ண கதை, க்ருஷ்ண கீர்த்தனை கேட்டுப் பிறவிப்பயன் பெறும்படி ஒரு வைஷ்ணவ குடும்பத்தில் பிறக்கும்படிச் செய்யச் சொல் என்கிறார்.

(5) காஞ்சிபுரத்தில் மலைமேல் பெருமாள் ஸந்நிதி பின்புறத்தில் ஸ்ரீ நடாதூர் அம்மாள் காலக்ஷேபம் ஸாதிப்பார். ஸ்ரீ பாஷ்யத்திற்கு அம்மாளின் விளக்கங்களே ஶ்ருத ப்ரகாஶிகை எனும் வ்யாக்யாநமாக உருவெடுத்தது. இப்படிப்பட்டவரும் வரதனுக்குப் பால் நிவேதநம் செய்யும்போது சூடாற்றி ஸுகோஷ்ணமாக ஸமர்ப்பிப்பார். பகவானுடைய கண்களிலிருந்து ஸூர்யன் தோன்றினான் என்கிறது வேதம். அப்படிப்பட்ட பகவானைக் கொதிக்கும் பால் சுட்டா விடும் ? என்றெல்லாம் ஆராயாத அன்பின் ஆதிக்யத்தால் அன்றோ அம்மாளும் பக்வமாக ஸமர்ப்பித்தார் !

அம்மாளின் காலக்ஷேப கோஷ்டி நடக்கும் வேளையில் ஒரு வித்வான் அந்தப் பக்கமாகச் செல்வார். ஆனால் அம்மாள் அவருடன் வார்த்தை ஏதும் சொல்லமாட்டார். ஒரு உஞ்சவ்ருத்தி ப்ராஹ்மணரும் செல்வார். அப்போது அம்மாள் காலக்ஷேபத்தை நிறுத்திவிட்டுச் சிறிது நேரம் அவருடன் குஶலப்ரஶ்நம் செய்தருளுவார். இதைக் கண்ட ஶிஷ்யர்களுடைய மனதில் ஒரு ஸந்தேஹம் எழுந்தது. அதை ஒரு நாள் அம்மாளிடம்

விஜ்ஞாபித்தனர். ஸ்வாமி ! அந்தப் பண்டிதரிடம் பேசாத தேவரீர் (பாமர) உஞ்சவ்ருத்தி ப்ராஹ்மணருடன் மட்டும் பேசுவது ஏனோ ? திருவுள்ளமிருந்தால் விளக்க வேணும் என்றனர். அம்மாள் புன்சிரிப்புடன் நாளை பதில் சொல்கிறேன் என்றார். மறுநாள் முதலில் பண்டிதர் வந்தார். அம்மாள் அவரை நிறுத்திக் கேட்டதாவது - வேதத்தில் ப்ரஹ்மம் என்பது ஸத என்கிறது, ஶிவன் என்கிறது, இந்த்ரன், ப்ரஹ்மா இப்படி எல்லாம் கூறுகிறது. எது சரியானது என்று ஸந்தேஹம். நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் ? என்றார். அதைக்கேட்ட பண்டிதரும் எனக்கும் வெகுநாட்களாக அதே ஸந்தேஹம்தான் என்றார். அம்மாள், சரி என்று அவரை அனுப்பினார். பிறகு உஞ்சவ்ருத்தி ப்ராஹ்மணர் எழுந்தருளினார். அம்மாள் அவரிடமும் பண்டிதரைக் கேட்டதையே திரும்பிக் கேட்டார். இதைக் கேட்டதும் அந்த ப்ராஹ்மணர் – "ஹே தேவாதிராஜா ! நீ தான் பரப்ரஹ்மம் என்பதை வ்யாஸர் மும்முறை ஸத்யம் செய்து – ஸத்யம் ஸத்யம் புநஸ்ஸத்யம்...... ந தைவம் கேஶவாத் பரம என்று கூறியுள்ளாரே. இது கூடவா தெரியாமல் காலக்ஷேபம் செய்து வருகிறீர்கள் ? இவ்வளவு நாள் நான் தங்களுடன் பழகினதே பாபம்" என்று கூறிச் சொம்பை அங்கேயே போட்டுவிட்டு அநந்தஸரஸ் என்கிற கோவில் புஷ்கரிணியில் ப்ராயஶ்சித்த ஸ்நாநம் செய்யச் சென்றார். படித்தும் பண்டிதரிடம் தெளிவு இல்லை. உஞ்சவ்ருத்தி ப்ராஹ்மணரோ படிக்காவிடினும் நிஶ்சய ஜ்ஞாநம் உள்ளவர். இவரே கொண்டாடத் தக்கவர் என்பதை ஶிஷ்யர்களுக்கு எடுத்துக்காட்டித் தான் பழகியதன் காரணத்தை அம்மாள் புரிய வைத்தாராம்.

ஶாஸ்த்ர ஜ்ஞாநம் மிகவும் கஷ்டமானது. அது சிலருக்கே கைகூடும். பொதுவாக இதுவா - அதுவா ? இப்படியா-அப்படியா ? என்றவாறெல்லாம் புத்தியைச் சலிக்கச் செய்யும். ஆகவே ஆசார்ய உபதேஶத்தால் ஹரிஸ்மரணம் செய்வதே ஶ்லாக்யம் என்று ஶாஸ்த்ரம் கூறுகிறது. **நஹி நஹி ரக்ஷதி டுக்ருஞ் கரணே** என பஜ கோவிந்தத்தில் உள்ளது.

பகவானிடம் முழு நம்பிக்கை, பக்தி வைப்பதே அவஶ்யமானது. இதற்கு விஶேஷமான ஶாஸ்த்ர ஜ்ஞாநம் அவஶ்யம் இருக்க வேண்டும் என்பதில்லை. முதலில் கூறிய மாதிரி ஜ்ஞாநமும் சேர்ந்த பக்தி உந்நதமாகும்.

॥ शुभम् ॥

॥ श्रीः ॥

# கீதா ரஸம்

*(குரிச்சி ஸ்ரீ நாராயணன், சென்னை)*

**ஸ்ரீ பகவத்கீதை** வாழ்க்கை நடைமுறைக்குப் பெரிதும் உதவுவதால்தான் அது போற்றிக் கற்கப்படுகிறது. கீதையின் உபதேசத்தைப் பின்பற்றி தேசிக தர்சநமாகிற ராஜபாட்டையில் செல்கிற நமக்கு அன்றாட வாழ்க்கைக்காக கீதை காட்டும் சில ரஸமான குறிப்புகளை ஸவிநயம் விஜ்ஞாபிக்கிறேன்.

***1. எம்பெருமானின் கல்யாண குணங்களை வெளிப்படுத்தும் ச்லோகங்களில் சில :—***

पाञ्चजन्यं हृषीकेशो देवदत्तं धनञ्जयः । (1-15)

அர்ஜுநனுக்கு ஸாரதியான பகவான் பாஞ்சஜந்யம் என்கிற சங்கை ஊதினான். பகவான் பக்தர்களுக்காகத் தன் வார்த்தையை மாற்றிக் கொள்வானே தவிர ஒருபோதும் பக்தரின் வார்த்தை பொய்யாகும்படி விட மாட்டான். ஆயுதம் எடுக்கமாட்டேன் என்ற தன் ப்ரதிஜ்ஞையை பீஷ்மாசார்யரின் முன்னே சக்ராயுதம் எடுத்து மீறிய விஷயம் யாவருமறிந்ததே. பகவான் அதற்கும் முன்னே சங்காயுதத்தை எடுத்துவிட்டதை இந்த ச்லோகத்தின் மூலம் காண்கிறோம். சங்கம் ஆயுதமாகுமா ? எனில் — சங்கம் பஞ்ச ஆயுதங்களில் ஒன்றாகும். மேலும், स घोषो धार्तराष्ट्राणां हृदयानि व्यदारयत् - அந்த சங்கத்தின் ஒலி கௌரவர்களின் இதயம் நடுங்கும்படிச் செய்தது என அந்த ஒலியால் ஏற்பட்ட விளைவும் கீதையில் கூறப்பட்டுள்ளது. தவிர யுத்தம் செய்பவர்கள்தான் சங்கை ஊதினார்களே தவிர, ஸாரதி ஊதியதாக இல்லை. பகவான் அந்த வேளையில் ஸாரதியாக - தேரோட்டியாக இருந்ததால் சங்கை ஊதி இருக்க வேண்டியதில்லை. எனவே, பீஷ்மர் சொன்ன வார்த்தை **(கண்ணனை ஆயுதம் எடுக்கச் செய்கிறேன்)** உண்மையாகும் பொருட்டு யுத்த ஆரம்பத்திலேயே பகவான் ஆயுதத்தை எடுத்தான். ஒருமுறை சக்ரம் எடுத்ததை **ஏதாவது ஒரு காரணத்தினால் ஆயுதம் எடுத்ததாகாது என ஒரு வேளை உலகம்**

***கூறிவிடுமானால், பக்தரின் வார்த்தை பொய்யாகிவிடுமே என்று*** *பயந்து, பகவான் முதலிலேயே ஆயுதத்தை எடுத்துக் கொண்டான். மேலும், ஜயத்ரதவதத்தின் போதும் எடுத்து, ஒன்றுக்கு பல முறை ஆயுதம் எடுத்துத் தன் பக்தஜந வாத்ஸல்யத்தை ப்ரகாஶிப்பித்தான்.*

एवमुक्तो हृषीकेशो गुडाकेशेन भारत ! ।
सेनयोः उभयोर्मध्ये स्थापयित्वा रथोत्तमम् ।। (1-24)

*ஸர்வேஶ்வரனான பகவான் அபார காருண்ய, ஸௌஶீல்ய, வாத்ஸல்ய, ஔதார்ய குணங்களுக்கு ஏற்ப, நம் போல்வாரும் (பாமரர்களும்) ஆஶ்ரயிக்க அவதரித்து,* **ஸகலமநுஜநயந விஷயதாம் கத:** *என யாவரும் ஸேவிக்கும்படியாய், தேரோட்டியாய், அர்ஜுநனால் ஏவப்பட்டு, தேரை இரு ஸேனைகளின் மத்தியில் நிறுத்தினான் என்று ஸ்ரீ ராமாநுஜர் அநுபவிப்பதை உணர்ந்தால், பகவானின் கல்யாண குணங்கள் நம் மனதை உருக்கும்.*

***2. அத்வைத ஸித்தாந்த கண்டநம் :—***

न त्वेवाहं जातु नासं न त्वं नेमे जनाधिपाः ।
न चैव न भविष्यामः सर्वे वयमतः परम् ।। (2.12)

*இந்த 12வது ஶ்லோகம் முதல்தான் உபதேஶ ஆரம்பம். முன் ஶ்லோகத்தில் அர்ஜுநன் கூறியதில் முரண்பட்ட அம்ஶங்கள் உள்ளதாகப் பரிஹஸித்தான். இந்த ஶ்லோகத்தில் ஆத்ம தத்வத்தை ஜீவநித்யத்வத்தை உபதேஶிக்கிறான். நான், நீ, இந்த அரசர்கள் என ஸ்பஷ்டமாகப் பிரித்துக் கூறியதால் பரமாத்ம - ஜீவாத்ம பேதமும், ஜீவாத்மாக்களுள் ஒவ்வொருவருக்கும் உள்ள பேதமும் ஸத்யம் என பகவான் கூறியுள்ளதால் (ப்ரஹ்மம் தவிர அனைத்தும் பொய் என்கிற) அத்வைத ஸித்தாந்தம் நன்கு கண்டிக்கப்பட்டது.*

***3. அவித்யையை நீக்கும் ஶ்லோகங்கள் :-***

*ஸம்ஸார பந்தத்திற்கு அவித்யையே மூலகாரணமாக ஶாஸ்த்ரங்களில் கூறப்பட்டுள்ளது. அது தேஹாத்ம ப்ரமம், ஸ்வதந்த்ராத்மப்ரமம் என இரு வகைப்படும். தேஹாத்ம*

ப்ரமத்தை - (ஶரீரத்தையே ஆத்மாவாக எண்ணுதல்) நீக்க உதாஹரணமாய் கீழ்க்கண்ட ஶ்லோகம் வருகிறது–

अन्तवन्त इमे देहाः नित्यस्योक्ताः शरीरिणः ।
अनाशिनोऽप्रमेयस्य तस्मात् युध्यस्व भारत ॥ (2-18)

(ஜீவன் ஶரீரம் இரண்டும் வெவ்வேறு). ஶரீரம்தான் அழியக் கூடியது. ஜீவாத்மா நித்யமானது. எனவே அழியக் கூடிய ஶரீரத்தை ஆத்மாவாக எண்ணுவது தவறு.

ईश्वरः सर्वभूतानां हृद्देशेऽर्जुन तिष्ठति ।
भ्रामयन् सर्वभूतानि यन्त्रारूढानि मायया ॥ (18.61)

எல்லாவற்றையும் நியமிக்கிற வாஸுதேவன், எல்லா ப்ராணிகளுடைய ஹ்ருதயத்தில் இருந்து ப்ரவ்ருத்திக்கும்படிச் செய்கிறான். **ஸர்வஸ்ய சாஹம் ஹ்ருதி[3] ஸந்நிவிஷ்ட:** *(15.15)*, **மத்த: ஸர்வம் ப்ரவர்ததே** *(10.8)*, **ய ஆத்மநி திஷ்டன், அந்த: ப்ரவிஷ்டஶ்ஶாஸ்தா ஜநாநாம்** என்கிற வசநங்களும் இவ்விதமே சொல்லுகின்றன. எனவே ஜீவன், தான் ஸ்வதந்த்ரன் என எண்ணாமல், பகவததீநம் என்று உணர வேண்டும்.

**4. ஸாத்விக த்யாகத்தை விதிக்கும் இடம் :—**

मयि सर्वाणि कर्माणि सन्यस्याध्यात्मचेतसा ।
निराशी निर्ममो भूत्वा युध्यस्व विगतज्वरः ॥ (3.30)

ஸர்வேஶ்வரனாயும், ஸர்வாந்தராத்மபூதனாயுமிருக்கிற பகவானிடத்தில், நமக்கு ஆசார்யனால் உபதேஶிக்கப்பட்டுக் கிட்டிய ஜ்ஞாநத்தை முன்னிட்டு நாம் செய்யும் எல்லா ஶாஸ்த்ரீய கர்மாக்களையும் பகவானே நம்மைக் கொண்டு செய்வித்து, அந்தப் பலனையும் பெறுகிறான் என அர்ப்பணம் செய்ய வேண்டும். (भगवानेव स्वनियाम्य....) இதுவே முமுக்ஷுக்கள் முக்யமாகச் செய்ய வேண்டியதாகும்.

**5. ரஹஸ்யமான உபதேஶம் :—**

ये मे मतमिदं नित्यं अनुतिष्ठन्ति मानवाः ।
श्रद्धावन्तोऽनसूयन्तो मुच्यन्ते सर्वकिल्बिषैः ॥ (3.31)

முன் கூறிய ஸாத்விகத்யாகமே ஶாஸ்த்ரார்த்தம், பகவானுடைய மதம் என அறிந்து (ஸாத்விக த்யாகத்தை) அநுஷ்டிக்கிறவர்களும், அநுஷ்டிக்காவிடிலும் இந்த விஷயத்தில் விஶ்வாஸமுள்ளவர்களும், விஶ்வாஸமில்லாவிடிலும் இப்படி அர்த்தம் உண்டாகாது என அஸூயைப் படாமல் இருக்கிறார்களோ அவர்களும் ஸம்ஸார பந்தத்திற்குக் காரணமான புண்ய பாபங்களிலிருந்து விடுபடுகிறார்கள். அதில் அநுஷ்டிப்பவர் ஸாக்ஷாத் பலன் பெறுவர். மற்ற இருவருக்கும் பரம்பரயா (படிப்படியாக) நற்கதி உண்டாகும்.

இப்படி ஒன்றைச் செய்பவர் பெறும் பலனைச் செய்யாதவரும் பெறக் கூடுமோ? எனில்

**தர்ம: ஶ்ருதோ வா த்[2]ருஷ்டோ வா ஸ்ம்ருதோ வா கதி[2]தோபி வா ।**
**ஆமோதி[3]தோபி வா ராஜந் । புநாதி புருஷம் ஸதா ॥**

தர்மத்தைக் கேட்டாலும், பார்த்தாலும், எண்ணினாலும், சொன்னாலும், ஆமோதித்தாலும், பரிஶுத்தி உண்டாகும் என்கிற வசநப்படி அநுஷ்டிக்காதவர்களுக்கும் த்வேஷமின்மையால் பாபம் நீங்கி, அநுஷ்டிக்கும்படியான நிலை வரும் எனப் பலன் கூறப்பட்டுள்ளது. எனவே தர்ம கார்யங்களைச் செய்யாவிடிலும், குறை கூறாமல் அதை மனதாரப் புகழ்வதே பலன் தரும் என்கிற ரஹஸ்ய உபதேஶம் இங்கு கிடைக்கிறது.

**चातुर्वर्ण्यं मया सृष्टं गुणकर्मविभागशः ।**
**तस्य कर्तारमपि मां विद्ध्यकर्तारमव्ययम् ॥** (4.13)

ஸ்ருஷ்டியில் தேவ மநுஷ்யாதி ஜாதியும், ப்ராஹ்மணாதி வர்ணங்களையும் பகவான்தான் ஏற்படுத்தினான். அப்படிச் செய்கையில் பகவான் தன் இஷ்டப்படிச் செய்யாமல் அவரவர் கர்மாவிற்கு ஏற்பவே செய்தான் என்று உணர்ந்தால் பாபங்களிலிருந்து விடுபடலாம் என்கிறது இன்னொரு ரஹஸ்யார்த்தம்.

***6. பகவானை அநுஸந்திக்க உதவும் சில ஶ்லோகங்கள் :–***

भोक्तारं यज्ञतपसां सर्वलोकमहेश्वरम् ।
सुहृदं सर्वभूतानां ज्ञात्वा मां शान्तिमृच्छति ॥ (5.29)

யஜ்ஞம், தவம் முதலியவற்றை அநுபவிக்கிறவனாய், ஸர்வேஸ்வரனால், எல்லா ப்ராணிகளுக்கும் நன்மையையே நினைக்கிறவனாகவும் பகவானைத் தெரிந்து கொண்டால் ஆராதநாதிகளைச் செய்யும் போதே ஸுகத்தை அடையலாம். நண்பனை ஸந்தோஷப்படுத்துவதே ப்ராணிகளின் ஸ்வபாவம். மனிதர் மட்டுமின்றி ம்ருகங்களும், பக்ஷிகளும் கூடத் தங்களிடம் ப்ரீதி கொண்டவனைப் பார்த்ததும் த்ருப்தி பெற்று, தமது சேஷ்டைகளால் ஸந்தோஷப்படுத்துவதைப் பார்க்கிறோம். ஆகவே, ஸந்த்யாவந்தநாதிகளை நமது நண்பனான பகவானுடைய ப்ரீதிக்காகச் செய்கிறோம் என்று எண்ணியபடி செய்ய உந்துகிறது இந்த ஸ்லோகம்.

अहं हि सर्वयज्ञानां भोक्ता च प्रभुरेव च ।
न तु मामभिजानन्ति तत्वेनातश्च्यवन्ति ते ॥ (9.24)

எல்லா கர்மாக்களால் ஆராதிக்கப்படுபவனும், ப்ரீதியை அடைபவனும், பலனை அளிப்பவனும் ஸ்ரீமந் நாராயணன்தான். வ்யாஸபகவான் फलमत उपपत्तेः என்று இப்படியே அருளியுள்ளார். இவ்வாறு அறியாமல் செய்தால் அல்ப பலனையே பெறுவர்.

यत् करोषि यदश्नासि यज्जुहोषि ददासि यत् ।
यत्तपस्यसि कौन्तेय ! तत्कुरुष्व मदर्पणम् ॥ (9.27)

எல்லா கர்மாக்களுக்கும் ஆராத்யனும், பலனை அநுபவிப்பவனும் பகவானே என அறிந்து செய்தால் எல்லா பாவங்களிலிருந்தும் விடுபடலாம். இந்த ஸ்லோகத்தைத் தங்களது அநுஸந்தாநத்திற்காக மஹான்கள் கீழ்க்கண்டவாறு சிறிது மாற்றிக் கொள்வர்—

यत्करोमि यदश्नामि यज्जुहोमि ददामि यत् ।
यत्तपस्यामि भगवन् ! तत्करोमि त्वदर्पणम् ॥

என்று எல்லாவற்றையும் பகவானுக்கே அர்ப்பணிப்பர்.

यस्मात् क्षरमतीतोऽहं अक्षरादपि चोत्तमः ।
अतोऽस्मि लोके वेदे च प्रथितः पुरुषोत्तमः ॥ (15.18)

ஈஜ பத்³த⁴ ஜீவர்கள், முக்தர்கள் இருவரைவிட உத்தம புருஷனாக - புருஷோத்தமனாக பகவான் விளங்குகிறான். பகவான் எல்லா வற்றுக்கும் ஆதாரமாய், ஸ்வரூப - ஸ்வபாவ மாறுதலற்று, நியமிப்பவனாக இருப்பதால் அவன் ஒருவனே புருஷோத்தமன். இதை அறிந்து ஆராதநாதிகளைச் செய்பவர் எல்லாமறிந்தவர் என்றும், செய்ய வேண்டியதைச் செய்து முடித்தவராயும் பகவானால் புகழப்படுகின்றனர்.

*7. எதிரி கையால் விடுதீட்டு (விடுதலைப் பத்திரம்) :–*

योगिनामपि सर्वेषां मद्गतेनान्तरात्मना ।

श्रद्धावान् भजते यो मां स मे युक्ततमो मतः ॥ (6.47)

பகவானை விட்டுப் பிரிக்க முடியாத நிலையில், ஸதா அவனையே எண்ணுமவர் மற்ற யோகிகள் அனைவரைவிட மிக உயர்ந்த உபாயத்தை உடையவராகின்றனர். ப்ரஹ்மா, ருத்ரன், ஸூர்யன், ஸுப்ரமண்யன், கணபதி முதலிய தேவதைகளை த்யாநம் செய்பவர்களைவிட வாஸுதேவனை த்யாநம் செய்பவர்கள் ஶ்ரேஷ்டர்கள் என ஸ்ரீ ஶங்கரபாஷ்ய விரிவுரையாளர்களே குறிப்பிட்டுள்ளார்கள்.

**8. இதர தேவதைகளைத் துறந்து, க்ருஷ்ணனையே பற்ற வேணும் :–**

अन्तवत्तु फलं तेषां तद्भवत्यल्पमेधसाम् ।

देवान् देवयजो यान्ति मद्भक्ता यान्ति मामपि ॥ (7.23)

தேவதாந்தரங்களை ஆராதித்தாலும் பலனை பகவான்தான் அளிக்கிறான். ஆனால், அந்த போகங்கள் அவ்வோ தேவதைகள் நாஶமடையும்போது நஶித்து விடும். என்னை - ஸ்ரீமந் நாராயணனை ஆராதித்தால் வேண்டிய பலன்களைப் பெற்று, இறுதியில் வைராக்யம் உண்டாகி பகவானையே அடையலாம்.

*9. பகவானை ஆராதிப்பது ஸுலபம் :–*

पत्रं पुष्पं फलं तोयं यो मे भक्त्या प्रयच्छति ।

तदहं भक्त्युपहृतं अश्नामि प्रयतात्मनः ॥ (9.26)

பலனில் ஆசையின்றி, ப்ரீதியுடன் ஒருவன் எதை அளித்தாலும் ஏற்கிறேன். எல்லாவற்றையும் அடையக் கூடிய ஸ்வபாவனாக இருந்தபோதும், பக்தர்கள் ப்ரீதியாகத்தருவதைப் பெறும்போது, ஆசைப்பட்டுக் கிடைக்காத வஸ்துவைப் பெற்றதுபோல ஸந்தோஷமடைகிறான் பகவான். இலை - வெற்றிலை, அகத்திக்கீரை. புஷ்பம் - வாழைப்பூ, பழங்கள், த்ரௌபதி சிறுகீரை (இலை) அளித்தாள். கஜேந்த்ரன் புஷ்பம் அளித்தது. ஶபரி - பழம் தந்தாள். ரந்தி தேவர், ஸ்ரீ ராமானுஜர், ஸ்வாமி ஸ்ரீ தேஶிகன் தீர்த்தம் ஸமர்ப்பித்தனர்.

**10. வேத வழி தவிர வேறு வழி இல்லை**

**तस्माच्छास्त्रं प्रमाणं ते कार्याकार्यव्यवस्थितौ ।**

**ज्ञात्वा शास्त्रविधानोक्तं कर्म कर्तुमिहार्हसि ॥ (17.24)**

எந்த ஒரு கார்யமும் செய்யத் தக்கது, செய்யக் கூடாதது எனும் விஷயத்தில் ஶாஸ்த்ரம்தான் ப்ரமாணமாகும். ஶாஸ்த்ர விதிப்படியே நடக்க வேண்டுமே தவிர மனதிற்குத் தோன்றியபடி செய்யலாகாது என பகவான் உபதேஶிக்கிறான்.

**11. துயர் தீர்க்கும் வார்த்தை :–**

**सर्वधर्मान् परित्यज्य मामेकं शरणं व्रज ।**

**अहं त्वा सर्वपापेभ्यो मोक्षयिष्यामि मा शुचः ॥ (18.66 )**

என்னிடம் ஶரணாகதி செய்தால் எல்லா பாவங்களிலிருந்தும் விடுவித்து மோக்ஷம் அளிக்கிறேன். கவலைப்படாதே என ப்ரதிஜ்ஞை செய்கிறான் கண்ணன்.

**यत्र योगेश्वरः कृष्णो यत्र पार्थो धनुर्धरः ।**

**तत्र श्री र्विजयो भूति र्ध्रुवा नीतिर्मतिर्मम ॥**

॥ शुभम् ॥

॥ श्रीः ॥

# கீதா ரஸம்–2

***(குரிச்சி ஸ்ரீ நாராயணன், சென்னை)***

மஹான்கள் மிகவும் விரும்பி அநுஸந்திக்கும் ஒரு ஶ்லோகத்தின் ரஸத்தை யதாஶக்தி விஜ்ஞாபிக்கிறேன். பல அபூர்வ விஷயங்களை ஸ்ரீமத் ராமாநுஜர் இந்த ஶ்லோக வ்யாக்யாநத்தின் மூலம் நமக்கு அருளி உள்ளார். அந்த விஷயங்கள் யாவையும் நாம் தினசரி எண்ணினால் நன்மை பெற்றுத் தர வல்லன.

**शमो दमस्तपश्शौचं क्षान्तिरार्जवमेव च ।**

**ज्ञानं विज्ञानमास्तिक्यं ब्राह्मं कर्म स्वभावजम् ॥** (18–42)

ஸத்வம், ரஜஸ், தமஸ் ஆகிய முக்குணங்களுக்கு வஶமாகாதார் ப்ரக்ருதி மண்டலத்தில் யாருமில்லை. இவற்றில் (முக்குணங்களின்) ஏற்றத்தாழ்வினால்தான் செயல்கள் நல்லன என்றும் கெட்டன என்றும் ஆகின்றன. ஸாத்விக த்யாகத்துடன் கர்மாக்களைச் செய்தால் ஸம்ஸார பந்தத்திலிருந்து விடுதலை பெறலாம். இப்படி ஸாத்விக த்யாகத்துடன் கர்மாவைச் செய்ய ஸத்வ குணம் மேலோங்கி இருக்க வேணும். அதற்காக ஆஹார நியமம் முதலிய வழிமுறைகளை நாம் கடைபிடிக்க வேண்டும் என்பதை முன் ஶ்லோகங்களால் அருளி இந்த ஶ்லோகத்தால் ப்ராஹ்மணர்களின் தர்மங்களையும், ஜீவந உபாயத்தையும் பகவான் உபதேஶிக்கிறான் :—

**ஶம** :- கண், காது, மூக்கு, நாக்கு, தோல் எனப்படும் ஜ்ஞாநேந்த்ரியங்களையும், கை, கால், வாய், மல ஜலங்கள் வெளியேறும் கர்மேந்த்ரியங்களையும் வெளி இந்த்ரியங்கள் என்பர். இவற்றை அடக்குவது ஶமம் எனப்படுகிறது.

**தம** :- உள் இந்த்ரியமாகிற மனத்தை அடக்குதல், -

**தப**:- ஶாஸ்த்ரங்களில் விதித்துள்ள காலங்களில் உபவாஸாதிகள் மூலம் ஶரீரத்தை உலர்த்துவதன் மூலம் கிடைக்கும் ஶக்தி, பலம். கோபத்தினாலோ அல்லது வேறு

பல காரணங்களுக்காகவோ உண்ணாவ்ரதம் இருப்பது ஶாஸ்த்ரீயமாகாது, பலனளிக்காது என்பது இதனால் உணர்த்தப்பட்டது.

**ஶௌசம்** :– ஸ்நாநம், ஸந்தி, ஆஹாரக் கட்டுப்பாடு முதலியவற்றின் மூலம் ஶாஸ்த்ரத்தில் கூறிய கர்மாக்களைச் செய்வதற்கு யோக்யதையை அடைதல். எனவே ஶௌசமின்றிச் செய்யும் கர்மாக்கள் பலனளிக்குமா என்று எண்ணிப் பார்க்க வேண்டும்.

**க்ஷாந்தி**: :– மற்றவர்களால் பாதிக்கப்பட்ட போதும் அதற்குக் காரணமானவர்களிடம் வருத்தப்படாத மனநிலை.

**ஆர்ஜவம்** :– மனதில் எண்ணியபடியே சொல்லிலும், செயலிலும் இருத்தல, அதாவது உள்ளத்தில் ஒன்று - உதட்டில் ஒன்று என்று இல்லாமை.

**ஜ்ஞாநம்** :– பரதெய்வம் ஸ்ரீமந் நாராயணன் என்பதையும், மற்ற தெய்வங்கள் அவனுக்குக் கீழ்ப்பட்டவர்கள் என்ற உண்மை நிலை குறித்த தெளிவான அறிவு. பரதேவதை யார் என்று உணராவிடில் மோக்ஷமே கிடைக்காது.

**விஜ்ஞாநம்** :– பரப்ரஹ்மமாகிய ஸ்ரீமந் நாராயணனுக்கே உள்ள தனித் தன்மைகளைப் பற்றி அறிதல். ஸத்யத்வாதி ஸ்வரூப நிரூபக தர்மங்களையும் ஜ்ஞாநம், பலம் இவைகளான நிரூபித ஸ்வரூப விஶேஷணங்களையும், அவதார ரஹஸ்யம் முதலியவை பகவானின் தனித் தன்மை ஆகும்.

**ஆஸ்திக்யம்** :– எந்தக் காரணத்தைக் கொண்டும் அசைக்க முடியாத அளவிற்கு வேதத்தில் கூறியவை மீது உள்ள திட நம்பிக்கை, பரப்ரஹ்மம், பகவான், புருஷோத்தமன் என்று அழைக்கப்படும் ஸ்ரீ வாஸுதேவன் துளியும் தோஷமில்லாதவன். இயற்கையாகவே மிக உயர்ந்த ஜ்ஞாநம், ஶக்தி முதலிய எண்ணில் அடங்காத நற்குணங்களை உடையவன், எல்லா வேத, வேதாந்தங்களினால் அறியப்படுபவன். ஸ்ரீமந் நாராயணனே உலகம் யாவுக்கும் காரணன். (அதாவது அவனிடம் இருந்து தோன்றியவை). அவனே உலகங்கள் யாவற்றிற்கும் ஆதாரமாய் இருக்கிறான்.

எல்லாவற்றையும் நடத்துபவனும் அவனே. ஶாஸ்த்ரீய கர்மாக்கள் யாவும் அவனது ஆராதநமாகும். அப்படி ஆராதிக்கப்பட்ட பகவான் வாஸுதேவனே அவரவர் விரும்பும் தர்ம, அர்த்த, காம, மோக்ஷம் என்ற நான்குவித பலன்களையும் அளிக்கிறான். இவ்வாறான விஷயங்களைப் பற்றிய கலக்கமில்லாத அறிவே ஆஸ்திக்யம் எனப்படுகிறது. இப்படிப்பட்ட தெளிவின்றி வேதத்தை நம்புவதும், தெய்வங்களை நம்புவதும், கோவிலுக்குப் போவதும் ஆஸ்திகன் என்ற பெயரை முழுமையாகத் தராது என்பதை இவ்விடத்தில் ஸ்ரீ ராமாநுஜர் உணர்த்துகிறார்.

ப்ராஹ்மணர்களின் கர்மாவைக் கூற வந்த இடத்தில் இவ்வளவு விஷயங்களும் உண்மையிலேயே பகவானால் உணர்த்தப்பட்டதா ? அல்லது தமது ஸாமர்த்யத்தால் ஸ்ரீ ராமாநுஜரே இவ்வாறு அர்த்தம் சொல்லுகிறாரா ? என்ற ஸந்தேஹம் ஏழாமல் இருப்பதன் பொருட்டு கீதையில் உள்ள பல ஶ்லோகங்களை ப்ரமாணமாகக் காட்டித் தாம் சொந்தக் கருத்தைத் திணிக்க முற்படவில்லை, பகவானால் கூறப்பட்ட விஷயங்களையே ஜ்ஞாபகப்படுத்தினோம் என்பதை ஸ்ரீ ராமாநுஜர் பல ஶ்லோகங்களால் நமக்கு உணர்த்துகிறார்.

1. வேதைஶ்ச ஸர்வை: அஹமேவ வேத்ய: *(15.15)*
   மத்த: பரதரம் நாந்யத் கிஞ்சிதஸ்தி தநஞ்ஜய ! *(7.7.)*
   யோ மாம் அஜம் அநாதிம் ச வேத்தி லோக மஹேஶ்வரம் *(10.3)*
2. அஹம் க்ருத்ஸ்நஸ்ய ப்ரபவ: மத்தஸ் ஸர்வம் ப்ரவர்த்ததே *(10.8.)*
   யத: ப்ரவ்ருத்திர்பூதாநாம் யேந ஸர்வமிதம் ததம் ।
   ஸ்வகர்மணா தமப்யர்ச்ய ஸித்திம் விந்ததி மாநவ: ॥ *(18-46)*
3. மயி ஸர்வமிதம் ப்ரோதம் *(7.7)*
4. போக்தாரம் யஜ்ஞ தபஸாம் ... ஜ்ஞாத்வா மாம் ஶாந்திம்ருச்சதி *(5.29)*

இது முதலான கீதை ஶ்லோகங்களில் மேற்கூறிய கருத்துக்களை பகவானே கூறியுள்ளான். இந்த ஶ்லோகத்தில் *(18-42)* உள்ள ப்ராஹ்ம ஶப்தம் ப்ராஹ்மணர்களைக் குறிக்கிறது.

இந்த ஒரு ஶ்லோகத்திலேயே நாம் கடைப்பிடிக்க வேண்டிய நற்பண்புகளையும், பகவானைப் பற்றிய விஷயங்களையும் அறிய முடிகிறது.

॥ शुभम् ॥

॥ ஸ்ரீ: ॥

# முப்பதில் சில முத்துக்கள்

(குரிச்சி ஸ்ரீ நாராயணன், சென்னை)

ஸ்ரீ ஆண்டாள் அருளிய திருப்பாவை சொன்னால் அது நமது பாபங்கள் அனைத்தையும் போக்கடிக்கும். முழுமுதற்கடவுளான நாராயணனை நமக்குக் காட்டித்தரும், அதன்மூலம் நாம் அவன் திருவடிகளில் ஶரணம் புகுந்து நற்பயன் பெறலாம். திருப்பாவைக்குப் பல உரைகள் உள்ளன. எனினும் ஶாஸ்த்ர விரோதமில்லாத வகையில் சில சுவையான விஷயங்களை விஜ்ஞாபிக்க அநுமதி வேண்டுகிறேன். இவ்வநுபவம் இலக்கணத்திற்கும், திருப்பாவை ப்ரகரண ஓட்டத்திற்கும் ஒட்டி வராதது போல் இருப்பினும், அநுபவரீதியில் ஏற்று அநுக்ரஹிக்க ப்ரார்த்திக்கிறேன்.

*1.* **கூர்வேல் கொடுந்தொழிலன்:** — கண்ணன் கோகுலத்திற்கு வருவதற்கு முன்பு, நந்தகோபர் அஹிம்ஸையின் வடிவாக இருந்தார். கண்ணன் பிறந்த பிறகு அவனுக்கு என்ன தீங்கு எப்படி நேருமோ எனப் பயந்து, கையிலுள்ள வேலால் சிறு பூச்சி, எறும்புகளையும் நசுக்குவாராம். இதைக் **கூர்வேல் கொடுந்தொழிலன்** என ஆண்டாள் பாடியுள்ளாள். இங்கு நந்தர் செய்ததை கொடுந்தொழில் - க்ரூரமான கார்யம் எனக் கூறுவது பற்றிச் சிறிது விசாரம் செய்வோம்.

(a) தந்தை என்ற முறையில் குழந்தையைக் காப்பது கடமையாகும்.

(b) ஆசார்யனையும், தெய்வத்தையும் பழிக்கிறவர், பீடிப்பவர்களை நம்மால் முடிந்த அளவு பதிலுக்குச் செய்யவேணும் என்றே ஶாஸ்த்ரம் கட்டளை இட்டுள்ளது.

(c) **மந்நிமித்தக்ருதம் பாபம் அபி புண்யாய கல்பதே** என்கிற வசநப்படி பகவானுக்காகச் செய்யப்பட்டதால் கொடுமையாகாது.

(d) **உத்ஸர்காபவாத ந்யாய** *ரீதியிலும்* **நந்தர்** *செய்தது நன்றே என்னலாம். ஆக, இவ்வளவு காரணங்களால் பகவானுக்காக நந்தகோபர் செய்தது கொடுமையானதாகத் தோன்றவில்லை. ஆன பின்பு, திருப்பாவைப் பதங்கள் குறிப்பது எதை ? எனில் - கொடுந்தொழில் அன் - அல்லன்/ அன்று எனக் கொள்ளலாம். அல்லது - தாநம் கொடுப்பதையே தொழிலாக உடையவன் நந்தகோபன் என்றவாறும் கொள்ளலாம். நந்தரின் கொடை குணத்தை 17ம் பாட்டில்* **அம்பரமே, தண்ணீரே, சோறே அறம் செய்யும் எம்பெருமான் நந்தகோபாலா** *என ஆண்டாளே பாடியுள்ளதைக் கொண்டு இவ்வாறு வழங்கப்பட்டது. நம் கண்ணனுக்காகச் செய்ததைக் கொடுமை - க்ரூரம் என்கிற ரீதியில் சொல்வதை நந்தன் மீதுள்ள பரிவால் சற்று மாற்றி அநுபவிக்கலாமல்லவா ! கூர்வேல் பதத்தைக் குமரனுடன் சேர்க்கலாம் (வேல் போற்றி) எனப் பெரியோர் கூறுவதுண்டு.*

*2.* **காசும் பிறப்பும் கலகலப்பக் கை பேர்த்து: —** *தோழி ஒருவளை எழுப்பும் பாட்டான* **கீசு கீசு***வில் கூறுவதாவது - தயிர் கடையும் போது ஆய்ச்சியர் அணிந்திருந்த ஆபரணங்கள் அசைந்து ஓசை உண்டாக்கின என்பதாகும். இங்கு ஆய்ச்சியர்களின் ஆபரண ஒலியைக் கூறுவது போல, கண்ணன் அணிந்திருந்த ஆபரணங்கள் ஓசை உண்டாக்கின என்பதும் ரஸமாகும். வெண்ணெய் வேண்டி நிற்கிறான் கண்ணன். யசோதை மற்றும் ஆய்ப்பாடியர்கள் அது ஸமயம் கண்ணனின். நாட்யத்தைக் காண விரும்பி ஆடினால் வெண்ணெய் தருவதாகச் சொல்வார்கள். கண்ணனும் ஆடுவான். அப்போது அவன் திருமேனியில் இருந்த ஆபரணங்கள் ஒலி எழுப்பின. இதை ஸ்வாமி ஸ்ரீ தேசிகன்*

**ஆவிர்ப4வத்வநிப்4ருதாப4ரணம் புரஸ்தாத்**
**ஆகுஞ்சிதைக சரணம் நிப்4ருதாந்யபாத3ம் ।**
**த3த்4நா நிமந்த2முக2ரேண நிப3த்3த4தாளம்**
**நாத2ஸ்ய நந்த3ப4வனே நவநீத நாட்யம் ॥**

(ஸ்ரீகோபாலவிம்சதி ; 4 )

என்று **கோபாலவிம்ஶதியில்** அநுபவிக்கிறார். **கண்ணனின்** நாட்ய ஒலி கேட்க வில்லையா என்று கூறுவதாகவும் கொள்ளலாமே!

3. **கறவைகள் பின் சென்று .... சிறுபேர் அழைத்தனவும்:-** கறவைகள் பின் செல்வதால் கோபாலர்களை அறிவில்லாதவர் எனக் கூறுவர். தாங்களும் சொல்வர். **ஜ்ஞாநேந ஹீந: பஶுபி: ஸமாந:** (ஜ்ஞாநமில்லாதவர் பசுவிற்கு ஸமம்) என்பர். ஆனால் அதுதான் - கறவைகள் பின்னால் போவதால் தான், அவர்களிடம் பகவானுக்கு அதிக ப்ரீதி உண்டாகக் காரணமாகிறது. அவனும் விரும்பிய செயல்தானே அது. திருக்கோவில்களில் விஶ்வரூபத்திற்குப் பஶுவின் பின்புறத்தையன்றோ பகவான் பார்க்கிறான்/ கேட்கிறான். மஹாலக்ஷ்மீ இருக்குமிடமல்லவா ! பஶுவைத் திருப்பினால் ஶுபம் கிடைக்கிறது. ஆகக் கறவைகள் பின் போனதே ஆயர்களின் ஏற்றம். அறிவொன்றில்லாத - கண்ணனைத்தவிர வேறு எதுவும் அறியாததால் (**விரக்தோ அபரமாத்மநி**) ஏற்றமுடையவர்கள். சிறுபேர் - நான்கே எழுத்தான **கோவிந்தா** என்றதை அறிந்தால் நான்கு வேதங்களையும் அறிந்ததாகுமே ! ஆக இப்பாட்டில் கோபாலர்களின் உயர்வே கூறப்பட்டது.

॥ शुभम् ॥

ஸ்ரீ:

# சில்லரை விஷயங்கள் – 1

(குரிச்சி ஸ்ரீ நாராயணன், சென்னை)



ஸ்ரீ ந்ருஸிம்ஹ அவதாரத்தை வ்யாஸர் ஸ்ரீமத் பாகவதத்தில் அத்யத்புதம் என வர்ணித்துள்ளார். இது க்ருஷ்ணனை வர்ணித்த அத்புதம் என்ற விசேஷணத்தைவிட அதிகமாகும். ஸ்ரீ க்ருஷ்ணனைவிட உயர்வாய்/ அழகாய்நரஸிம்மனை ஏன் கூறினார்? எனில், நரமும் (மனிதனும்) சிங்கமும் கலந்ததால் ஆச்சர்யமாய், அத்புதமாய் இருந்தது என பெரியோர் வர்ணிப்பர். முன்பே ஸ்ரீஹயக்ரீவ, அவதாரத்தில் நரங்கலந்த (மனிதவடிவு கலந்த) ரூபியாய் அவதரித்தாகி விட்டதால், நரஹரிதான் இவ்விதம் தோன்றினான் என்பது தனிப்பெருமை தராது அன்றோ? ஆகவே மாலோலனுக்கு உள்ள தனிச்சிறப்பை மனதில் கொண்டே வ்யாஸர் அத்யத்புதம் என அருளியிருப்பார். அதுபற்றி சிந்திக்கையில் ஆசார்ய கடாக்ஷத்தால் ஒரு ரஸமான யுக்தி தோன்றியது. அடியேனுடைய புத்தி சக்திக்கு ஏற்றபடி சாஸ்த்ரவிரோதமில்லாமல் அதை ஸவிநயம் விண்ணப்பிக்கிறேன்.

ஜீவர்கள் அணுஸ்வரூபர்கள். அவர்களுடைய தர்மபூத ஜ்ஞானம் முக்த தசையில் விபுவாயுள்ளது. பரமாத்மா ஸ்வரூபத்தால் விபுவாயுள்ளான பகவத் ஸ்வரூபம் எல்லாவிடங்களிலும் பரவி உள்ளது. பகவானுடைய திருமேனி ஐந்து நிலைகளில் உள்ளது — பரம், வ்யூஹம், விபவம், அர்ச்சை, அந்தர்யாமி. விபுவான திவ்யாத்மஸ்வரூபம் திருமேனியைவிட பெரியதாக உள்ளது. பகவான் எத்தனை அவதாரம் எடுத்தும் இதற்கு (ஸ்வரூபத்திற்கு) ஸமமாக முடியவில்லை. இது நரஸிம்ஹாவதாரத்தில்தான்

நிறைவேறியது. ஹிரண்யகசிபுவை முடிக்க எண்ணிய திருமால் மூன்று லோகங்களிலும் நரஸிம்ஹ வடிவில் (திவ்ய மங்கள விக்ரஹத்துடன்) இருந்தான்—இருக்கிறான்! இங்கு மூன்று லோகம் என்பது உபலக்ஷணம். எங்கும் நரஹரியாய் நிறைந்திருக்கிறான் என்று அர்த்தம். ஆக, திவ்யாத்ம ஸ்வரூபத்திற்கு ஈடாக வஸ்துதோறும் நரஸிம்ஹ ரூபம் உள்ளதால் இந்த அவதாரத்தை வ்யாஸர் அத்யத்புதம் என அருளினார் போலும். இப்படி கூறுவதில் யுக்தியும் உள்ளது—ஸர்வஜ்ஞ, ஸர்வவித் (பொதுவிலும், ஒவ்வொன்றிலும் எல்லா விஷயத்தையும் அறிபவன்) என்ற கல்யாண குணங்களை உடைய பகவானுக்கு ஹிரண்ய கசிபு எந்த இடத்தை காண்பித்து அவ்விடத்தில் பகவானைக் காட்டு என கேட்பான் என்பது தெரியாததா? அவன் நன்கு அறிந்தவனே. ஆகிலும் எங்கும் நரஸிம்ஹரூபியாய் இருப்பதற்காகவே இப்படிச் செய்தான். மேலும், ஹிரண்யகசிபு காட்டிய உடனே பகவானுக்கு நரஹரியாய் முதலிலேயே எங்கும் தயாராக இருக்க. அவ்விடத்தில் மட்டும் வெளிப்படக்கூடிய சக்தி, ஸாமர்த்யம் இல்லையா என்ன? ஆக வஸ்து தோறும் திவ்யமங்கள விக்ரஹமும் விபுவான திவ்யாத்ம ஸ்வரூபத்திற்கு ஈடாகச் செய்த அவதாரம் ஸ்ரீலக்ஷ்மீ ந்ருஸிம்ஹாவதாரமே என்றால் அது தவறாகாது என நம்புகிறேன்.

த்ரிவிக்ரமன் உலகளந்தானே எனில் அது காட்டாறு போல இன்று இல்லை. மேலும் ப்ரதிவஸ்துவிலும் இருந்ததாகவும் சொல்ல முடியாது.

சரி, ஸ்ரீந்ருஸிம்ஹன் திவ்யமங்கள விக்ரஹத்துடன் எங்கும் உளன் என்று கூறுவதற்கு ஆதாரம் உண்டா? எனில்,

भक्तस्य दानवशिशोः परिपालनाय
भद्रां नृसिंहकुहनामधिजग्मुषस्ते।
स्तम्भैकवर्जमधुनाऽपि करीश नूनं
त्रैलोक्यमेतदखिलं नरसिंहगर्भम्॥

''உலகிலுள்ள ஸகல வஸ்துக்களிலும் இப்பொழுதும் நரசிங்க வடிவத்துடன் இருக்கின்றாய். ஆகவே மூவுலகிலுள்ள எல்லாப் பொருள்களும் நரசிங்க வடிவத்தோடு உண்மை தம்முள் சூல் கொண்டு நிற்கின்றன. இது திண்ணம்,'' என ஸ்வாமி தேசிகன் வரதராஜ பஞ்சாஶத்தில் அறுதியிட்டுக் கூறுகிறார். தர்க்க பாண்டித்யத்தாலே நினைத்ததெல்லாம் ஸாதிக்கலாயிருக்கச் செய்தேயிறே நாம் ப்ரமாணசரணராய்ப் போருகிறது என்று ஸ்வாமி தேசிகனே ஸாதித்தபடி இருக்கிறது இந்த ஶ்லோகத்தில் உள்ள நூநம் (नूनं நிச்சயம்) என்கிற பதம். எனவே இவ்விஷயத்தில் ஸம்ஶயப்படுவதற்கு ப்ரஸக்தி இல்லை.

மற்ற விபவாவதாரங்களுக்கு ஸமாபனம் போல் ஶ்ரீந்ருஸிம்ஹனுக்கு இல்லை. இன்றும் விஶ்வம் முழுவதும் நரஹரியாகவே உள்ளான் என்பதாலும் ஏற்றம். ப்ரஹ்லாதன் போன்ற பக்தன் வேண்டினால் ஸேவை கொடுக்க ஸித்தமாக உள்ளான்.

ப்ரஹ்ம வித்யைகளில் உபாஸ்யம் ஶ்ரீமந் நாராயணனே என்பதையும் ஶ்ரீந்ருஸிம்ஹனே கலபமாக காட்டித்தருகிறான். ஸம்வர்க வித்யையில் ஶ்ரீந்ருஸிம்ஹன்தான் உபாஸ்யம். ஒரு வித்யையில் உபாஸ்யமானவன்தான் மற்ற வித்யைகளிலும் உபாஸிக்க வேண்டியவனாக ஆவான். எனவே பரப்ரஹ்மம், ஜகத்காரணம் ஶ்ரீமந்நாராயணனே என்பதை ஸந்தேஹத்திற்கு இடமின்றி காட்டுபவனும் நரஹரியே.

இப்படி ஶ்ரீந்ருஸிம்ஹனைப் பற்றி அதிஸாஹஸமாக விஜ்ஞாபித்ததை மஹான்கள் பொறுத்து அநுக்ரஹிக்க வேண்டும். ஸதா ஶ்ரீமாலோல கைங்கர்யத்திலேயே திளைத்துள்ள ஶ்ரீலக்ஷ்மீ ந்ருஸிம்ஹ திவ்யபாதுகா ஸேவக ஶ்ரீவண் ஶடகோப ஶ்ரீநாராயண யதீந்த்ர மஹாதேசிகன் திருவடிகளில் ப்ரணயங்களுடன் இந்த வ்யாஸத்தை ஸமர்ப்பிக்கிறேன்.

॥ श्री ॥

## சில்லரை விஷயங்கள் — 2

## விழுது (சந்தந) காப்பு

(குறிச்சி ஸ்ரீ நாராயணன், அசோக் நகர், சென்னை)

ஸ்ரீ ராமனுக்கு முடிசூட்ட மன்னர் முடிவெடுத்தார். கூநியின் சூழ்ச்சியால் கைகேயி மனம் மாறினாள். கொடுத்த வரமே ஜ்வரமாக தஶரதரை எரித்தது. ஸுமந்த்ரரை அனுப்பி ராமனை அழைத்துவரப் பணித்தார். விவரமறியாத அவரும் ராமனுடைய தர்ஶநம் கிட்டப்போவதை எண்ணி மகிழ்ந்தார். பாகவதத்தில் அக்ரூரர் கோகுலம் சென்ற போது கண்ணனைக் காணப்போகிறோம் என எண்ணியபடியே சென்றார். இந்த நிகழ்ச்சிகள் கோவிலுக்குப் போகும் போது நாமும் இருக்க வேண்டிய மநநிலையை எடுத்துரைக்கின்றன.

ஸுமந்த்ரர் பல அரண்மனைகளைக் கடந்து செல்கிறார். ஆங்காங்கு பலர் கூட்டமாக இருந்தனர். சிலர் மந்த்ரிகள், சிலர் நண்பர்கள், சிலர் கப்பம் செலுத்தும் சிற்றரசர்கள், மற்றும் காவலர்கள். ரத்நங்கள் நிறைந்த கடலில் மகரமீன் தடையின்றிச் செல்வது போல ஸுமந்த்ரர் சென்றார். ஶரணாகதி செய்து கொண்ட ஜீவன் வைகுண்டத்திற்குச் செல்வது போல இருந்தது ஸுமந்த்ரரின் பயணம்.

ஸ்ரீ சக்ரவர்த்தித் திருமகன் தன் அருகிலிருப்பவர்க்குத் தன் திருமேனி அழகை அநுபவிக்கும் பாக்யத்தை அளிப்பவர். பலவித ரத்நங்கள், ப்ரதிமைகள் கூடிய தங்கக் கட்டிலில் ஸ்ரீ ராமனைக் கண்டார். கௌஷீதகி உபநிஷத்தில் பர்யங்கவித்யையில் வர்ணித்தபடி முக்தர்களாலும், நித்யஸூரிகளாலும் அநுபவிக்கப்படும் திவ்ய ஸேவையை ஸாரதியான ஸுமந்த்ரர் கண்டார். பகவான் பக்தர்களுக்கு கட்டுப்படுவதற்கு எல்லையும் உண்டோ ! ஸ்ரீ ராமன் ஸீதையால் பூசப்பட்ட சிவந்த நிறமுள்ள ஶுத்தமான, மணமுள்ள சந்தநத்துடன் ப்ரகாஶித்தார். இதைக் கூறும் ராமாயண ஶ்லோகம்—

**வராஹ ருதி³ராபே⁴ண ஶுசிநா ச ஸுக³ந்தி⁴நா ।**
**அநுலிப்தம் பரார்த்⁴யேந சந்த³நேந பரந்தபம் ॥**

இதில் வராஹ ருதி³ராபே⁴ண என்பதற்குப் பன்றியின் ரத்தம் போல் சிவந்த சந்தநம் எனச் சிலவிடங்களில் அர்த்தம் வழங்கப்படுகிறது. இதற்கு இவ்விதம் இல்லாமல்

ஸ்வரஸமாக வேறு அர்த்தங்கள் கூறப்பட்டுள்ளன. அவற்றைக் குறிப்பிடுகிறேன்—

*1.* வரம் — **அதிஶ்ரேஷ்டம், ந ஜஹாதி ப்ரயத்நமந்தரா அநுலேபந கர்த்ருந் ந த்யஜதி இதி அஹம்,**

**ருதி⁴ரா — அருணா ஆபா⁴ யஸ்ய தத்.**

**வரம், அஹம், ருதி⁴ரா த்ரயாணாம் கர்மதா⁴ரயஃ**

**தேந — வராஹ ருதி⁴ராபே⁴ண** என்று ஒரு வ்யாக்யாநத்தில் - அதாவது இளம் ஸூர்யனின் நிறத்தை ஒத்ததாயும், உயர்ந்ததான சந்தநத்தைப் பூசியிருந்தார் என்பதாகும். **அந்தி போல் நிறத்தாடையும்** என்று அமலனாதிபிரானில் சிவந்த ஸூர்யன் என உள்ளதும் இங்கு நினைவில் கொள்ளத்தக்கது

*2.* இந்த ஶ்லோகத்திற்கு ராவ்ஸாஹிப் ஸ்ரீ P.S.க்ருஷ்ண ஸ்வாமி ஐயர் எழுதிய பதவுரையில் இருப்பதாவது - **வராஹ ருதி⁴ராபே⁴ண** — சிவந்த மேகம் போன்றதாய் பரிமளத்தமுடையதாய், இயற்கை மணம் பொருந்தியதுமான சிறந்த சந்தநத்தால் ஸ்ரீ ராமன் பூசப்பெற்று விளங்கினார். இதில் **வராஹ ருதி⁴ரம்** என்கிற பதங்களுக்குச் சிவந்த மேகம் என அர்த்தம் கூறப்பட்டது.

*3.* **வராஹம்** எனில் ஆண் பன்றி, மேகம், அளவு, உண்ணத்தக்கதான வேர் இவற்றைக் குறிக்கும்.

**ருதி⁴ரம்** எனில் ரத்தம், குங்குமப்பூ இவற்றைக் குறிக்கும். இதில் உண்ணத்தக்க வேர், குங்குமப்பூ இவ்விரண்டு அர்த்தங்களைக் கொண்டு ஒரு அர்த்தம் எழுதுகிறேன்—

**வராஹ** = சில தாவரவேர்கள் சிவப்பு நிறம் உடையவை (பீட்ரூட் போல). கேரளாவிலும் ஒரு கிழங்கிற்குப் பன்னிப் கிழங்கு என்றே பெயர் உள்ளதாம். **ருதி⁴ரம்** என்றால் குங்குமப்பூ. ஆக **வராஹருதி⁴ரம்** என்பதற்கு ஒரு வகைத் தாவர வேர் போன்று குங்குமப்பூ கலந்த சிவப்புச் சந்தநத்தை ஸ்ரீ ராமன் பூசியிருந்தான் என்ற நல்ல வழியும் கிடைக்கிறது. கோவில்களிலும் பெருமாள் திருமார்பில் பூசும் சந்தநத்தை **விழுது காப்பு** என வழங்கி வருகிறோம். விழுதும் வேர் வகையில் சேர்ந்தது தானே!

**ஆக வராஹ, ருதி⁴ர** பதங்களுக்கு மூன்று வித ஸ்வரஸமான அர்த்தங்கள் உள்ளன. எனவே பன்றியின் ரத்தம் என்பதை விட்டுவிடலாம் எனத் தோன்றுகிறது.

॥ श्रीः ॥

# சில்லரை விஷயங்கள்—3

(குறிச்சி ஸ்ரீ நாராயணன், அசோக் நகர், சென்னை)

ஸ்ரீமந் நாராயணன் தேவர்களுக்காக வாமந அவதாரம் எடுத்து மஹாபலியிடம் மூன்றடி மண் யாசகம் கேட்டான். நான்முகன் இருக்கும் ஸத்யலோகம் முதல் பாதாள லோகம் வரை ப்ரக்ருதி மண்டலம். இது **லீலாவிபூதி** எனப்படும். பகவான் உலகங்களை உண்டுபண்ணி, நிறுத்தி, அழிப்பதால் இது அவனுக்கு லீலை (விளையாட்டு) ஆகிறது. எனவே இப்பகுதியை **லீலாவிபூதி** என்பர். ஸ்ரீ வைகுண்டத்தில் முக்தர், நித்யர்களுடன் ஸ்ரிய:பதியாய் இருக்கிறான். அது ஒரு போதும் மாறாமல் இருப்பதால் **நித்ய விபூதி** எனப்படுகிறது. ஆக **லீலாவிபூதி**, **நித்ய விபூதி** என எல்லாவற்றையும் உடையவன், ஆள்பவன் ஸ்ரீமந் நாராயணன் என அறிந்தோம். எனவே அவனை **உபயவிபூதிநாதன்** என்பர். இங்கு விபூதி என்றால் ஐச்வர்யம் என்று பொருள். இப்படிப்பட்ட பெருமை உள்ளவன் தன் மேன்மைக்குக் குறைவு ஏற்பட்ட போதிலும் பக்தனான இந்த்ரனுக்காக யாசகம் செய்தான். இதனால்தான் ஓங்கி உலகளந்த உத்தமன் என ஆண்டாள் போற்றினாள். வாமநனின் அழகு நம் மனதைக் கொள்ளை கொண்டு விடும். பலி மூன்றடி மண் கொடுத்தேன் எனக் கூறி தண்ணீரை பகவான் கையில் விட்டதும், வாமநன் ஓங்கி உயர்ந்து உலகெல்லாம் அளந்தான். அப்பொழுது உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்ற வித்யாஸம் பார்க்காமல் தன் திருவடிகளை எல்லோருக்கும் ப்ரஸாதமாக அருளினான். கோவில்களில் பகவானின் திருவடிகளை ஸ்ரீ ஶடாரியாக நாம் பெறுகிறோம். ஆனால் த்ரிவிக்ரமன் ஸாக்ஷாத்தாகவே தன் திருவடிகளை எல்லோருக்கும் அநுக்ரஹித்தான்.

ஸ்ரீ ராமாநுஜரை நமக்குத் தந்தவர் ஸ்வாமி ஆளவந்தார். இவர் ஸ்ரீமந் நாதமுநிகளின் பேரன். ஆளவந்தார் இயற்றிய **ஸ்தோத்ர ரத்நம்** எனும் ஸ்தோத்ரம் மிக உயர்ந்தது. அதில் 31வது ஶ்லோகமாவது -

கத³ா புநஶ்ஶங்க² ரத³ாங்க³ கல்பக-
த்⁴வஜாரவிந்த³ாங்குஶ வஜ்ரலாஞ்ச²நம் ।
த்ரிவிக்ரம ! த்வச்சரணாம்பு³ஜத்³வயம்
மதீ³யமூர்த்த⁴ாநமலங்கரிஷ்யதி ? ॥ 3 ॥

**பொருள்** :— த்ரிவிக்ரம அவதாரம் செய்த எம்பிரானே ! சங்கு, சக்ரம், கல்பக வ்ருக்ஷம், கொடி, தாமரை, அங்குசம், வஜ்ராயுதம் இவைகளை ரேகைகளாக உடைய உன் திருவடிகள் என் தலையை எப்போதுதான் அநுக்ரஹிக்கப் போகின்றன ?

பகவான் த்ரிவிக்ரமனாக அவதரித்த போது எல்லோருடைய தலைகளிலும் தன் திருவடிகளை வைத்த பின்பு ஆளவந்தார் மீண்டும் ப்ரார்த்திப்பது எப்படிப் பொருந்தும் ? குறிப்பாக த்ரிவிக்ரமன் திருவடி என்பது ஏன் ? என்ற கேள்வி எழுகிறது. இதற்கு ஸமாதாநத்தைக்கூற முயற்சிக்கிறேன். மஹான்கள் அருள வேணும்.

(1) அன்று த்ரிவிக்ரம அவதாரத்தின்போது ஆளவந்தார் தாம் நித்யஸூரியாக ஸ்ரீ வைகுண்டத்தில் இருந்திருப்பார். எனவே த்ரிவிக்ரமனின் திருவடியைப் பெறமுடியாமல் இருந்திருக்கலாம். அந்த ஏக்கம் மனதினுள் நெடுநாளாக இருந்ததாம். அதை அநுபவிக்க எண்ணித் தன் (ஆளவந்தாராகிய) அவதார காலத்தில் உலகளந்த பொன்னடிகளை ப்ரார்த்திக்கிறார் எனலாம்.

(2) அன்று த்ரிவிக்ரமன் வஸிஷ்ட சண்டாளாதி வித்யாஸமின்றி யாவர் ஶிரஸ்ஸிலும் தன் திருவடிகளை வைத்தான். அது உண்மையே ஆகிலும், அந்தக் காலத்தில் எனக்கு பேபக்ஷத்வ ஜ்ஞாநம் இல்லாததால் அந்த மஹாப்ரஸாதத்தை அநுபவிக்கவில்லை. அல்லது (நம் போல்வர்) அறியமுடியாத ஜந்மங்களிலும் இருந்திருக்கலாம். இப்போது **நான் உன் சொத்து** என்ற அறிவைப் பெற்றுள்ளேன். முன்பு இந்த உணர்வு இல்லாததால் உன் திருவடிகளின் பெருமையை உணரவில்லை. இன்று ஆசார்ய கடாக்ஷம் மூலம் நல்ல

புத்தியைப் பெற்றுள்ள ஸமயத்தில் நீ மீண்டும் த்ரிவிக்ரமனாகி உன் பொன்னடிகளை என் தலையில் வை என்கிறார். ஶ்லோகத்தில் உள்ள पुनः (புந:) என்கிற ஶப்தம் இங்கு சுவையாக அமைந்துள்ளது. ஆழ்வாரும் ஜீவன் அநாதியாய்ப் பிறந்து வருகிற போதிலும், பகவானுக்கு நாம் அடிமை என்ற ஶேஷத்வ ஜ்ஞாநம் கிட்டிய பின்பே உண்மையாகப் பிறந்ததாகக் கூறுகிறார் – **அன்று நான் பிறந்திலேன் பிறந்தபின் மறந்திலேன் என்று.** ஒன்றும் அறியாத குழந்தையிடம் விலை உயர்ந்த வைரக் கல்லைக் கொடுத்தால், அது வைரம் என்று உணராததால் கோலியாக - ஸாமாந்யமாகவே எண்ணி விளையாடும். அது போல் மானிட ஜந்மம் தவிர்ந்த மற்ற ஜந்மங்களில் ஜீவனுக்கு அறிவு குறைவு. மானிட ஜந்மத்திலும் வைணவனாகி ஶேஷத்வ ஜ்ஞாநம் பெற்றால் மட்டுமே பகவானை அநுபவிக்க முடியும். நாம் அன்று குழந்தை நிலையில் இருந்திருப்போம். எனவே அன்று பெற்ற திருவடி ஸம்பந்தம் போதாது. உணர்ந்து மீண்டும் அவனை வேண்டுங்கோள் எனத் தாம் செய்வது போல ஸ்ரீ ஆளவந்தார் நமக்கு உபதேஶிக்கிறார். அவதாரங்களில் யாவருக்கும் கேட்காமல் திருவடி தந்தவன் த்ரிவிக்ரமன் மட்டும்தானே. அதனாலும் அவன் உத்தமன் ஆகிறான். எனவே நாம் வேண்டுவோம்.

*(3)* மேலும் த்ரிவிக்ரமனாக உலகளந்தபோது ஓரடியால் பூமியையும், இன்னொரு அடியால் வான் உலகங்களையும் அளந்தான். எனவே நமக்கு அன்று கிடைத்தது பகவானின் ஒரு திருவடிதான். அது போதாது. பகவானே! நீ மீண்டும் என் தலையில் அருள வேண்டும். (पुनः !) அப்போது **த்வச்சரணாம்பு⁴ஜத்³வயம் – இரண்டு திருவடிகளையும்** அருள வேண்டும். முன்பு நீ தந்தது ஒரு திருவடிதான் - இன்று இரு திருவடிகளையும் சேர்த்துக் கேட்பது போல் உள்ளது.

ஸ்வாமி நம்மாழ்வார் க்ருஷ்ண பகவான் தன்னடிச் சோதிக்கு எழுந்தருளி 43 நாட்கள் தள்ளி அவதரித்தார். ஒரு **செவ்வாய் முன் பெற்றிலோமே - சிறிது முன்னம் பிறந்திருந்தால் கண்ணனது தர்ஶநம் பெற்றிருக்கலாமே**

என்றார். ஸ்ரீ கூரத்தாழ்வானும் ப்ருந்தாவநத்தில் கண்ணன் கால் படக் கூடிய ஏதேனும் ஒன்ருகப் பிறக்கவில்லேயே என்கிருர்.

பகவானின் திருவடிகளிலுள்ள ரேகைகள் (கோடுகள்) நம் தலேயில் பட்டால், நம் தலேயில் உள்ள ரேகைகள் - தலே எழுத்துக்கள் மாறும். க்ருஷ்ணாவதாரத்தில் அஸ்வத்தாமாவின் அஸ்த்ரத்தால் எரிக்கப்பட்டு கரிக்கட்டையாக இருந்த பரீக்ஷித், க்ருஷ்ணனின் திருவடி பட்டதும் உயிர் பெற்றான். பரீக்ஷித் கடைசியில் ஸ்ரீமத் பாகவத ஸப்தாஹ ஶ்ரவணம் செய்து முக்தியும் பெற்றான். இது பகவானின் திருவடி ஸம்பந்தத்தாலே அன்ருே!

நாமும் ஸ்ரீ ஶடாரி பெறும் போது, இவ்வித அநுபவங்களே மனதில் கொண்டு ஆசார்ய, பகவத் கடாக்ஷத்தைப் பெறுவோமாக.

॥ श्रीः ॥

# சில்லரை விஷயங்கள்

(குரிச்சி ஸ்ரீ நாராயணன், அசோக் நகர், சென்னை)

**கெடுமிடராயவெல்லாம் கேஶவாவென்ன நாளும்**
**கொடுவினை செய்யுங் கூற்றின் தமர்களும் குறுககில்லார்**
**விடமுடையரவில் பள்ளி விரும்பினான் சுரும்பலற்றும்**
**திடமுடைவயல் *அனந்த புரநகர்* புகுதும் இன்றே.**

*(திருவாய்மொழி 10-2-1)*

**உத்திஷ்ட²ந் சிந்தய ஹரிம் வ்ரஜந் சிந்தய கேஶவம் ।**
**பு⁴ஞ்ஜந் சிந்தய கோ³விந்த³ம் ஸ்வபந் சிந்தய மாத⁴வம் ॥**

*என்ற ஶ்லோகம் பகவந்நாம ஸ்மரணத்தை ஸுலபமாகச் செய்யக் கூடிய வழியைக் காட்டுகிறது. காலை எழுகின்ற போது 7 முறை ஹரி நாமத்தைச் சொல்லவேணும். வெளியே (யாத்ரை) கிளம்பும் போது கேஶவ நாமத்தைச் சொல்க. உண்ணும் போது கோவிந்த நாமம். தூங்கும் முன்பு மாதவா என்க. இதுவே மேற்கூறிய ஶ்லோகத்தின் அர்த்தம்.*

*ப்ரயாணம் என்பதை யாத்ரை எனக் கூறுவர், பதரீயாத்ரை, ஸாளக்ராம, திருமலை, காஶி யாத்ரை என விளம்பரங்களில் இதை நாம் படித்து வருகிறோம். இந்த யாத்ரைகள் போல வேதாந்தத்தில் இரண்டு யாத்ரைகள் உண்டு. இதை ஸ்ரீமத் ராமாநுஜர் தம் அந்திம உபதேஶத்தில் கூறியுள்ளார். அதாவது – "ஒருவன் ப்ரபந்நன் ஆனால் (ஶரணாகதி செய்து கொண்டால்) அவனுடைய ஆத்ம யாத்ரை பகவானுடைய அதீநமாகையாலே அதில் அவனுக்கு அந்வயமில்லை. உண்டு என்று இருந்தானாகில் ஆத்ம ஸமர்ப்பணம் பொய்யாமித்தனை. தேஹ யாத்ரை கர்மாதீநமாகையாலே அதுக்குக் கரைய வேண்டா. கரைந்தானாகில் நாஸ்திகனுமித்தனை. ஆகையால் உபய யாத்ரையும் கொண்டு இவனுக்குக் கார்யமில்லை" என்பதே உடையவரின் வார்த்தை. இதற்கு மேல் பல உபதேஶங்களைச் செய்கிறார். இங்கு, இதுவரை அருளியதன் கருத்தாவது - பகவானிடம் நம் ஆத்மாவை ஶரணாகதி செய்து ஒப்படைக்கிறோம். ஆத்மாவைப் பற்றிய பொறுப்பு பகவானது. அதைப் பற்றிய கவலை நமக்குக் கூடாது. ஶரீரமானது (வாழ்க்கை)*

நம் பூர்வ ஜந்ம கர்மாவிற்கு (விணைக்கு) ஏற்பவே அமையும். அதை நம்மால் மாற்ற இயலாது. எனவே, ஆத்மா, ஶரீரம் இரண்டைப் பற்றிய கவலையை விட்டு, பகவானுக்கும் பாகவதர்களுக்கும் கைங்கர்யம் செய்க என்கிறார்.

இங்கு ஆத்ம யாத்ரையை நமக்குத் தந்து, திடப்படுத்தி உதவிய எம்பெருமான் ஒருவர் இருக்கிறார். அவர் திருவநந்தபுரத்து அநந்த பத்மநாபன். அப்படி உதவிய மஹோபகாரனை தினம் நினைத்து நன்றி சொல்வது நம் கடமையாகும்.

மோக்ஷத்திற்கு பக்தியோகம் அல்லது ஶரணாகதி என்ற இரு வழிகளே உண்டு. இதில் வ்யாஸர் அருளிய ப்ரஹ்ம ஸூத்ரங்களுக்கு வ்யாக்யாநமாக ஸ்ரீபாஷ்யத்தில் பக்தியோகத்தைப் பற்றி விரிவாக ஸ்ரீமத் ராமாநுஜர் கூறியுள்ளார். அதில் ஶரணாகதியையும் கூறியுள்ளார். மேலும், ஶரணாகதி கத்யம் என்கிற நூலை இயற்றி, பங்குனி உத்திரத் திருநாளன்று ஸ்ரீரங்க திவ்ய தம்பதிகளிடம் ராமாநுஜர் தாமும் ஶரணாகதியைச் செய்து நமக்கு வழி காட்டினார்.

பக்தியோகம் செய்வதற்கு மிகவும் கஷ்டமானது. கர்ம யோகம், ஜ்ஞாந யோகத்தை அடிப்படையாகக் கொண்டது. இக்காலத்தில் பக்தியோகம் அஸாத்யம் என உணர்த்தி, ப்ரபத்தியை நிலை நாட்டினவன் திருவநந்தபுரத்து எம்பெருமானே. எப்படி எனில்—

ஸ்ரீமந் நாதமுநிகளின் திருப்பேரனார் ஸ்ரீ ஆளவந்தார் நாதமுநிகள் தாம் செய்துவந்த யோகக் கலையை - பக்தி யோகத்தை குருகைக் காவலப்பன் என்ற ஶிஷ்யருக்கு உபதேஶித்தார். அதை உபதேஶம் பெற ஆளவந்தார் குருகைக் காவலப்பனிடம் சென்று ப்ரார்த்தித்தார். குருகைக் காவலப்பனும் தை மாத புஷ்ய நக்ஷத்ரம் அபிஜித் முஹூர்த்தத்தில் தாம் வைகுண்டம் (தேஹ வியோகம்) எழுந்தருளப் போவதாகக் கூறி, அன்றைய தினம் காலையில் வந்தால் உபதேஶிப்பதாகச் சொல்லி அந்த நாளை ஒரு ஓலையில் குறித்துக் கொடுத்தார். பிறகு ஆளவந்தார் ஸ்ரீரங்கத்திற்கு வந்து விட்டார். பின்பு நம்பெருமாள் திருவத்யயநத் திருநாளிலே, திருவத்யயநம் கேட்டருளும் போது ஆழ்வார் திருவரங்கப் பெருமாளரையர் கெடுமிடர் *(10.2.)* என்கிற திருவாய்மொழியை

அபிநயிக்கும்போது ஆளவந்தார் திருவநந்தபுரத்து எம்பெருமானை ஸேவிக்க நியமநம் என நினைத்து உடன் அங்கு சென்று அநந்தபத்மநாபனை ஸேவித்து மகிழ்ந்தார். அங்கு சில திநங்கள் இருந்தபோது குருகைக் காவலப்பன் பக்தியோகம் உபதேசிக்க வரச் சொல்லிக் கொடுத்த ஓலையை (ஸ்ரீமுகத்தை)ப் பார்த்தார். அன்றைய திநம் தான் குருகைக் காவலப்பன் வரும்படிக் குறித்த திநமாய் இருந்தது. திருவநந்தபுரத்திலிருந்து அங்கு செல்ல முடியவில்லை. குறித்த நாளில் குருகைக் காவலப்பன் முக்தி அடைந்ததால், அது முதல் பக்தியோகத்திற்கு ப்ரஸக்தியில்லை.

இப்படி ஆளவந்தாரை திருவநந்தபுரத்திற்கு வரவழைத்து பக்தியோகத்தைப் பெற முடியாமல் செய்ததன் மூலம் பத்மநாபன் பெரும் உதவி புரிந்துள்ளான். ஏனெனில் பக்தி யோகம் தற்காலச் சூழ்நிலைகளில் செய்யவே இயலாது. லோகக்ஷேமமார்த்தம் நமக்கு இடரான பக்தியோகத்தை நீக்கியதால்தான் ஜ்ஞாந த்ருஷ்டியால் ஸ்வாமி நம்மாழ்வார் **கெடும் இடராய வெல்லாம் கேஸவாவென்ன** என்று தொடங்கிப் பாடினார். மேலும் **இன்று போய்ப் புகுதிராகில் எழுமையும் ஏதம் சாரா, அனந்தபுரம் சிக்கெனப் புகுதிராகில் தீரும் நோய் வினைகள் எல்லாம் திண்ணம் நாம் அறியச் சொன்னோம்** என்றவாறு பாடியுள்ளார். இந்தப் பத்து பாசுரங்களில் நான்கு முறை **திண்ணம் நாம் அறியச் சொன்னோம், நாம் அறியச் சொன்ன** என வழங்கியிருப்பது ஆளவந்தாரை இப்பெருமான் தடுத்து ஆட்கொள்ளப் போவதை உணர்ந்தே ஆழ்வார் பாடினார் எனச் சொல்லலாம் போல் உள்ளது. இப்படி ஜ்ஞாந த்ருஷ்டியால் எதிர்காலத்தில் நடக்கப் போவதைப் புராணங்களிலும், ஆசார்யர்களின் ஸ்ரீஸூக்திகளிலும் காணலாம். ஆழ்வார்கள் அவதரிக்கப் போவதை **कलौ खलु भविष्यन्ति** என ஸ்ரீமத் பாகவதத்தில் வ்யாஸர் ஸ்பஷ்டமாக அருளினார். ஆக, பக்தியோகம் இடர் - தடங்கல் என உணர்ந்து ஸரணாகதியைக் கைக் கொண்டு நாம் மோக்ஷம் பெற அநுக்ரஹிக்கவே உதவி செய்ததால் திருவநந்தபுரத்து எம்பெருமானைக் **கெடுமிடர்** என்ற திருவாய்மொழியினால் ப்ரபந்நஜந ஸந்தாந கூடஸ்தரான ஸ்வாமி நம்மாழ்வார் மங்களாஸாஸநம் செய்தருளினார் என்பதை எண்ணி நம்மிடர் கெட அந்த (அநந்த) பத்மநாபனை பணிந்தேத்துவோம்.

॥ शुभम् ॥

# அத்புதம்

*(குரிச்சி ஸ்ரீநாராயணன், அசோக்நகர், சென்னை)*


ஸ்ரீசக்கரவர்த்தித் திருமகன் ஸீதாபிராட்டியுடன் நடத்திக் காட்டிய தர்மங்களைக் கூறும் சரித்ரமான ஸ்ரீமத்ராமாயணமே ஓர் அத்புத காவியம். ஸ்ரீஹநுமான் ஸீதை இருக்குமிடத்தைக் கண்டு ராமனிடம் தெரிவித்தார். பிறகு விபீஷண சரணாகதி. அதன் பிறகு ஸமுத்ரத்தை வானர ஸைன்யங்களுடன் கடக்க ஸமுத்ரராஜனை சரணம் புகுந்தார். ஸகலபூதங்களுக்கும் அபயப்ரதானம் செய்பவராயிருந்தும் ஸமுத்ரராஜனுக்கு கைகூப்பி தர்பங்களைப் பரப்பி கிழக்கு முகமாய் வலது புஜத்தை தலையணையாய் வைத்துக் கொண்டு மற்றொரு ஸமுத்ரம் போல்படுத்தார். இதை இன்றும் திருப்புல்லாணி திவ்யதேசத்தில் ஸேவிக்கலாம். **இதுவே ஸேது.**



சரணாகதி தர்மத்தில் தனக்குள்ள விசேஷ ப்ரீதியை லோகத்தாருக்குக் காட்ட தானே அதை அனுஷ்டித்தார். '**என்னை மனிதனாகவே எண்ணுகிறேன்**' என்று ராமனே கூறியதற்கு அனுகுணமாக உலக வழக்கை தானும் செய்தான். ஏன் தன்னை மனிதனாக எண்ணியதாகக்

கூறுகிறான்? எனில், ராவணன் நான்முகனிடம் மனிதர்களைத் தவிர மற்ற யாராலும் தனக்கு ஆபத்து நேரக்கூடாது என வரம் பெற்றவன். அந்த வரத்தை மெய்ப்பிக்கவே தன்னை மனிதன் என உறுதிப்படுத்தினான் போலும்!

மூன்று தினங்கள் ஆகியும் ஸமுத்ரதேவன் வெளிவரவில்லை. ராமனின் குலமுன்னோர்களான ஸகரர் ஸாகரங்களை ஏற்படுத்தியதையும் ஸமுத்திரராஜன் மறந்தான்! **நற்பண்புகளில் பொறுமை, ப்ரியவார்த்தை இவைகளை கடைபிடித்தால் உலகம் அவனை ஸாமர்த்யம் இல்லாதவன் என கூறும்;** என சீற்றமடைந்து ராமன், வில் அம்பை எடுத்ததும் ஸமுத்ரராஜன் வெளிவந்து தன் தலைமேல் கைகூப்பி நமஸ்கரித்து **பரமாத்மாவான தேவரீர் (ராமர்) என்னை வேண்டுவதும், அதற்கு நான் பலனளிப்பதும் முறையன்று. நான்தங்களுடைய சேவகன் என்றான்.** இதனால் ஸாமர்த்யம், அனைத்தும் அறியும் தன்மை, தயை, சக்தி இவை உள்ளவனிடம் மட்டுமே சரணாகதி செய்யவேண்டும் என்ற நீதியும் தெரியவருகிறது.



**நளன் என்ற வானரவீரன் தொட்டுக்கொடுக்கும் எந்த பொருளையும் நீரில் மிதக்கும்படி நான் உதவுகிறேன்** என ஸமுத்ரராஜன் கூறிவிட்டு வணங்கி சென்றார். நளன் தன் பெருமையை தானே கூறிக்கொள்ளவில்லை

என்பதும் கவனிக்கத்தக்கது. (சொல்லக்கூடாதவற்றில் ப்ரதானம் தற்புகழ்ச்சி என்கிறார் ஸ்வாமி தேசிகன்.)

வானரர்கள் மலையைப்போன்ற மரங்களையும், பாறைகளையும், யந்திரங்களாலும் கைகளாலும் கடலில் கொட்டி அணை கட்டினர். கயிறு, அளவுகோல் கொண்டு ஒழுங்கு பார்த்தனர். ராமநாமம் எழுதப்பெற்ற கற்கள் மிதந்து அணை தயாரானது. ஓர் அணிலும் தன் பங்கிற்கு மணலை உதிர்த்து பணிபுரிந்தது. இது நடந்ததா என்று விசாரம் வேண்டா. உலக வழக்கில் ப்ரஸித்தமாக உள்ளது.

ஒவ்வொரு நாளும் கட்டப்பட்ட அணையின் நீளத்தை வால்மீகி அளந்து தருகிறார். முதல் நாள் 14 யோஜனை. அடுத்து 20, 21, 22, 23 என **ஐந்தே நாளில் 100 யோஜனை நீளமும் 10 யோஜனை அகலமும் கொண்ட அணை ஒரு குறைவின்றி கட்டப்பட்டது.** தேவ, ரிஷி, ஸித்த, சாரணர்கள் மகிழ்ந்து ராமனுக்கு திருமஞ்சனம் செய்வித்தனர். அணையில் நடக்கும்போது ம்ருதுவாக இருக்க புஷ்பங்களையும், புல்லையும் வானரர் பரப்பினர். ராமன் வாநரர்களுடன் அணைமூலம் லங்கை சென்று, ராவணனை வென்று ஸீதையை அடைந்து, பட்டாபிஷேகம் செய்து கொண்டார்.

இந்த திருவணையில் (ஸேது) ஸ்னானம் ஸகல பாபங்களையும் போக்கும். ராமன் உலகுக்குத் தந்தது திருவணை. க்ருஷ்ணன் தந்தது கீதை. இரண்டிலும் தினமும் மூழ்கினால் நல்லது. பரமாத்மாவை வேதம் **ஸேது - அணை** என கூறுகிறது. இப்படி ஸேது கட்டிய ஸேது. அதை எண்ண, நீராட நமது பந்தங்களை (காமாவாகிய அணைகளை) நீக்கும். இப்படி பிறரால் அமைக்க முடியாத ஸேது பந்தனம் ஒரு அத்புதம். ஸேதுவின் பெருமையை இம்மாத ஸ்ரீப்ரியாவின் **ஸேது** எனும் தலைப்பிட்ட வ்யாஸத்தில் கண்டு மகிழலாம்.

# தாமோதரன்

(குரிச்சி ஸ்ரீ நாராயணன், அசோக்நகர், சென்னை)



**மகன்:** ஏம்பா, அந்த பெரியவர் என்ன சொல்றார்?

**தந்தை:** குழந்தை! பெருமாளுக்கு ஆயிரம் பேர் உண்டோனோ, அதுல தாமோதரன்னு ஒரு பேர் அதை விளக்கினார்.

**ம:** அந்த பேர்ல அப்படி என்னப்பா இருக்கு? இவ்வளவு நேரமா சொல்றாரே!

**த:** நமக்கு நல்லது நடக்க அந்த ஒரு பேரே போதும். பகவானோட விளையாட்டையும், பெருமையும், அவன் நமக்கு செய்யற ஒத்தாசை இதெல்லாம் தாமோதரன்ற பேர்லயே இருக்கு!

**ம:** ஒரு பேர்ல இவ்வளோ விஷயமா இருக்கு!! நீதான் எனக்கு சொல்லேம்பா

**த:** பெருமாள் கிருஷ்ணனா வந்து வெண்ணை திருடி சாப்பிட்டானோல்யோ அப்ப ஊர்ல எல்லாரும் யசோதைகிட்ட போய் கண்ணனை பத்தி குறை சொன்னா காலம் தவறாம கோள் சொல்றவாளுக்கு பதில் சொல்றத்திலேயே யசோதைக்கு நேரம் போச்சு.

கண்ணனை கட்டிப்போட்டு பனிஷ்மெண்ட் தர நினைச்சாள். கண்ணனை உரலோட சேர்த்து வைச்சு கயறால கட்ட ஆரம்பிச்சா கயறு போறலை. அங்க இங்க இருந்த துண்டு துண்டு கயறெல்லாம் முடிச்சு போட்டு கட்டினாளாம். வீட்டில் இருந்த கயறு எல்லாம் தீர்ந்து தன் பாவாடை நாடாவை சேர்த்துக் கட்டினாளாம் ஆனா எப்பவும் 2 அங்குலம் குறைஞ்சுதாம்.

ம: அதெப்படி! எப்பவும் கரெக்டா 2 அங்குலம் குறைஞ்சுது?

த: சபாஷ்டா! யசோதை **"நான் கட்டறேன்"** **"என்னது"**ன்னு இப்படி கர்வமாயிருந்தா. அதனால தான் 2 அங்குலம் குறையும்படி பெருமாளே பண்ணினார்

ம: அப்புறம்...,

த: அம்மா மூஞ்சி முழுக்க வேர்வை. களைப்பா போயிட்டதை கண்ணன் பார்த்தான். பாவம் அம்மான்னு நினைச்சு, இருந்த கயிறில் அவனே கட்டுப்பட்டான். எல்லோரையும் விட பெரியவன், யாருக்கும் அடங்காதவன் கட்டுப்பட்டான்! அம்மா இட்ட பயத்தால குழந்தை கண்ணன் பேசவும் முடியாம உடம்பு வெளுத்து இருந்தானாம்!.

ம: அப்பா! சகாதேவன் கூட பெருமாளை கட்டினான் இல்லையா?

த: கரெக்ட். பெருமாள்கிட்ட நாம அன்பா இருந்தா, அவன் நாம்ப சொல்றதெல்லாம் செய்வான். நம்மாழ்வார் இந்த நிகழ்ச்சியை நினைச்சு ரொம்பநாள் மயக்கமா இருந்தாராம்.

ம: அப்பா, **கண்ணிநுண் சிறுத்தாம்பு** எனக்கு சொல்லிக் கொடுத்தயே. அதுவும் இதைத்தான் சொல்றதா?

த: கெட்டிக்காரண்டா நீ. அது, மதுரகவிஆழ்வார் பாடினது. சின்ன சின்ன கயறு முடிச்சுகள் கண்ணன் உடம்பை உறுத்தற மாதிரி இருந்ததா அவர்தான் பாடினார். நம்மாழ்வார் மயக்கமாயிட்டத்தால அதை தெளிவா சொன்னவர் மதுரகவிகள்தான்!

இப்படி, பெருமாள் வெண்ணை திருடி, மாட்டிண்டு உரல்ல கட்டுபட்ட கதையினால் அவனுக்கு **தாமோதரன்னு** பேர் இதை தெரிஞ்சுண்டா நம்ப கட்டு போகும், நாம தப்பு பண்ண பாவம் போகும். கண்ணன் வயத்துல கயறு கட்டின தழும்பை பார்த்து கோபிகள் சிரிப்பார்களாம். ஸ்ரீரங்கத்துல அந்த தழும்பை மறைக்கத்தான் ரங்கநாதனுக்கு வயிற்று மேல வஸ்த்ரத்தால மூடிடறா.

**ம:** அப்பா, பாவம்பா கிருஷ்ணன்

**த:** குழந்தை. இந்த மாதிரி எல்லாரோடையும் விளையாடறதுதான் பெருமாளுக்கு ரொம்ப பிடிக்கும். அதான் அவனுக்கு பெருமை. **தாமந்** அப்படின்னா மின்னல் போன்ற ஒரு கோடு/கீற்று. பகவான் நமக்குள்ளேயும், வெளியிலேயும் மின்னலா கூட இருந்து வைகுண்டத்துக்கு வழி காட்டறார்.

கயறு என்ற அர்த்தத்துல பார்த்தா, பெருமாள் கயிறு போலவும், நாம், இந்த உலகு எல்லாம் அதுல கோத்திருக்கிற மணிகள் போலவும் ஆகிறது. அதாவது மணிகளுக்கு கயறு போல, நமக்கு பெருமாள் ஆதாரமாக இருக்கான். இன்னும் ஒண்ணு கேளு. கண்ணன் மண்ணைத் தின்று தன் வாயில் உலகத்தை காட்டினானே! ஞாபகம் வர்றதா. அப்படி உலகத்தை எல்லாம் தன் வயிற்றில் கட்டி உள்ளான் என்றும் அர்த்தம்.

**மகன்:** அப்பா, ஆசமனம் செய்யச்சே கூட **தாமோதரான்னு** சொல்றமில்ல!

**தந்தை:** உனக்கு பூணல் போட்ட செலவு வீண் போக வில்லையடா! இப்படி வயிற்றில் கட்டுண்டவனை எப்பவும் நம்ம புத்தியில மறக்காம வைச்சுக்கத்தான் ஆசமனத்தில் **தாமோதரா** என தலையை தொட்டுக் கொள்கிறோம்.

**திருநாமம் : தாமோதரன், திறம் : சிவப்பு,**
**ஆயுதம் : நான்கு கயிறு, தேவி : லாவண்யசுந்தரி**

சில்லறை விஷயங்கள்

# ராமாநுஜ தயாபாத்ரம்

( குரிச்சி ஸ்ரீ நாராயணன், அசோக் நகர், சென்னை)

**ராமாநுஜ தயாபாத்ரம் ஜ்ஞாந வைராக்ய பூஷணம் ।**
**ஸ்ரீமத் வேங்கட நாதார்யம் வந்தே வேதாந்த தேசிகம் ॥**

இது ஸ்ரீ வேதாந்த தேசிகன் துதியாகும். இதை ப்ரஹ்ம தந்த்ர ஸ்வதந்த்ர ஜீயர் ஆவணி ஹஸ்த திருநக்ஷத்ரதிநத்தில் திருநாராயணபுரத்தில் இயற்றினார். இதை ஜீயர் மிகவும் பக்தியுடன் ஸமர்ப்பித்ததைக் கண்டு ஸ்வாமி தேசிகன் இதை அங்கீகரித்தார்.

இம்மாதிரியாக ஒரு சிஷ்யர் தன் குருவின் புகழாக இயற்றிய ஶ்லோகம் அல்லது பாட்டே தனியன் எனப்படுகிறது. தனியன் எனில் ஒரு நூலில் சேராதது, ஒப்பற்றது என்ற பொருள் உடையதாகும். சிஷ்யர்கள் பகவானைப் பற்றிய நூல்களை வாசிக்க, கேட்க ஆரம்பிக்கும் போதும், முடிக்கும் போதும் குரு பரம்பரையை (வரிசையை) நினைக்கத் தனியன் மிகவும் பயனுள்ளதாகும். குருவின் உயர்வையும், அவர் நமக்குச் செய்த உதவிகளையும் சுருக்கமாக, ஸுலபமாக நினைத்திட உதவும்.

தமிழ் வேதமாகிய ஆழ்வார்களின் திவ்யப்ரபந்தத்தைத் தொடங்கும் முன் இந்த **ராமாநுஜ தயாபாத்ரம்** என்ற தனியன் அரங்கனின் நியமநத்தின் பேரில், ஸ்வாமி தேசிகனால் ஏற்கப்பட்டு நம்மால் அநுஸந்திக்கப்பட்டு வருகிறது. இதில் ஸ்வாமி தேசிகனுடைய அளவற்ற மஹிமை எல்லாம் சிறிய கண்ணாடி பெரிய உருவங்களைக் காட்டுவது போல அமைந்துள்ளது.

ராமாநுஜ தர்ஶநத்திற்காக ஸ்வாமி தேசிகன் ஆற்றிய தொண்டு போல் இது வரை யாரும் செய்ததில்லை. இனி

செய்யப் போவதுமில்லை. இந்தக் காரணத்தால் பகவான் தொடங்கி எல்லா பூர்வாசார்யர்களின் அருளுக்கும் விஶேஷமாகப் பாத்ரமானவர். இதை இந்தத் தனியனில் அநுபவிக்கலாம். ஸ்வாமி தேஶிகன் நமக்கு உதவியவை களில் சில ப்ரகாரங்களாவன: -

- சரமஶ்லோகம் முதலிய வார்த்தைகளுக்கு மெய்ப் பொருள் காட்டியது.

**பகவானுக்குத் தொண்டு செய்ய வேண்டியதை உத்தர க்ருத்யாதிகாரம், ஶாஸ்த்ரீய நியமநாதிகாரம் இவற்றில் ஸ்தாபித்ததால் பகவானுக்குத் தொண்டு செய்வதையே மூச்சாகக் கொண்ட லக்ஷ்மணனின் க்ருபைக்கு பாத்ரமானவர் ஸ்வாமி தேஶிகன்.**

- ஸ்ரீரங்கத்தில் துருஷ்க உபத்ரவத்தால் நேர்ந்த ஸங்கடங்களை ஸ்ரீ கொப்பணார்யன் என்ற செஞ்சி மன்னன் ஸ்வாமி தேஶிகன் நியமநப்படி தீர்த்து வைத்துத் திருவரங்கனை திரு ப்ரதிஷ்டை செய்வித்து, அத்யயந உத்ஸவத்திற்கு வந்த தடங்கல்களை ஸ்வாமி தேஶிகனே தீர்த்து வைத்தார்.

ஸ்ரீபாஷ்யத்திற்கு உரையான ஶ்ருதப்ரகாஶிகையை ரக்ஷித்து, ப்ரவசநம் மூலம் ப்ரகாஶப்படுத்தியது ஸ்வாமி தேஶிகனே.

திருவாய்மொழியின் உரையாம் திருவாறாயிரப்படிக்கு அநுகுணமாக **நிகமபரிமளம், த்ரமிடோப நிஷத்ஸாரம்** முதலிய தம் நூல்கள் மூலம் ரக்ஷை ஏற்படுத்தியது.

இப்படி ஆழ்வார்களின் அருளிச் செயல்களுக்கு உள்ள ஏற்றத்தைப் பலபடியாலும் ஸ்தாபித்ததால் இத்தனியன் தமிழ் வேதத்திற்கு முன் அநுஸந்திக்கப்படுவது சாலப் பொருத்தமே. இத்தனியனுக்குப்பூர்வர்கள் அநுபவித்த ரீதியில் யதாமதி (அறிவுக்கெட்டியவரை) சில பொருள்களை விஜ்ஞாபிக்கிறேன்.

**ராமாநுஜ தயாபாத்ரம்:**- 1. ரமா ஸம்பந்தியான பகவானின் அநுக்ரஹத்தைப் பெற்றவர். **அகலகில்லேன் இறையும் ந ஜீவேயம் க்ஷணமபி** என்று இமைப்பொழுதும் பிரியாத

திவ்யதம்பதிகளே ஶரணாகதி செய்கிறபோது உபாயமாகவும், பின்பு கைங்கர்யத்திலும் குறிக்கப்படுகின்றனர் என்ற ப்ரமாண வசநங்களை நிலை நிறுத்தியவர் ஸ்வாமிதேஶிகன். அதனால் திவ்யதம்பதிகளின் க்ருபைக்குப் பாத்ரமானவர். **அநுஜ** என்பதற்குப் - பிறகு உண்டான என்று பொருள். தங்கள் விஷயத்தில் தேஶிகன் கிஞ்சித்காரம் செய்தபிறகு உண்டான க்ருபை என்பதாயிற்று.

**2. ராம** என்று சக்ரவர்த்தித் திருமகனைச் சொல்லி, **அநுஜ** என லக்ஷ்மணன், பரதன், ஶத்ருக்நன் ஆகிய மூவரையும் சொல்லி அவர்களுடைய க்ருபைக்கு பாத்ரமானவர். ஸ்வாமி தேஶிகன் இயற்றிய **ரகுவீரகத்யம், அபயப்ரதானஸாரம்** இவற்றில் **ஶரணாகதர்களைக் காப்பதே தனது (பகவானது) வ்ரதம்** என்பதைப் பறைசாற்றியதால் ராமனுடைய க்ருபைக்குப் பாத்ரமானவர்.

***ஶ்ருதப்ரகாஶிகா ரக்ஷணம், ஸ்ரீ அதிகரண ஸாராவளி, ந்யாய ஸித்தாஞ்ஜநம், ஶததூஷணீ, தாத்பர்ய சந்த்ரிகை முதலிய நூல்களை ஸ்வாமி தேஶிகன் செய்து, ஸ்ரீபாஷ்யகாரரின் அருளைப் பெற்றவர்.***

பகவானுக்குத் தொண்டு செய்ய வேண்டியதை **உத்தர க்ருத்யாதிகாரம், ஶாஸ்த்ரீய நியமநாதிகாரம்** இவற்றில் ஸ்தாபித்ததால் பகவானுக்குத் தொண்டு செய்வதையே மூச்சாகக் கொண்ட லக்ஷ்மணனின் க்ருபைக்கு பாத்ரமானவர் ஸ்வாமி தேஶிகன்.

பரதனால் தான் பாதுகையின் ப்ரபாவம் உலகுக்குக் காட்டப்பட்டது. அந்தப் பாதுகாப்ரபாவத்தை **ஸ்ரீ பாதுகா ஸஹஸ்ர**த்தில் விவரமாகக் கூறியதால் பரதனின் க்ருபைக்குப் பாத்ரமானவர்.

பகவானை விட அவன் அடியார்களுக்குத் தொண்டு செய்வதே ஏற்றம் என்ற தொல்வழியைக் காட்டியது ஸ்ரீ ஶத்ருக்நன். அதைப் **புருஷார்த்தகாஷ்டாதிகாரம்** முதலிய இடங்களில் நன்கு உபதேஶித்ததால் ஶத்ருக்நனின் அருளுக்கு விஷயமானவர் ஸ்வாமி தேஶிகன்.

3. **ராம** என்று பலராமனைச் சொல்லி, அவரது திருத்தம்பியாகிய க்ருஷ்ணனை **ராமாநுஜ** என்ற சொல் கூறும். க்ருஷ்ணன் சொன்ன கீதைக்குத் தவறான பொருள்களைக் கூறியவர்களைக் கண்டித்து, உண்மைப் பொருளைத் தமது **தாத்பர்ய சந்த்ரிகை, சரமஸ்லோகாதிகாரம்** முதலிய இடங்களில் உலகுக்கு நன்கு காட்டியபடியால் **கண்ணபிரான்** திருவருளுக்குப் பாத்ரமானது சொல்லப்பட்டது.



4. **ராம** எனப் பிராட்டியையும், பெருமாளையும் சொல்லி, அவர்களுக்கு **அநுஜ** என ஸ்வாமி நம்மாழ்வாரைக் குறிக்கும். ஆசார்ய பரம்பரையில் திவ்ய தம்பதிகளுக்குப் பிறகு இக்கர்ம பூமியில் அவதரித்தவர் நம்மாழ்வார். விஷ்வக்ஸேநர் இப்பூமியில் அவதாரம் செய்யாமல், தானான தன்மையில் நம்மாழ்வாருக்கு ஆசார்ய ரானார். திவ்யப்ரபந்தங்கள் விஷயமாகவும், ஆழ்வார் கள் விஷயமாகவும் ஸ்வாமி தேசிகன் செய்த கைங்கர்யங்களை முதலில் கூறியுள்ளோம். எனவே ஆழ்வார் தம் க்ருபைக்கு ஸ்வாமி தேசிகனைப் பாத்ர மாக்கினது சொல்லப்படுகிறது.

5. **ராம** என ராமமிஶ்ரர் என்ற திருநாமம் கொண்ட மணக்கால் நம்பியைக் கூறி **அநுஜ** என்று அவருடைய கடாக்ஷத்தைப் பெற்ற ஆளவந்தாரைக் குறிக்கும். ஸ்ரீஆளவந்தாரின் **ஸ்தோத்ரரத்நத்திற்கும், சது: ஶ்லோகிக்கும்** உரைகள், **கீதார்த்த ஸங்க்ரஹத்திற்கு ரக்ஷை** எனத் தாம் இயற்றிய நூல்கள் மூலம் ஆளவந்தாரின் அருளுக்குப் பாத்ரமானதைக் காட்டும்.

6. ராமாநுஜ என நம் உடையவரைச் சொல்லுகிறது. **ச்ருதப்ரகாசிகா ரக்ஷணம், ஸ்ரீ அதிகரண ஸாராவளி, ந்யாய ஸித்தாஞ்ஜநம், சததூஷணீ, தாத்பர்ய சந்த்ரிகை** முதலிய நூல்களை ஸ்வாமி தேசிகன் செய்து, ஸ்ரீபாஷ்யகாரரின் அருளைப் பெற்றவர். உடையவர் பரமரஹஸ்யமாக பாஷ்யத்திலும், கத்யங்களிலும் காட்டியருளின சரணாகதி மார்கத்தை, **ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம்** முதலிய ரஹஸ்ய நூல்களினால் வெளியிட்டு அருளியதால் உடையவரின் பரிபூர்ண க்ருபைக்கு ஸ்வாமி தேசிகன் பாத்திரமான படியைக் கூறும்.

ராமன் விச்வாமித்ரரிடம் கேட்ட அஸ்த்ரங்களை உடனே லக்ஷ்மணன் ஒருவனுக்கு உபதேசித்தான். எம்பெருமானார் திருக்கோட்டியூர் நம்பியிடம் கேட்டதை உடன் ஸ்ரீமுதலியாண்டான், ஸ்ரீகூரத்தாழ்வான் இருவருக்கே கூறினார். ஸ்வாமி தேசிகனும் தாம் இயற்றிய நூல்கள் மூலம் பகவானும் ஸாதிக்க முடியாததை ஸாதித்து, இன்று அடியார்கள் குழாங்கள் குழாங்களாய் சரணாகதி செய்து கொள்ளும்படி வழிவகுத்து ப்ரகாசிக்கிறார்.

7) ராமாநுஜ என ஸ்வாமி தேசிகனுடைய மாமாவும், ஸாக்ஷாத் ஆசார்யனுமான கிடாம்பி அப்புள்ளாரைக் கூறி, அவரது அருளால் ஸர்வ சாஸ்த்ரங்களையும் இருபது திருநக்ஷத்ரத்திற்குள் பயின்றது சொல்லப்படுகிறது.

இவ்வாறு எல்லா பூர்வாசார்யர்களுடைய க்ருபைக்கு இலக்கானவர் ஸ்வாமி தேசிகன் எனக் காட்டப்பட்டது. தவிர, பூர்வாசார்யர்களுடைய அருளைப் பெற விருப்பம் உள்ளவர்கள் ஸ்வாமி தேசிகனை வணங்கினால் அவ்வருளைப் பெறலாம் என்றும் தெரியவருகிறது. **ஜ்ஞாந வைராக்ய பூஷணம்"** பூர்வாசார்யர்களுடைய அருள் செய்த நன்மைகளைக் கூறுகிறது. புலன்களுக்குப் புலப்படாத வஸ்துக்களை அறிகையும், குறிப்பாக பகவானை அறிகையும் **ஜ்ஞாந** என்ற சொல் கூறும். அஹிந்த்ரபுர க்ஷேத்ரத்திலே யோகத்தால் கருடனையும், ஹயக்ரீவனையும் ஸேவித்து அருள் பெற்றவர் ஸ்வாமி தேசிகன். மேலும், குழந்தைப்

பருவத்தில் நடாதூர் அம்மாள் காலக்ஷேப கோஷ்டியிலே விட்ட இடத்தை எடுத்துரைத்ததையும் குறிக்கும்.

ஜ்ஞாநத்தால்தான் பகவானிடம் ஆராத காதல் உண்டாகும். அக்காதலினால் மற்றவைகளில் விரக்தி ஏற்படும். இதை **வைராக்ய** பதம் கூறுகிறது. ஸ்வாமி தேசிகனின் விரக்தி, வாக்கிற்கு அப்பாற்பட்டது. **வைராக்ய பஞ்சகம், ஸ்வநிஷ்டாபிஞ்ஞாநாதிகாரம்** இவைகளில் ஸ்வாமியின் வைராக்யத்தை ஓரளவு உணரலாம். ப்ரம்ம சாரிக்குத் தங்கக்காசு வரவழைத்துக் கொடுக்கக் கூடிய சக்தி இருந்த போதிலும், பொருளில் பற்றற்று இருந்ததால் பெருமை அதிகம். அசக்தனின் வைராக்யம் சோபிக்கா தல்லவா? இந்த இரு குணங்களையுமே தன் திருமேனிக்கு ஆபரணங்களாகக் கொண்டவர் என்பதை **பூஷணம்** என்ற சொல் கூறும். அல்லது தேசிகனால் அக்குணங்கள் பெருமை பெற்றன என்றுமாம்.

***ஸ்ரீமத் வேங்கடநாதார்யம்:*** திருவேங்கடமுடையானின் திருமணி அவதாரமாகவும், ஸாக்ஷாத் அவதாரமாகவும் போற்றப்படுபவர். புரட்டாசி ச்ரவணத்தில் அவதரித்ததால் இத்திருநாமம் சூட்டப் பெற்றார். ஸ்ரீமத் என்பதால் வேதங்களுக்குத் தவறான அர்த்தங்களைக் கூறுபவரைக் கண்டித்து, சரியான பொருளைக் கூறி ஜயக்கொடி நட்டவர் என்று குறிக்கப்படுகிறது. ஸ்ரீ ராமாவதாரத்திலும், ஸ்ரீ க்ருஷ்ணாவதாரத்திலும் சரணாகதி செய்தவர்களை விரல் விட்டு எண்ணலாம். ஆனால் ஸ்வாமி தேசிகனின் அவதாரத்திற்குப் பின் ப்ரபத்தி செய்தவர்களை எண்ணி முடியாது. அவ்வளவு அதிகம். எனவே தனது விஜயயாத்ரையில் தேசிகன் பகவானையும் வென்று விளங்குகிறார்.

**வந்தே:-** வணங்குகிறேன். பாட்டின் முடிவில்தான் பொதுவாக **வந்தே** என்பர். இங்கு தேசிகனின் பெருமைகளைக் கூறிவந்தபோது, அதில் தன்னை மறந்து நடுவிலேயே **வணங்குகிறேன்** என்றார்.

**வேதாந்ததேசிகம்:** முப்பத்திரண்டு முறை ஸ்ரீபாஷ்ய ப்ரவசநம் செய்தவர் ஸ்வாமி தேசிகன். இவருடைய ப்ரவசநத் திறமையை மெச்சி அழகிய மணவாளன் **வேதாந்தாசார்யர்** என்ற விருதைத் தந்தார். தாயார் **ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரர்** என்ற பட்டத்தை அருளினார். ஸஹஸ்ரநாமம் எனில் அது விஷ்ணு ஸஹஸ்ரநாமத்தையே குறிக்கும். அதுபோல புராணம் எனில் விஷ்ணுபுராணம், பாஷ்யம் எனில் நம் ஸ்ரீபாஷ்யம், பாகவதம் எனில் பெருமாளைக் கூறும் பாகவதம், ஸ்தோத்ரம் எனில் ஆளவந்தாரின் ஸ்தோத்ர ரத்நம், திருமலை-திருப்பதி எனில் திருவேங்கடமுடையானின் திவ்யதேசத்தை மட்டுமே எங்ஙனம் குறிக்குமோ, அப்படியே தேசிகன் எனில் பொதுவாக ஆசார்யன் என்ற பொருளுடையதாயினும் நம் நிகமாந்தமஹாதேசிகனை மட்டுமே முக்யமாகக் குறிக்கும்.

**ராம** சப்தத்தால் அ என்ற எழுத்தும், **அநுஜ** பதத்தால் **ம** என்ற எழுத்தின் பொருளும், **தயாபாத்ரம்** என்றதால் **உ** என்ற எழுத்தின் பொருளான வேறு எவருக்கும் உரியவனல்லன் என்பதும் தெரிகிறது. இது ப்ரணவத்தின் பொருள். **ஜ்ஞாந வைராக்ய பூஷணம்** என்பதால் பகவானுக்கே அடிமை என்பதும் தன்னது என்று எதுவுமில்லை என்பதும் கூறப்பட்டது. இது **நம:** என்பதின் பொருள். **ஸ்ரீமத் வேங்கடநாதார்யம்** என நாராயண சப்தத்தின் பொருளும், **வந்தே** என நமது கைங்கர்யத்தைக் குறிக்கும். இவ்வாறு இத்தனியன் திரு **அஷ்டாக்ஷரத்தின்** பொருளைத் தன்னுள் கொண்டிருப்பது விசேஷமாகும்.

**ராமாநுஜ** என்ற திருநாமத்தைக் கொண்டு ஆரம்பிக்கும் இத்தனியன் நமக்கு ஸகலக்ஷேமங்களையும் அளிக்கும் என்பது திண்ணம்.

**அருள்தரும் ஆரணதேசிகனே ! எங்கள் தூப்புல் தேவே !**
**வரு கவிதார்க்கிக சிங்கமே ! வாதியர் வாழ்வறுத்தாய் !**
**இரு கையும் கூப்பியுரைக்கும் இவ்விண்ணப்பமொன்று கேளாய்**
**உருவவெனக்கருளாய் என்றுமுள்ளம் உன் தொண்டரையே.**

॥ शुभम् ॥

# ஸ்மரணம்

(குரிச்சி ஸ்ரீ நாராயணன், அசோக்நகர், சென்னை)

பகவானை இடைவிடாது நினைப்பது நமது ஸம்ஸார கட்டுக்களை விலக்கிவிடும். கண்ணுக்குத் தெரியும்படி பலன் இருந்தால் வார்த்தையில் நம்பிக்கை அதிகமாகும். பகவானை அன்புடன், பலனை எதிர்பார்க்காமல் நினைத்து வந்தால் ஸகல துன்பங்களும் ஸூர்யனைக் கண்ட பனிபோல் விலகும். இதை ப்ரஹ்லாதனுடைய சரித்ரம் மூலம் அறியலாம்.



தாயின் வயிற்றில் இருக்கும் போதே நாரத மஹர்ஷியின் உபதேசம் பெற்றவர் ப்ரஹ்லாதன். மஹர்ஷிகள் ப்ரஹ்லாதனை வர்ணிக்கும் சில வார்த்தைகளைப் பார்க்கலாம். பெரியோர்களிடம் ப்ரியமுள்ளவன். சீலம் நிறைந்தவன். ஸத்யஸந்தன். இந்த்ரியங்களை ஜயித்தவன். குருவை பகவானைப் போல் வணங்குபவன். ஸாதுக்களின் பேச்சைப் பற்றிய ஸபையில் தேவர்களும் ப்ரஹ்லாதனை பக்திக்கு உவமையாகக் கூறுவர். ஸ்ரீமந் நாராயணனிடம் நிகரற்ற அன்பு கொண்டவன். உட்காரும் பொழுதும், திரியும் பொழுதும், புசிக்கும் பொழுதும், படிக்கும் பொழுதும், பானம் செய்யும் பொழுதும், பேசும் பொழுதும் கோவிந்-தனையே எண்ணுவான். எல்லா உயிர்களிடமும் அன்புடன் இருப்பான்.

த்யானத்தில் சிலஸமயம் அழுவான், சிரிப்பான், கானம் செய்வான், கூத்தாடுவான், மௌனமாயும் இருப்பான்.

ஹிரண்யகசிபுவிடம் தான் படித்ததைச் சொல்கிறான்- 'விஷ்ணுவின் ஶ்ரவணம், கீர்த்தனம், ஸ்மரணம்,

பாதஸேவை, அர்ச்சித்தல், வந்தனம், ஊழியம் செய்தல், ஸ்நேஹம், ஆத்ம நிவேதநம் (ஶரணாகதி)' என்று ஸ்ரீவிஷ்ணு பக்தியைப் படித்ததாகக் கூறுகிறான். ★

தன்னுடன் படிப்பவர்களுக்கு ப்ரஹ்லாதன் உபதேஶித்தது:-

'ஸர்வருக்கும் வேண்டியவராயும், ஆத்மாவாயும் உள்ள

> ஒன்பது என்னும் எண் ஒற்றை எண்களில் கடைசியும் பெரியது மானது. இந்த எண்ணால் வேறு எந்த எண்ணைப் பெருக்கினாலும் வரும் பெருக்கத்தில் (product) இருக்கும் ஒற்றை எண்களைக் கூட்டினால் ஒன்பதே வரும். ஆதலால் இந்த எண் பூர்ணத்வத்தையும் மற்ற எண்களுடன் சேரும்பொழுது அவற்றைத் தன் மாதிரி மாற்றும் ஆற்றலையும் படைத்தது எனக்கூறுவர். ப்ரக்ருதம் ஸ்ரீமத் அழகியசிங்கரின் பட்டத்து எண்ணாகிற '45' (4+5=9) இவ் வர்க்கத்தைச் சாரும். எம்பெருமானுக்கும் சரி அவனடியார்க ளுக்கும் சரி அவருடைய ஸாதனைகள் வியக்கத் தக்கனவாகி உள்ளன. ஸ்ரீமதழகியசிங்கரும் தன் சிஷ்யர் களைத் தன்னைப்போல் எம்பெருமானுக்கு உகந்தவர்க ளாக ஆக்கும் சிறந்த உதாரகுணம் படைத்தவர்.

ஸ்ரீஹரியின் பாதாரவிந்தமே மானிடர் அனைவரும் அடைதற்கு உசிதமானது. மனிதன் நூறு வயதில் பாதி உறக்கத்தில் செல்கிறது. சிறுவயது விளையாட்டில் இருபது வருஷமும், மூப்பினால் இருபது வருஷமும் கழிகிறது. மீதி யுள்ள காலமும் ஸம்ஸார நிர்பந்தத்தில் வீணாகிறது.'

ஹிரண்யகஶிபு பலவிதமாக ப்ரஹ்லாதனைக் கொடுமைப் படுத்துகிறான். அப்போது ப்ரஹ்லாதன் ஸ்ரீவிஷ்ணுவையே த்யானம் செய்துவந்தான். அதனால் அவனுக்கு ஒருவித ஆபத்தும் நேரவில்லை. சில ஸம்பவங்களை அநுப விப்போம்:-

ஆயுதங்களால் வீரர்கள் ப்ரஹ்லாதனைத் தாக்குகிறார்கள்.

<u>ப்ரஹ்லாதன்:- 'வீரர்களே! ஸ்ரீமந்நாராயணன் உங்களிலும்,</u>

*श्रवणं कीर्तनं विष्णोः स्मरणं पादसेवनम् ।
अर्चनं वन्दनं दास्यं सख्यमात्मनिवेदनम् ॥



உங்கள் ஆயுதங்களிலும், என்னிலும், மற்று எங்கும் பரிபூர்ணனாய் எழுந்தருளியிருக்கிறான். இது ஸத்தியம். இதனால் உங்கள் ஆயுதங்கள் என் மீது பாயாதிருக்கட்டும்' என்றான். அப்படியே ஒரு தீங்கும் வரவில்லை.

ஹிரண்யகஶிபு; குழந்தையிடம் உனக்கு பயமாயில்லையா? என்றதற்கு ப்ரஹ்லாதன் கூறுகிறான்:- 'எவனை சிந்தித்த உடனே பிறப்பு, மூப்பு, இறப்பு முதலிய எல்லா பயங்களும் போகுமோ அந்த அனந்தன் என் உள்ளே ப்ரகாஶிக்க எனக்கேது பயம்?' என்றான். ★

கொடிய விஷமுள்ள நாகங்கள் தீண்டியபோதும் ப்ரஹ்லாதனின் தோலில் கூட காயம் ஏற்படவில்லை. பின் விஷம் பரவாதது பற்றிக் கூற வேணுமோ? க்ருஷ்ணாநுபவ அம்ருத ஸாகரத்தில் இருந்ததால் நாகங்களின் பற்கள்தான் உடைந்ததாம்! ★

திக்கஜங்கள் முட்ட அவைகளின் தந்தங்கள் தான் முறிந்தன. இப்படி நடந்தது என் மஹிமையால் அல்ல. ஸ்ரீஜனார்த்தன ஸ்மரண ப்ரபாவத்தால்' என்கிறான்.

நீதி ஶாஸ்த்ரத்தில் கற்றதைக் கூறு? எனத் தந்தை கேட்க, ப்ரஹ்லாதன் பதில் உரைக்கிறான்:-

'ஐயா! உலகிலே நண்பர், எதிரி என்பவர்களை நான் காணவில்லை. உலகை ஶரீரமாகக் கொண்டுள்ள

*भयं भयानां अपहारिणि स्थिते मनस्यनन्ते मम कुत्र तिष्ठति ? ।
यस्मिन् स्मृते जन्मजरान्तकादिभयानि सर्वाण्यपयान्ति तात !॥'

*स त्वासक्तमतिः कृष्णे दश्यमानो महोरगैः ।
न विवेदात्मनो गात्रं तत्स्मृत्याह्लादसंस्थितः ॥

ஸ்ரீ ஜகந்நாதன் எங்கும் எழுந்தருளியுள்ளபோது மத்ரு, மித்ரன் என்ற பேச்சுக்கு இடமே இல்லை என்கிறான்.

**सर्वभूतात्मके तात जगन्नाथे जगन्मये ।**

**परमात्मनि गोविन्दे मित्रामित्रकथा कुतः? ॥**

இவ்வாறே மலையிலிருந்து உருட்டியபோது தன் இதயத்திலுள்ள பகவானுக்கு வலிக்கக் கூடாதே என இரு கைகளாலும் தன் மார்பை மூடிக் கொண்டான். (**மெள்ள எழுந்து**-திருப்பாவை). ஸமுத்ரத்தில் தள்ளிப் பாறைகளால் மூடியபோதும் **கடல்ஞாலம் செய்தேனும் யானே என்னும்** என்ற மாதிரியான த்யான அநுபவத்தால் அந்த ஸங்கடத்தையும் ஜயித்தான்.

**பகவத் ஸ்மரணம் ஸர்வ அநிஷ்ட நிவாரணம்** என்பதற்கு முக்கிய எடுத்துக்காட்டு ஸ்ரீப்ரஹ்லாதாழ்வார்.

# சரணாகதியில் ஐந்து ஐயங்கள்

(குரிச்சி ஸ்ரீ நாராயணன், அசோக்நகர், சென்னை)

திருமடைப்பள்ளி ஆச்சான் ஸ்ரீ ராமானுஜருக்கு மடைப் பள்ளி கைங்கர்யம் செய்கிறார். அப்போது ராமானுஜரிடம் தமக்கு விசேஷ அர்த்தங்களை உபதேசிக்குமாறு வேண்டு கிறார். அப்போது:-

***ராமானுஜர்:***- ஆச்சானே! என்னிடம் உள்ள ஸர்வத்தையும் உமக்குக் கொடுத்துவிட்டேன். சரணாகதி விஷயமாகச் சில அர்த்தங்களை பகவான் கூறியுள்ளான். அதை நாம் த்யான யோகத்தால் கண்டு உமக்குக் கூறுகிறோம் (என்றவாறே த்யானத்தில் ஆழ்ந்து விடுகிறார்) அப்போது அவர் அருளியதாவது குருக்ஷேத்ரத்தில் கண்ணன் அர்ஜுனனுக்குக் கீதையை உபதேசிக்கிறான். அதில் பரமாத்மா, ஜீவன் இவர்களைப்பற்றியும், ஜீவன் பரமாத்மாவை அடையும் முறையையும், கண்ணனே புருஷோத்தமன் என்பதையும் எடுத்துரைத்தான். அதற்குமேல் அர்ஜுனன் சரணாகதி செய்ய நினைப்பவர்கள் பகவானை நெருங்க முடியுமா? என்றவாறு பல ஸந்தேஹங்களைக் கேட்கிறான்.

- ***அர்ஜுனன்:***- கண்ணா ! நீயோ எல்லாம் அறிந்தவன். உனது ஆற்றலோ அளவிட முடியாதது. எனவே நீ சரணாகதி செய்ய விழைபவர்களின் பாவங்களை அறிவாய். அப்பாவங்களுக்குத் தக்க தண்டனையும் அளிக்க சக்தி கொண்டவன். உன்னை நெருங்குவதே முடியாது போல் இருக்கிறதே.

- **கண்ணன்:** சரணாகதி செய்பவர்களுக்காக மஹாலக்ஷ்மியே பரிந்து பேசுவதால் என் அறிவும் சக்தியும் அங்கு வேலை செய்யாது. மஹாலக்ஷ்மிக்கு ஜீவர்களிடம் கருணையும் என்னிடத்தில் நினைத்ததை முடித்துக் கொள்ளக்கூடிய திறமையும் உண்டு. உலகிலும் அரசர்களின் அந்த: புரத்தில் இருப்பவர் விஷயத்தில் ராணியின் சிபார்சின் பேரில் அரசன்

மன்னிப்பதைக் காண்கிறோமல்லவா. அதுபோல நானும் (பகவானும்) உங்கள் பாவங்களை அறியாதவனாக உங்களுக்குத் தோன்றுவேன். எனவே என்னை அணுகுவதற்குத் தயக்கம் வேண்டாம்.

❖ **அர்ஜுனன்:** கண்ணா! அவரவர் செய்த வினைக்குத் தக்கவாறுதானே நீ பலன் தருவாய். அப்படி இருக்க சரணமடைந்தால் அளவில்லாத மோக்ஷ பலனைத் தருவாயா?

❖ **கண்ணன்:** ஜீவர்கள் என்னை அடையவேண்டும் என்பதற்காகவே நான் உலகங்களைப் படைக்கிறேன். சரணமடைபவர் விஷயத்தில் அவர்களது பாவங்களைத்தான் நான் நீக்குகிறேன். வைகுந்தம் இயற்கையில் ஜீவர்களுக்கும் சொந்தமானதுதான். எப்படி என்கிறாயா. உலகில் தகப்பனின் சொத்தில் பிள்ளைக்கு உரிமை உள்ளதல்லவா. உலகுக்கே நான் தந்தையாகிறேன். எனவே எனது வைகுந்தமும் உங்களுக்கும் உரியதே. எனவே கவலைப்பட வேண்டாம்.

❖ **அர்ஜுனன்:** கண்ணா ! நீயோ நினைத்ததை எல்லாம் அடையக்கூடியவன். பரிபூர்ணன். எங்களால் உனக்கு என்ன ப்ரயோஜனம் உண்டாகப் போகிறது? ஆகவே நீ எங்களை ஏற்பாயோ, மாட்டாயோ? தெரியவில்லையே.

❖ **கண்ணன்:-** உலகில் நல்ல குணமுடைய அரசர்களிடம் ஒரு எலுமிச்சம்பழத்தைக் கொடுத்துவிட்டு வேண்டியதை மனிதர் பெறுகிறார்கள். நானோ இயற்கையில் கருணையே வடிவெடுத்தவன். ஆகையால் சிறிய கார்யமான சரணாகதியை ஒருமுறை செய்துவிட்டால், என்னால் அதை ஏற்காமல் இருக்க முடியாது. மேலும் இதுநாள் வரை ஏன் கருணை காட்டவில்லை என்றும், இவனுக்கு மட்டும் ஏன் மோக்ஷம் தந்தான் என்றும் என்மேல் குறை வராமல் இருக்கவும் சரணாகதி

செய்யவேண்டும். அந்த சரணாகதியை நான் ஏற்று, மறவாமல் மிகவும் தாழ்ந்தவர்களுக்கும் மோக்ஷம் தருவேன்.

❖ **அர்ஜுனன்:** கண்ணா நீ பொதுவாகத் தாமதித்தே பலனளிப்பாய் எனக் கூறுகிறார்களே?

❖ ***கண்ணன்:*** தேவதாந்தரங்கள் தரும் பலன்கள் மேன்மேலும் கஷ்டத்தை ஏற்படுத்தும். தவிர அவர்களால் ஒரு போதும் மோக்ஷம் தரமுடியாது. பொதுவில் சற்று ஆராய்ந்தே பலன் தருவதை நான் பழக்கமாக உடையவன் என்றாலும், சரணாகதி விஷயத்தில் அவ்வாறு நடக்க மாட்டேன். அவர்கள் கேட்ட ஸமயத்திலேயே பலனளிப் பேன். இது என் வ்ரதம். ராமாவதாரத்தில் காகத்திற்கும், விபீஷணனுக்கும், கண்ணனாக த்ரௌபதிக்குப் புடவை சொரிந்தும் உடனேயே காப்பாற்றியதை நினைவில் கொள்.

❖ ***அர்ஜுனன்:*** *கண்ணா! நீ ஒத்தாரும் மிக்காரும் இல்லாதபடி எல்லோரிலும் உயர்ந்தவன். மிகவும் தாழ்ந்தவர்களுக்கும் பலன் தருவாயா?*

❖ ***கண்ணன்:*** *ஜீவர்கள் எப்போது வைகுந்தம் வந்து என்னை அடைவார்கள் என்று ஆவலுடன் நான் காத்துக் கொண்டிருக்கிறேன். நான் மோக்ஷம் தருவது ஜீவர்களுக்கு என்ற எண்ணத்தில் அன்று, எனக்காகத் தான் (என் ப்ரீதிக்காகவே) அவர்களை அழைத்துக் கொள்கிறேன். ஆக எனக்காகச் செய்யும் கார்யமாவ தால் உயர்வு-தாழ்வு பார்ப்பதில்லை. ராமாவதாரத்தில் உயர்வு தாழ்வு பாராமல் அயோத்தியில் இருந்த மனிதர், செடி, மிருகம் யாவர்க்கும் நற்கதி தந்தேனே. உலகிலும் ஒரு அரசன் கிளியை வளர்க்கிறான். தன் குழந்தைக்குப் பால் ஊட்டும்போது கிளிக்கும் பால் ஊட்டுகிறான். அது கிளியின் நன்மைக்காக என்றில்லாமல் தன் ஸந்தோஷத்திற்காகச் செய்கிறான். அதுபோல சரண மடைந்த ஜீவர்களுக்கு மோக்ஷம் தருவது எனக்குப் ப்ரியமாகையால் உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்ற*

பேச்சுக்கே இடமில்லை. யாவருக்கும் அடைக்கலமாக இருந்துக் கொண்டு நன்மை செய்யத் தயாராக இருக்கிறேன்.

(ஸ்ரீ ராமானுஜரின் த்யானம் கலைகிறது.) ஆச்சானே பரம ரஹஸ்யமானதால் சரணாகதியை ஆழ்வார் முதல்பத்து இரண்டாம் திருவாய்மொழியில் உபதேசித்தது போல, நாமும் இவ்விஷயத்தை பகவானிடமிருந்து கேட்டு உமக்குத் தந்தோம். உம்மூலம் இந்த ரஹஸ்யம் பரம்பரையாகப் பரவிப் பாரோர் உய்யும்படி ஆகும் என்பது நிச்சயம்.

ஆச்சான்: தந்யோஸ்மி - அநுக்ருஹீதோஸ்மி ❂

## காலத்தில் ஸந்த்யாவந்தனம் பண்ணுவது விசேஷம்

ஒரு நாள் மாலை கோயில் புஷ்கரணிக் கரையில் உட்கார்ந்து இருவர் பேசிக் கொண்டு இருந்தனர். அப்போது ஸ்ரீ நாவல்பாக்கம் ஸ்வாமி அநுஷ்டானங்களை முடித்துக் கொண்டு ஏள்ளியாயிற்று. அங்கு இருந்தவர்களைக் கூப்பிட்டு 'காலமோ ஸந்த்யாகாலம். இடமோ புஷ்கரணிக்கரை. இப்படியிருக்கும் போது காலத்தில் ஸந்த்யா வந்தனத்தைப் பண்ணிவிட்டு பிறகு எவ்வளவு காலமானாலும் வார்த்தையாடலாமே. காலை ஸந்த்யாவந்தனம் தான் தூக்கத்தினால் காலத்தில் பண்ண முடியாது போய் விடுகிறது. மாலை ஸந்த்யாவந்தனத்தையாவது காலத்தில் செய்யலாமே. புஷ்கரணி கரையில் ஸந்த்யா காலத்தில் இப்படி பேசுவது மஹாபாபம். உடனே ஸந்த்யாவந்தனத்தைப் பண்ணுங்கள். சிலபேர் பகலிலோ இரவிலோ போஜனத்திற்கு முன் காலந்தான் ஸந்த்யாகாலம் என்று நினைத்துக் கொண்டு அநுஷ்டிக்கி றார்கள். அது மிகவும் தப்பு. சரியான காலத்தில் அனுஷ்டிப்பது தான் விசேஷம்' என்று ஸாதித்தபடி.

ஸ்ரீ பரகால ஸ்வாமி (அபிநவ ரங்கநாத ப்ரம்மதந்த்ர பரகால ஸ்வாமி) எப்படிப்பட்ட மஹான்க ளுடனே, லௌகிகப் ப்ரமுகர்களுட னே வார்த்தை சொல்லிக் கொண்டு இருந்தாலும் ஸந்த்யா காலம் வந்தவுடனே அப்படியே நடுவில் விட்டு விட்டு அனுஷ்டானத்திற்கு ஏள்ளியாகிவிடும் என்பது ஸுப்ர ஸித்தம்.

குறிப்பு: 'ஸந்த்யாவந்தனம் பண்ணுகிறவர்கள் தானே காலத்தில் பண்ண வேண்டும். பண்ணாதவர்களுக்கு என்ன அதைப்பற்றி' என்று சொல்லக்கூடாது. ஸந்த்யாவந்தனம் நித்யம் பண்ணவேண்டிய கார்யமாகையால் அதை விடாமல் அனுஷ்டிக்க வேண்டியதவசியம். அப்போது தான் எம்பெருமானுடைய நிக்ரஹம் நம் மேல் பிறக்காது. எம்பெருமான் அநுக்ரஹத்தைப் பெற எல்லோரும் நித்யம் விடாமல் ஸந்த்யாவந்தனத்தைச் செய்யவேண்டும்.

*இம்மாத பெட்டிச்செய்திகள் தொகுப்பு:*
*நன்றி: தூப்புல் மலர்*

# குரங்கும், பூனையும்

*(குரிச்சி ஸ்ரீ நாராயணன், அசோக்நகர், சென்னை)*

ஸ்ரீவைஷ்ணவ ஸமூஹத்திற்கு ஒப்புயர்வற்ற தலைவராக ஸ்ரீ ராமாநுஜர் விளங்குகின்றார். விசிஷ்டாத்வைத ஸித்தாந்தமானது ராமானுஜதர்சனம் என்றே வழங்கப்படுகிறது.

நம் ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாயத்ததில் இருவிதக் கொள்கைகள் இருப்பதாகப் பலர் இதர ஸித்தாந்திகள் உட்படக் கூறிவருவது அனைவரும் அறிந்ததே. அதாவது **மர்கட** (குரங்கு) **ந்யாயம், மார்ஜார** (பூனை) **ந்யாயம்** என்பதாகும்.

## இவ்விரு ந்யாயங்களையும் சற்று விளக்குவோம்.

1. **மர்கட ந்யாயம் :-** குரங்குக் குட்டி தாயை நன்கு பற்றிக் கொள்ளும். தாய்க் குரங்கு கிளைக்குக் கிளை தாவினாலும் குட்டியானது தான் கெட்டியாகப் பற்றித் தாயுடன் கூடச் செல்லும். இங்கு குட்டியின் பிடிப்பு - முயற்சியானது குறிப்பிடப்படுகிறது. அதுபோல நாமும் பகவானை ஶரணாகதி செய்து கெட்டியாகப் பிடித்துக் கொண்டால் பகவான் நம்மை அநுக்ரஹிப்பான் என்பது இந்த **மர்கட ந்யாயம்** மூலம் கூறப்படும் விஷயம்.

2. **மார்ஜார ந்யாயம் :-** தாய்ப்பூனை தன் குட்டியைத் தன் வாயினால் கவ்வி ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு அழைத்துச் செல்லும். இங்குப் பூனைக் குட்டியின் முயற்சி இன்றி தாயே அழைத்துச் செல்வது போல, நம் முயற்சி இன்றி பகவானே நம்மை அழைத்துச் செல்வது உணர்த்தப்படுகிறது. அதாவது நாம் முயற்சிக்காமல் அவனது அருளையே எதிர்நோக்குவது என்பர்.

இவ்வுதாரணங்களில் தாய் ஸ்தானத்தில் பகவானும், குட்டி ஸ்தானத்தில் ஜீவனும் கொள்ளப்படுவர். இவ்விருவித

உதாரணங்களையும் கூறி ஸம்ப்ரதாயமும் இருவகை என உலகில் வழங்கப்பட்டு வருகிறது.

எம்பெருமானார் வழியில் அணுகிப் பார்த்தால் உண்மையில் இருவித உதாரணங்களுமே நமக்கு அவஶ்யம். ஒன்றை ஏற்று ஒன்றைப் புறக்கணிப்பது பொருந்தாது என்பதை அறியலாம். இரண்டும் சேர்ந்தது தான் ஸ்ரீ ராமானுஜரின் திருவுள்ளம் என்பது அம்மஹான் அருளிய ஸ்ரீபாஷ்யத்தில் தெளிவாக உள்ளது. அதாவது-

**நாயமாத்மா ப்ரவசநேந லப்ய: ந மேதயா ந பஹுநா ஶ்ருதேந । யமேவைஷ வ்ருணுதே தேந லப்ய: தஸ்யைஷ ஆத்மா விவ்ருணுதே தநூம் ஸ்வாம் ॥** என்கிற **கட / முண்டக உபநிஷத்** வாக்யத்தை விளக்கி உடையவர் பொருள் கூறுகையில் **ப்ரியதம ஏவ ஹி வரணீயோ பவதி யஸ்யாயம் நிரதிசயப்ரிய: ஸ ஏவ அஸ்ய ப்ரியதமோ பவதி. ப்ரியோ ஹி ஞாநிநோத்யர்த்தம் அஹம் ஸ ச மம ப்ரிய: - தஸ்ய ச வசீகரணம் தச்சரணாகதிரேவ** என்று ஸ்ரீபாஷ்யத்தில் அருளியுள்ளார். மேலும் கத்யத்திலும், **அணுகில் அணுகும், புகலொன்றில்லா அடியேன்** முதலிய ஸ்ரீ ஸூக்தி களிலும் இவ்வர்த்தமே விளக்கப்படுகிறது. அதாவது பரமாத்மாவிடம் யார் அதிக ப்ரீதி வைக்கிறானோ அவனே பகவானுக்கு மிகவும் வேண்டியவன் ஆகிறான். அப்படிப்பட்டவனையே பகவான் அநுக்ரஹிக்கிறான் என்றும், பகவானை வசீகாரம் (நம்மை அநுக்ரஹிக்கும்படி) செய்வதற்கு ஶரணாகதி ஒன்றே வழி என்றும் கூறுகிறார் நம் யதிராசர்.

ஆக, எம்பெருமானார் திருவுள்ளப்படி நாம் அவனிடம் ப்ரீதியுடன் சரணடைந்தால் (குரங்குக்குட்டி தாயைப் பிடிப்பதுபோல) அவன் தாய்ப்பூனையாக இருந்து நமக்கு அருளி நம்மை வைகுண்டத்திற்கு அவனே அழைத்துச் செல்கிறான். ப்ரபன்னனுக்கு உயிர் பிரியும் போது பகவானை நினைக்கவேண்டிய கட்டாயமில்லை என்பதை திருக்கச்சி நம்பிகளின் ஆறு வார்த்தையாலும், **ஸ்ரீ வராஹ சரம ஶ்லோகத்**தாலும் அறியலாம். பகவானே அமானவனாக (வித்யுத் புருஷன்) இருந்து அர்ச்சிராதி வழியாக முக்தனை நடத்திச்

செல்கிறான். இது தாய்ப்பூனை, குட்டியை இடம் மாற்றம் செய்வதற்கு ஒப்பாகும்.

எனவே **மர்கட** (குரங்கு) **மார்ஜார** (பூனை) **ந்யாய**ங்கள் இரண்டும் வெவ்வேறு வழி அல்ல. இரண்டும் சேர்ந்ததே ராமானுஜ தர்சனம் எனத் தோன்றுகிறது. ஒன்று (மர்கடம்) ஜீவன் இருக்கவேண்டிய நிலையையும், இன்னொன்று (மார்ஜாரம்) பகவான் அநுக்ரஹிப்பதையும் கூறுகிறது.

வேதங்களுக்குப் பலர் பலவாறு பிரித்து முரண்பட்ட பொருள் கூறியதை மாற்றி ஸமரஸப்படுத்தி ஒற்றுமை ஏற்படுத்தியவர் நம் ராமாநுஜர். பேத, அபேத ச்ருதிகளைக் கடக ச்ருதி கொண்டு ஒரே அர்த்தமாகக் கூறிய ஸ்ரீபாஷ்யகாரரின் திருவாக்கு இவ்விஷயத்திலும் (மர்க்கட, மார்ஜார ந்யாயத்திலும்) இவ்வாறே ஒற்றுமையைக் கூறுவதாக அமைந்துள்ளதாகத் தோன்றுகிறது. இரண்டும் சேர்ந்ததே ஸ்ரீ வைஷ்ணவமாகும்.

| | |
|---|---|
| பெரும்பாலும் யாருமே பிறரிடமென்றால் இல்லாத தோஷங்களையும் இருப்பதாகக் காண்கின்றனர். குணங்கள் இருந்தாலும் அவற்றைக் காண்பதில்லை. தன்னிடமென்றால் இதற்கு நேர்மாறும். (இல்லாத குணங்களையும் இருப்பனவாகக் காண்பர். இருக்கும் தோஷங்களையும் காண்பாரல்லர். மோஹமென்கிற மையின் மான்மியம் இத்தகையதாம்.) ஸ.ஸூ 1 - 63. | இன்ப வெள்ளங்களும் துன்ப வெள்ளங்களும் ஒன்றின்பின் ஒன்றாக முறை தவறாமல் வரும். அந்தந்த ஆற்று வெள்ளத்தில் ஒன்றின் தேசகாலத்தை மற்றொன்றுக்காக மாற்றுவதோ, ஒன்றை வேண்டாமென்று கொடுத்துவிட்டு வேறொன்றையே பெறுவதோ, ஒன்றையும் பெறாமல் விலக்குவதோ எப்பொழுதும் இல்லை. இப்படி வெள்ளத்தில் வீழ்ந்தவனையும் தூக்கி பகவான்ஸந்தோஷப்படுகிறான். ஸ.ஸூ 1 - 68. |